Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/2278)


முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 பங்குனி 12 திங்கட்கிழமை (25.03.2013) பக்கங்கள் 20 ஓசை – 176







பங்குனித் திங்கள்



13







# இலங்கைக்கு எதிரான பிரேரணை தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் ஜெனிவா அமர்வின் போது கொண்டுவரப்பட்ட பிரேரணை தொடர்பாக சர்வதேச நாடுகளுக்கு, தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சின் பொதுத்தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் பெரேரா தெரிவித்துள்ளதாவது,

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் அமெரிக்கத் தீர்மானம் வாக்கெடுப்பிற்கு வந்தவேளை, சபையில் இருந்தும் வாக்களிப்பில் கலந்துகொள்ளாத ஜப்பான் உட்பட்ட நாடுகள் முக்கிய இடம்வகிக்கின்றன.

இந்த நாடுகளுக்குப் பிரேரணை தொடர்பாக விளக்கமளிக்கப்பட உள்ளது.

அத்துடன் இவ்வாறான அழுத்தங்களை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்வதற்கு முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் குறித்த நாடுகளுடன் கலந்துரையாட எதிர்பார்த்துள்ளோம்.

அத்துடன் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு வாக்களித்த அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுடன் கலந்துரையாடி இது குறித்து மீண்டும் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இலங்கைக்கு வருகை தருகின்ற அல்லது இலங்கையிலுள்ள வெளிநாட்டு அதிகாரிகளுடன்

(19) ஆம் பக்கம் பார்க்க

## நவநீதம்பிள்ளையின் செயற்பாடு ஐ.நா. செயலரிடம் முறையீடு

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் செயற்பாடுகளுக்கு எதிராக ஐ.நா. செயலாளர் பான் கீ மூனிடம் அரசாங்கம் முறைப்பாடு செய்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கான தனது விஜயத்தை இழுத்தடிப்பது தொடர்பிலேயே இலங்கை அரசாங்கம், ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம் முறைப்பாடு செய்துள்ளது.

ஜெனிவா கூட்டத்தொடரில் கலந்துகொண்ட ஐ.நா.வுக்கான

(19) ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் சம்பள நிலுவை, பதவி உயர்வு இல்லை
# தொழிற்சங்க நடவடிக்கைக்கு தயாராகும் இலங்கை ஆசிரியர் சங்கம்

வடமாகாண ஆசிரியர்களுக்கு வழங்கப்படவேண்டிய சம்பள நிலுவைகள் மற்றும் பதவி உயர்வுகள் வழங்கப்படாமையினால் தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

முல்லைத்தீவு, மடு, துணுக்காய், கிளிநொச்சி, வவுனியா வடக்கு உட்பட்ட வடமாகாண ஆசிரியர்களுக்கான நிலுவை சம்பளங்கள் எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை என இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

அந்தவகையில், 2005 முதல் 2011 வரையிலான காலப் பகுதியில், சம்பள நிலுவைகள் மற்றும் பதவி உயர்வுகள் வழங்கப்படாது, வடமாகாண கல்வி அமைச்சினால் 2005/4. 2008/45. 2006/6 அதன் பின்னர் 2011/30.

(19) ஆம் பக்கம் பார்க்க

# சுயாதீன விசாரணை கோரிக்கை அரசு தொடர்ந்தும் நிராகரிக்கும்
## புதுடில்லி பாதுகாப்பு ஆய்வாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

போரின் போது இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்ற சர்வதேசத்தின் கோரிக்கையை அரசாங்கம் தொடர்ந்தும் நிராகரிக்குமென புதுடில்லி பாதுகாப்பு ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கொழும்பு ஆங்கில ஊடகமொன்றில் புதுடில்லியிலுள்ள ஊடகவியலாளரான வெங்கட்நாராயர் எழுதியுள்ள கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட்டால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, படைத்துறைச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் 14 படை உயரதிகாரிகள் வகித்த முக்கிய

(19) ஆம் பக்கம் பார்க்க

# தமிழக ஆர்ப்பாட்டங்களால் தமிழ் – சிங்கள உறவில் பாதிப்பு
## தயாமாஸ்ரர் தெரிவிப்பு



தமிழகத்தில் இடம்பெறுகின்ற ஆர்ப்பாட்டங்களால், இலங்கையில் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையிலான உறவில் பாதிப்பை ஏற்படுத்துமென புலிகளின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்ரர் தெரிவித்துள்ளார். தமிழர்களுக்கு ஆதரவு வழங்குவது என்ற போர்வையில், தமிழக கட்சிகளுக்கு இடையில்

(19) ஆம் பக்கம் பார்க்க




# சுதந்திரமான விசாரணை அவசியம் தவறின் சர்வதேச பொறிமுறை
## மீளவும் எச்சரிக்கிறது அமெரிக்கா



ஜெனிவா தீர்மானம் ஒரு சுதந்திரமான, நம்பகத்தன்மையுடைய புலன்விசாரணை குறித்து

போர்க்கால மனித உரிமை மீறல்கள் குறித்து சுதந்திரமான, நம்பகத் தன்மையுடைய விசாரணையை இலங்கை நடத்தத் தவறினால், சர்வதேச சமூகம் அங்கு ஒரு சர்வதேச பொறிமுறையை வலியுறுத்தும் என்று அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலர் றொபேட் பிளேக் எச்சரித்துள்ளார். தற்போதைய

(19) ஆம் பக்கம் பார்க்க

# புது வருடத்திற்கு முன்னர் சாதாரணதர பெறுபேறு

எதிர்வரும் தமிழ், சிங்கள சித்திரை புத்தாண்டுக்கு முன்னர், கடந்த வருடம் இடம்பெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் புஸ்பகுமார தெரிவித்தார். 2012 ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர சாதாரணதர பரீட்சைகள் இடம்பெற்ற காலத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு அனர்த்தம் காரணமாக சில பாடங்களுக்கான பரீட்சைகளில் ஏற்பட்ட காலதாமதம் போன்றன பரீட்சைப் பெறுபேறுகள் தாமதமாக வெளிவரக் காரணம் என்றார்.

# அரசியல் விமர்சனங்களுக்கு மத்தியிலும் மக்கள் பணிகளால் நிமிர்ந்து நிற்கிறோம்



அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்டவர்களின் விமர்சனங்களுக்கு மத்தியில் நாம் மக்களுக்கான பணிகளினூடாக நிமிர்ந்து நிற்கின்றோம் என ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தில் நடைபெற்ற கிராமிய உழைப்பாளர் மையத்தால் முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், தமிழ்மக்கள் கடந்த கால இன்னல்களில் இருந்து விடுபட்டு இன்று அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றமடைந்து வருவதுடன், மக்களின் நலனில் அக்கறை கொண்டு நடைமுறைச் சாத்தியமான வழியில் தமது அரசியல் பணிகளை முன்னெடுத்துச் செல்பவர்களை இனங்கண்டு மக்கள் தமது பயணத்தை தொடர்வதன் மூலம் இப்பிரதேசத்தின் அபிவிருத்திப் பணிகளை இலகுபடுத்த முடியும்.

இவ்வாறே இப்பிரதேச மக்களின் கோரிக்கைக்கு இணங்க மயானப் புனரமைப்பிற்காக 3 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படும் எனவும், எம்மீது காழ்ப்புணர்ச்சி கொண்டவர்கள் எம்மை விமர்சிக்கவே செய்வர். இவ்வாறான விமர்சனங்களுக்கு மத்தியிலும் நாம் இன்று எழுந்து நிற்கின்றோம் என்றால் மக்கள் மத்தியில் எமது பணிகள் சென்றடைந்துள்ளதுடன், மக்களின் நியாயமான தெரிவுமே இதற்கெல்லாம் காரணமாகுமெனத் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில், கலந்து கொண்டு உரையாற்றிய, ஈ.பி.டி.பி.யின் தென்மராட்சி பிரதேச இணைப்பாளர் தூசைமுத்து அலெகசாண்டர்(சாள்ஸ்),மக்களின் கடந்த கால தவறான தெரிவுகளால் இப்பிரதேச அபிவிருத்திப் பணிகள் முடங்கிய நிலையிலே காணப்படுகின்றன.

நெருக்கடியான காலகட்டங்களில் கூட பின் நிற்காது நாம் இப்பிரதேசத்தில் பல்வேறு அலுவலகங்களை நிறுவி மக்களை மீள்குடியேற்றும் செயற்பாடுகளுடன், அவர்களிற்கான வாழ்வாதார உதவித்திட்டங்கள், மின்சாரம், குடிநீர் மற்றும் பாடசாலைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் கைதடிமத்தி வளர்மதி சனசமூக நிலைய ஸ்தாபகர் திரவியம், கிராமிய உழைப்பாளர் மையத் தலைவர் ராஜசிங்கம் சிவலிங்கம் மற்றும் கைதடி பிரதேச சனசமூக நிலைய உறுப்பினர்கள், கிராம மாதர் அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# பங்குனித்திங்கள் உற்சவம் இன்று 2 ஆவது வாரம்

பங்குனித்திங்கள் 2ஆவது வாரம் இன்று சிறப்பாக இடம்பெறவுள்ளது. சாவகச்சேரி, நுணாவில் குளம் கண்ணகை அம்மன் ஆலயம், விளைவேலி துர்க்கை அம்மன் ஆலயம் என்பனவற்றில் இப்பங்குனித் திங்கள் உற்சவம் இடம்பெறுகின்றது. காலை அபிஷேக ஆராதனைகளும், மதியம் நீர்க்கஞ்சி வார்ப்பு, அன்னதானம் என்பன வழங்கப்படும். இப்பங்குனி உற்சவத்தை முன்னிட்டு ஆலயத்தை அண்டிய பகுதிகளில் தண்ணீர் பந்தல் வசதிகளும் செய்யப்பட்டுள்ளது. (43)

# ஒன்றியம் அங்குரார்ப்பணம் செய்ய சிகைஒப்பனையாளர் சங்கம் முடிவு

(குருநகர்)

யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம் கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் தவிசாளர் செல்லையா ஸ்ரீராஜன் தலைமையில் ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) உடன் சந்திப்பினை மேற்கொண்டு தமது கோரிக்கைகளை விடுத்தனர்.

மேற்படி கோரிக்கைகள் சம்பந்தமான முடிவுகளை ஒருவார காலத்துள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்த முன்னிலையில் ஆராய்ந்து முடிவு எடுக்க இணக்கம் காணப்பட்டது.

அதற்காக யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி, வலி. வடக்கு, வலி.மேற்கு, தீவகக் கிளைச் சங்கங்களை ஒன்றிணைத்து பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தி ஒன்றியம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்து அதற்குக் கீழே சகல சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களையும் நிர்வகிக்கும் நடைமுறையைக் கொண்டுவருவதற்கும் சந்திப்பில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. (68)


# வலிகாமம் கிழக்கில் பிரதேச தொழிற்சந்தை

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கடந்த வெள்ளிக்கிழமை படித்து விட்டுவேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை பிரபல தனியார் நிறுவனங்களில் பெற்றுக் கொடுக்கும் நோக்கமாக பிரதேச தொழிற்சந்தை கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெற்றது. இத் தொழிற்சந்தையில் 12 பிரபல தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்டன. இப்பிரதேச தொழிற் சந்தையில் 420 இற்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டு தங்கள் சுயவிபரக்கோவையினை தொழில் நிறுவனங்களிடம் கையளித்துள்ளனர். இவர்களுக்கான நேர்முகப்பரீட்சை நடத்தி தகுதியானவர்களுக்கு தொழில் வழங்கப்படலாம் எனத் தெரியவருகிறது. (08)

# தாவடியில் திருடப்பட்ட விக்கிரகங்கள் சுன்னாகம் பொலிஸாரினால் மீட்பு

(திருநெல்வேலி)

தாவடி முருகன் கோவிலில் களவாடப்பட்ட முருகன், வள்ளி, தெய்வானை ஆகிய ஐம்பொன்னிலான மிகவும் பெறுமதிமிக்க விக்கிரகங்கள் மீட்கப்பட்டதுடன் சந்தேகநபரும் கைது செய்யப்பட்டார்.



கடந்த புதன்கிழமை இரவு இவ்விக்கிரகங்கள் திருட்டுப் போயின. இரவு இரண்டு மணியளவில் விக்கிரகங்களைத் திருடி அவற்றைத் துணியொன்றினால் மூடித்தோளில் வைத்து சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது எதிரே வந்த வாகன வெளிச்சத்தில் தனது முகத்தை மறைப்பதற்காக அத்துணியால் முகத்தை மூடிய வேளை விக்கிரகங்கள் வெளியே தெரிந்ததாகவும் இதனையடுத்துத் திருடன் அடையாளப்படுத்தப்பட்டு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து திருடன் சுன்னாகம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டான். யாழ்ப்பாணம் கோம்பயன்மணல் மயானத்துக் கருகில் உள்ள காணியொன்றுக்குள் விக்கிரகங்கள் புதைத்து வைக்கப்பட்டிருந்தன.

வெளி மதிலால் உள்ளே இறங்கிய திருடன் வடக்கு வாசல் கதவுப் பூட்டை உடைத்துக் கோவிலுக்குள் நுழைந்து விக்கிரகங்களைத் திருடிய பின்னர் பூட்டை முன்னர் இருந்த மாதிரியே பூட்டிச் சென்றுள்ளான் விக்கிரகங்கள் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளியன்று சுன்னாகம் பொலிஸார் திருடனை கோவிலடிக்குக் கூட்டி வந்த போது பெருமளவிலானபொது மக்கள் அவ்விடத்தில் கூடினர். திருட்டுப்போன விக்கிரகங்கள் மீண்டும் கிடைத்தமை பற்றி முருகன் அடியார்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

தாவடிப்பகுதியைச் சேர்ந்த சுமார் 27 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டவராவார். (137)

# வாழ்வாதாரத்தை மேம்படுத்த இளம் விதவைகளுக்கு நிதியுதவி

(திருநெல்வேலி)

45 வயதுக்குட்பட்ட இளம் விதவைகளுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கோடு ஒவ்வொருவருக்கும்* தலா பத்தாயிரம் ரூபா பணம் நன்கொடையாக வழங்குவதற்கு நல்லூர் பிரதேச சபை தீர்மானித்துள்ளது. இவர்கள் நல்லூர் பிரதேசத்துக்குட்பட்டவர்களாக இருப்பதுடன் தமது பகுதிக் கிராம சேவகர் மற்றும் சபை உறுப்பினர் ஆகியோரின் உறுதிப்படுத்தலுடனான கடிதத்தை சமர்ப்பித்தல் வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் விதவைகள் மற்றும் வலுவிழந்த உழைக்க முடியாத நிலையில் உள்ள கணவன்மார்களை உடைய குடும்பத்தவர்களின் பிள்ளைகளுக்கான கல்விச் செயற்பாடுகளுக்காகவும் ரூபா பத்தாயிரம் ரூபா பணம் வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

மற்றும் சபை எல்லைக்குட்பட்ட வறுமைக் கோட்டுக்குள் உள்ள 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களைக் *கௌரவிக்கும் நிகழ்வு ஒன்றினை நடாத்தி அவர்களுக்கு உடுபுடவைகள் மற்றும் பொருட்களை வழங்குவது எனவும் வறுமைக் கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்கு மாதாந்தம் கற்றல் உபகரணங்களைக்கொடுப்பது எனவும் இருதய அறுவை சிகிச்சை, உறுப்பு மாற்று சத்திர சிகிச்சை போன்ற மருத்துவ தேவைகளை நிறைவேற்றுவதற்கு இருபத்தையாயிரம் ரூபா பணம் வழங்குவது எனவும் இவற்றுக்கான அனுமதியை சபையில் பெற்றுக் கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத் தீர்மானங்கள் கடந்த வாரம் நடைபெற்ற நல்லூர் பிரதேச சபையின் வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளன. (137)

# மணவாளக் கோல உற்சவம்

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி கோவில் (பன்றிக்கோட்டுப்பிள்ளையார் கோவில்) மணவாளக்கோல உற்சவம் நடைபெறவுள்ளது.

இத்திருவிழாவை முன்னிட்டு விநாயகப்பெருமானுக்கு அஷ்டோத்திர சக சங்காபிஷேகமும் விசேட பூசையும் சித்தி, புத்தி சமேத விநாயகப்பெருமானுக்குத் திருக்கல்யாண வைபவமும் நடைபெறும்.

பிற்பகல் 5.30 மணிக்கு பிரப்பங்குளம் வீதி மானிப்பாய் வீதி, ஓட்டுமடம் வீதி, காங்கேசன்துறை வீதி வழியாக சுவாமி வெளிவீதி உலாவரும் காட்சி இடம்பெறும். (10)





முள்ளியவளை சமூக ஆர்வலர்களும் முள்ளியவளை பொலிஸாரும் இணைந்து மாஞ்சோலை மாவட்ட வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள இரத்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக நேற்று தண்ணீரூற்று சி.சி.தமிழ் கலவன் பாடசாலையில் வைத்து இரத்த தானம் வழங்கியுள்ளனர். இதன்போது வைத்தியர் இரத்தப் பரிசோதனை மேற்கொள்வதனையும் இரத்ததானம் வழங்குவதையும் காணலாம். (படங்கள்: கா.சிவகுமார்)

# தேவைகள் நிறைவேற வேண்டுமாயின் சந்தர்ப்பத்தை சாதகமாக்க வேண்டும்

## - அமைச்சர் ரிசாட் பதியுதீன் -

(வவுனியா)

எமது தேவைகளை இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி செயற்படுத்தாவிட்டால் இன்னும் பல தசாப்தங்கள் துன்பங்களும் துயரங்களும் தீராத துன்பியல் நிலை காணப்படும் என வர்த்தக கைத்தொழில் அமைச்சர் ரிசாட் பதியுதீன் தெரிவித்தார்.

வவுனியா இலைகல்லுப் பேர்ட்டகுளம் வீரமாமுனிவர் வித்தியாலயத்தை கடந்த வெள்ளிக்கிழமை மாலை திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்,

தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர்,

இந்தத் துன்பங்களுக்கும் அழிவுகளுக்கும் நாமும் ஏதோ ஒரு வகையில் காரண கர்த்தாவாக இருந்திருக்கலாம். நாங்கள் இந்தச் சூழலில் புத்திசாதுரியமாக நடந்து கொள்ளவேண்டும்.

எமக்கு தேவைகள் இருக்கின்றன, பிரச்சினைகள் இருக்கின்றன. ஆனால், 30 வருட போராட்டம் எந்த ஒரு தீர்வை [illegible] எதிர்பார்ப்பையும் எமக்கு பெற்றுத்தரவில்லை. இறுதியில் அழிவுகளும் இழப்புகளும் மறக்க முடியாத வேதனைகளும் தான் எங்களுக்கு முன்னால் இருக்கின்றது.

எனினும், எமது கடந்த கால அனுபவத்தைக் கொண்டு எமது பிள்ளைகளின் எதிர்காலத்தை சிறப்பாக்கி கல்வியையும் வேல்லைவாய்ப்பையும் பெற்றுக் கொடுத்து பொருளாதாரத்தில் வளர்கின்ற தார்மீகப் பொறுப்பு அனைவருக்கும் இருக்கின்றது.

தற்போது, பிள்ளைகளின் கல்வியைப்பற்றி சிந்திக்கின்ற தொழில் வாய்ப்பைத் தேடுகின்ற தனக்கான வீட்டை அமைக்கின்ற தனது விவசாய குளத்தை புனரமைக்கின்ற ஒரு நிலைப்பாட்டில் நாம் இருக்கின்றோம்.

இழந்த இழப்பு எல்லோருக்கும் ஒன்றுதான் எனவே நாம் ஒன்றுமையாக வாழ வேண்டும். எனவே மாணவர்கள் தமது கல்வியின் மூலமே உயர்நிலையை அடையமுடியும் எனத்தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அரச அதிகாரிகள், கல்விப் பணிப்பாளர்கள் பலர் கலந்துகொண்டனர். (160)

# ஒன்றுகூடல் நிகழ்வு

(வவுனியா)

வவுனியா மாவட்ட சர்வோதய நிலையத்தின் வருடாந்த தேசோதய ஒன்றுகூடல் நிகழ்வு நேற்றுமுன்தினம் வவுனியா தமிழ்ப் பிரிவு மட்டத்தில் இடம்பெற்றது.

காலை 9.00 மணிக்கு வவுனியா மாவட்ட சர்வோதயத்தின் இணைப்பாளர் சு.உதயகுமாரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.

இதன்போது, வவுனியா மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஜெ.ஜெயக்கொடி பொருளாதாரம் தொடர்பான கருத்துக்கள் அடங்கிய வளப்பகிர்வினையும் மெய்யறிவு தொடர்பாக ஆன்மிகப் பேச்சினை கே.சிவகஜன் வழங்கியிருந்தனர்.

இந் நிகழ்வில் வவுனியா மாவட்ட தேசோதய சபை அங்கத்தவர்கள் மற்றும் கிராமசேவகர்கள் பாடசாலை அதிபர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (160)

# வருடாந்த மகோற்சவம்

வண்ணை ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு அபிஷேகம், 9 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும், 11 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து, பிற்பகல் 3.30 மணிக்கு கொடியிறக்கமும், தொடர்ந்து சண்டேஸ்வரி உற்சவமும் இடம்பெறும்.

# தீவகத்தில் ஆழமான குளங்களில் நீராடுவதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்து

தீவகப்பகுதிகளில் உள்ள அனேகமான குளங்கள் விவசாய தேவைகளினது பயன்பாட்டினைக் கருதியும், நல்ல குடிதண்ணீரை கிணறுகளில் தங்கச் செய்யும் நோக்குடன் புனரமைப்புக்கள் செய்யப்பட்டு ஆழமாக்கப்பட்டிருக்கின்றன.

இந்நிலையில், இந்தக் குளங்கள் தற்போது ஆழம்கூடிய நிலையில் தண்ணீர் அதிகளவில் நிரம்பி நிற்கின்றன.

இவ்வாறு நீர் நிரம்பிக் காணப்படும் குளங்களின் ஆழம் தெரியாத நிலையில் குளங்களில் குளிக்கச் செல்லும் பலர் நீந்தத் தெரியாத நிலையில் ஆழம் கூடிய இடத்திற்குச் சென்று, மீள முடியாத நிலையில் நீரில் மூழ்கி மரணமாகின்ற சம்பவங்களும் இடம்பெறுகின்றன.

அத்துடன், அனேகமாக சிறுவர்களும் இவ்வாறன குளங்களின் ஆழங்களைத் தெரியாத நிலைகளில் குளிக்கச் செல்கின்றனர்.


எனவே, பொது மக்களும், சிறுவர்களது பெற்றோர்களும் இவ்வாறான குளங்களில் சிறுவர்களைக் குளிப்பதற்கு அனுமதிகளை அளிக்க வேண்டாமெனத் தீவக விவசாய சம்மேளனத்தின் தலைவரும், வேலணைப் பிரதேசசபையினது உறுப்பினருமான தவபாலன் கேட்டுக் கொண்டுள்ளார். (05)

# கூடடம நடைபெறும இடம மாறறம


அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்க யாழ். மாவட்டக் கிளைக்கான அங்குராப்பண பொதுக்கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு யாழ்.கண்டி வீதி யில் அமைந்துள்ள வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டம் நாவலர் வீதியில் உள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (11)

# யாழ்தேவி எப்போது வரும்...? ஏன் இந்தத் தாமதம்!



வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மீள்கட்டுமானம் செய்யப்பட்டுவரும் ஓமந்தை தொடக்கம் யாழ்ப்பாணம் வரையான புகையிரதப் பாதையின் மீள்கட்டுமானப் பணிகள் நவீன முறையில், மிகத் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.



185 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில், ஓமந்தையிலிருந்து மாங்குளம் வரையில் முதற் கட்டப்பணியும், மாங்குளத்திலிருந்து பளை வரை இரண்டாவது கட்டப் பணியும், பளையிலிருந்து காங்கேசன்துறை வரை மூன்றாவது கட்டப்பணிகளுமாக புகையிரதப் பாதையின் நிர்மாணப் பணிகள் இந்தியாவின் தனியார் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கையில் பிரித்தானியரது ஆட்சிக் காலத்தில் ஏற்றுமதிகளை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட நெடுஞ்சாலைகளும், புகையிரதப் பாதைகளும் பல தசாப்த காலமாக புனரமைப்பு செய்யப்பட்டு பாவனைக்குட்படுத்தப்பட்டு வந்ததே தவிர அவை மாற்றி அமைக்கப்படவில்லை.

நாட்டில் நிலவிய யுத்தத்தால் முற்றாக அழிந்துபோன புகையிரதப்பாதை தற்போது இருந்ததைப் போன்றே மீண்டும் புனரமைக்கப்படாது, நவீன முறையில் மீள் கட்டமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், ஓமந்தையிலிருந்து மாங்குளம் வரையில் புகையிரதப் பாதை, பற்றைகள் அகற்றப்பட்டு கிரவல் மண்போட்டு உயர்த்தப்பட்டுள்ளதுடன், தற்போது பாதைக்கு மேலே கருங்கற் சல்லிகள் பரவும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

பாதைகளுக்கு இடையிடையே உள்ள சிறிய பாலங்களும் மீள்கட்டுமானம் செய்யப்பட்டு வருவதுடன், மாங்குளம் வரையிலான பாலங்களின் மீள்கட்டுமானப் பணிகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளன.

இந்தப் பணியில் பல பணியாளர்கள் ஈடுபட்டுள்ளதுடன், பல இயந்திரங்களும், வாகனங்களும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

கருங்கல் சல்லிகள் பரவும் பணிகள் முடிவடைந்ததும், தண்டவாளங்கள் , சிலிப்பர்க் கட்டைகள் பொருத்தும் பணிகள் நடைபெறவுள்ளதால், ஆங்காங்கே கருங்கல் சல்லிகள் என்பன குவிக்கப்பட்டுள்ளதுடன், ஏராளமான சிலிப்பர்க் கட்டைகளும் அடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, முன்னர் வளைவுகளாக இருந்த தண்டவாளப் பாதைகள் இப்போது புகையிரதம் வேகமாகப் பயணிக்கக்கூடிய வகையில், ஒரே நேராக அமைக்கப்படுகிறது.

இந்தத் தண்டவாளங்களைத் தனித்தனித் துண்டுகளாக ஆணிகளால் பொருத்தப்படாது, வீதியிலும் தண்டவாளத்திலும் பயணிக்கக்கூடிய விஷேட மின் பொறியியல் இயந்திரத்தின் உதவியூடாக அதியுயர் மின் அழுத்தத்தின் மூலம் உருக்கி நேராக ஒட்டிப் பொருத்தப்படுகின்றன.

தண்டவாளம் ஒட்டும் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளதால், அடுத்தகட்டமாக ஓமந்தையிலிருந்து தண்டவாளம் பொருத்தும் பணிகள் ஆரம்பமாகவுள்ளதாகவும், தண்டவாளங்களை உருக்கி ஒட்டப் பயன்படுத்தப்படும் விசேட பொறியியல் இயந்திரம் தண்டவாளத்தில் ஓடியவாறே அவற்றை ஒன்றுடன் ஒன்று ஒட்டி படிப்படியாக முன்னோக்கி நகரும் எனவும் இந்தப் பணிகளில் ஈடுபட்டிருந்த பணியாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

இந்தநிலையில், புகையிரதப் பாதையின் மீள்கட்டுமானப் பணிகளில் தாமதம் ஏற்படுவதாக இந்தப் பணிகளில் ஈடுபட்டுள்ள இந்திய நிறுவனத்தின் முகாமையாளர் குறிப்பிட்டுள்ளார்.


புகையிரதப் பாதையை உயர்த்துவதற்கும், அருகில் பரவுவதற்கும் தேவையான கிரவல் மண்ணைப் பெறுவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதால் புகையிரதப் பாதைகளின் மீள்கட்டுமானப் பணிகளை தொடர்ந்தும் வேகமாக முன்னெடுத்துச் செல்வதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, 2013 செப்டெம்பர் மாதமளவில் யாழ்ப்பாணத்திற்கு யாழ்தேவி இரயில் வரும் எனவும், அதற்கான வேலைத்திட்டங்கள் தற்போது துரித கதியில் நடைபெற்று வருவதாகவும் யாழ். இந்திய துணைத் தூதுவர் எஸ்.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஆக, 1990 இற்குப் பின், 23 வருடங்கள் கடந்த நிலையில் மீண்டும் யாழ்ப்பாணத்துக்குப் புகையிரதம் வரும்போது, நேரான புகையிரத்ப்பாதையில் அதிவேகமாக வரவுள்ளது.

இதனால், கொழும்புக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான போக்குவரத்துக்கான நேரம் மேலும் சுருங்குவதால், பயணிகளுக்கு இது மேலும் வரப்பிரசாதமாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் கொழும்பையும் யாழ்ப்பாணத்தையும் இணைக்கும் புகையிரதப் பாதை வவுனியாவில் இருந்து ஓமந்தை வரை மீள்கட்டமைப்புச் செய்யப்பட்டு, தற்போது வவுனியா நகரிலிருந்து ஓமந்தை வரையான புகையிரத சேவை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



தொகுப்பு: கார்த்திகா.
படங்கள்: சாந்தரூபன்.

மனிதனை மனிதனாக்குபவை உதவிகளும் வசதிகளுமல்ல. இடையூறுகளும் துன்பங்களுமே. - மாத்யூஸ்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## நாமேதான் தொடங்க வேண்டும்!

எப்போதும் அதிருப்தியுடனும், மனவருத்தத்துடனும், எதன்மீதாவது குறைப்பட்டபடியும் இருப்பது நம்மில் பலருக்கு வழக்கம். நம்மை யாரும் புரிந்துகொள்கிறார்களில்லை என்றோ, நம் தகுதிக்கேற்ற வேலை கிடைக்கவில்லை என்றோ, மற்றவர்களைப்போல் நமக்கு வாழ்வு அமையவில்லை என்றோ எப்போதும் கவலைப்பட்டபடியே மனதை வைத்துக்கொள்கிறோம். இதுபோல் திருப்தியற்ற மனம் உள்ளவர்களிடம் சந்தோஷமும் தங்குவதில்லை.

சந்தோஷத்திற்கும் திருப்திக்கும் நமக்குள்தான் எல்லைகள் இருக்கின்றன. எல்லைகளை நம் கட்டுப்பாட்டில் இல்லாமல் விரிவடையச் செய்துகொண்டே போனால், மனதில் மகிழ்ச்சியே வந்து சேராது. இருப்பதை விட்டுவிட்டு பறப்பதைப் பிடிக்க ஆசைப்பட்டபடி இருப்பவர்களுக்கு இருக்கின்றதையும் வாழமுடியாமலேதான் காலம் முடியும்.

வயதான உறவினர்கள் பலர், தன்பேரில் சொத்து எழுதி வைத்துவிட்டுப் போனபோதும், அதை அனுபவிக்க முடியாமல் அழுதுகொண்டிருந்த முல்லா கதை கேள்விப்பட்டிருக்கிறோம். அத்தனை சொத்துக் கிடைத்த .பிறகும், இனி சொத்து எழுதிவைத்துவிட்டுச் சாகக்கூடிய உறவினர்கள் யாருமில்லையே என்ற கவலை முல்லாவுக்கு.

கவலைப்படுவது என்று ஆரம்பித்தால் எல்லாவற்றிற்கும்தான் கவலைப்படலாம். அது வாழ்க்கையை சந்தோஷமாகவும் திருப்தியாகவும் வாழ்ந்துவிட்டுப் போக உதவாது.

தமிழ் மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினைக்கும் நாம் சர்வதேச நாடுகளையும் வருடந்தோறும் வரும் மகாநாடுகளின் முடிவுகளையும் எண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறோமே அல்லாமல், இந்த நாட்டுக்குள் தீர்த்துக்கொள்ளக் கூடிய வழிகள் பற்றிச் சிந்திக்காமலே வறட்டு வீம்புகளுடன் அப்பாவி மக்கள் மீது தொடர்ந்து கஷ்டங்களைச் சுமத்திக் கொண்டிருக்கிறோம்.

விமானத்திலேறி சர்வதேச அரசியல் அரங்கையெல்லாம் சுற்றி வந்துதான் எமது பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமா? பிள்ளையார் போல இங்கேயே புத்திசாலித்தனமாக நமக்கு வேண்டியதைப் பெற்றுக்கொள்ள முடியாதா? முடியாது என்று சொல்கிறவர்கள் என்ன முயற்சியைச் சமீப காலங்களில் செய்திருக்கிறார்கள்; செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதையும் சொல்ல வேண்டும்.

சிங்கள மக்கள் இனவாதச் சிந்தனைகளோடு இருக்கிறார்கள்; நாம் விரும்புவதைத் தர அவர்கள் ஒருபோதும் ஒப்புக்கொள்ளப் போவதில்லை என்று ஏதோ சிங்கள மக்கள்தான் உலகமகா கொடூரர்கள் – வீம்புக்காரர்கள் என்பதுபோல சொல்லிக் கொண்டிருப்பவர்களையே மக்களும் மறுபேச்சின்றி பாமரத்தனமாக நம்புகிறார்கள். இது தவறு.

இப்போதை விட தீவிரமாக இனமுரண்பாடு இருந்த காலத்தில்தான் தமிழ்மக்களுக்குத் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதையே தனது அரசியல்திட்டமாக வைத்து சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதித் தேர்தலில் வென்றார். அதுபோல் நமக்குத்தான் தீர்வு அவசியமென்றால், இந்த நாட்டுக்குள் மூவின மக்களும் இணங்கி வாழ்வதற்குரிய தீர்வொன்றினை ஏற்படுத்திக்கொள்ள நாம் அனைத்துத் தரப்பினரது பிரச்சினைகளையும் காதுகொடுத்துப் பேசத் தயாராக இருக்கிறோம் என்ற செய்தியை தமிழ்த் தரப்பிலிருந்து வெளிப்படுத்தியாக வேண்டும்.

தமிழ்ப் பெரும்பான்மை மக்களால் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகள் அந்த நல்லிணக்க செய்தியைச் சொல்பவர்களாக இருக்க வேண்டும். ஏனைய இனத்தவரிடமும் நியாயமாகச் சிந்திக்கக் கூடிய தரப்பினரையாவது வென்றாக வேண்டும். அவர்களும் தமிழ்ப் பெரும்பான்மையினரின் அபிலாசை இதுவே என்று தத்தம் சமூக மக்களிடம் பிரச்சாரம் செய்யத்தக்கதாக இருக்க வேண்டும்.

தமிழ்மக்களில் பெரும்பான்மையோர் அத்தகைய இணக்க சமிக்ஞைகளை வெளிப்படுத்தக்கூடிய பிரதிநிதிகளைத் தங்கள் தலைவர்களாகத் தேர்ந்துகொள்வார்களாக இருந்தால், அதன்பிறகு ஏனைய சமூகங்களைச் சேர்ந்த பெரும்பான்மையினரும் தமிழர்களுக்குத் தீர்வு கொடாதே என்று ஒருபோதும் சொல்லப்போவதில்லை.

இந்த யதார்த்த அணுகுமுறைதான் இங்கு பிரச்சினைகளைத் தீர்க்கும். - ஆசிரியர்

# சர்வதேச உறவுகளை வலுவாக்கும் அரசின் முயற்சிகளுக்கு ஆப்பு

அமெரிக்கத் தீர்மானம் காரணமாக சர்வதேச உறவுகளை வலுப்படுத்தும் இலங்கை அரசின் முயற்சிகள் தோல்வியில் முடிவடையும் வாய்ப்புக்கள் தோன்றியுள்ளன என்று பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் எச்சரிக்கை செய்துள்ளார்.

இலங்கை அரசு மீது சுமத்தப்பட்டுள்ள போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்படும் வரை இலங்கைக்கு சர்வதேசத்துடன் முன்னோக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வாய்ப்பில்லை என்று பிரித்தானியா அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

தங்காலையில் கடந்த வருடம் கொலை செய்யப்பட்ட பிரித்தானிய பிரஜையின் விசாரணைகள் தாமதமாவது குறித்து பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் சிமன் டான்சுக் இலங்கைப் பயணத்தின் பின்னர் சமர்ப்பித்த அறிக்கை மீதே அமைச்சர் இந்தக்கருத்தை வெளியிட்டார்.

இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பில் முழுமையான விசாரணைகள் நடத்தப்பட வேணடியது அவசியமானதாகும்.

இலங்கையில் முன்னாள் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணையின் போது நீதி பின்பற்றப்படவில்லை என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் நீதியான விசாரணை அவசியமானதாகும்.

அத்துடன், இறுதிப் போரின் போது இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பில் முழுமையான விசாரணைகள் அவசியம். இல்லையேல் இலங்கை மக்களுக்கு சர்வதேசத்துடன் முன்னோக்கி செல்வதில் கஷ்ட நிலையை தவிர்க்கமுடியாது என்று அலிஸ்டர் பேர்ட் குறிப்பிட்டுள்ளார்.

## தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ள இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) கலந்துகொள்ளவுள்ளார்.

இவ் ஒருங்கிணைப்புக் குழுக கூட்டத்தில் அரச திணைக்கள அதிகாரிகள், கிராம சேவையாளர்கள், பொலிஸார் எனப் பல தரப்பினரும் கலந்துகொள்ள உள்ளனர். தென்மராட்சிப் பகுதியில் நடைபெறும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் முன் வைக்கப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

# சூரியவெவ படுகொலை பின்னணி என்ன?

(கொழும்பு)

அம்பாந்தோட்டை சூரியவெவ மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியை பார்த்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த நபர் ஒருவர் கத்தியால் வெட்டப்பட்ட நிலையில் உயி ரிழந்துள்ளார்.

சூரியவெவ, மீகஹபுர பகுதியில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு வேளையில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தின் போது உயிரிழந்தவர் 27 வயதான இளைஞன் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவரது சடலம் சூரியவெவ வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சூரியவெவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## அல்லாரைப் பகுதியில் இளைஞர் மீது தாக்குதல்

(கொடிகாமம்)

கொடிகாமம் அல்லாரைப் பகுதியில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரின் தாக்குதலுக்கு இலக்காகி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிசசைக்காக அனுமதிக்கப்பட்டுளளார்.

கொடிகாமம் வெள்ளாம்போக்கட்டி என்ற இடத்தைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் கிசோர் (வயது 23) என்பவரே அல்லாரை பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளைக்கு அருகில் மோட்டார் சைககிள் ஒன்றில் சென்று கொண்டிருந்தபோது இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (43)

# பரீட்சைக்கு விண்ணப்பிக்க கால எல்லை நீடிக்கப்படாது

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை எதிர்வரும் சனிக்கிழமையுடன் நிறைவடைவதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் காலம் நீடிக்கப்படமாட்டாது எனப் பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யூ.எம்.என்.ஜ புஷ்பகுமார தெரிவித்தார்.

இவ்வாண்டிற்கான உயர்தரப் பரீட்சைகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இதேவேளை, ஐந்தாம் ஆண்டிற்கான புலமைப் பரிசில் பரீட்சை விண்ணப்பப் படிவங்கள் அடுத்த மாதம் 22 ஆம் திகதிக்கு பின்னர் விநியோகிக்கப்படவுள்ளன.

# திருக்கோணேஸ்வரத்தில் மஹோற்சவ விழா

(யாழ்.நிருபர்)

திருக்கோணேஸ்வர ஆலய வருடாந்த மஹோற்சவ விழா எதிர்வரும் 26 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 20 தினங்கள் சிறப்பாக நடைபெறும்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெறும் வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து இரதோற்சவம் நடைபெறும். அன்றையதினம் கோணேஸ்வரப் பெருமான் மாதுமைஅம்பாள் சமேதராக தேரில் வீதி உலா வருவார். மாலை தேரடி உற்சவம் இடம்பெறும். மறுநாளான வெள்ளிக்கிழமை பாவநாசம் தீர்த்தச் சுனையில் தீர்த்தோற்சவமும் மகாயாக அபிஷேகமும் இடம்பெறும்.

13 ஆம் திகதி சனிக்கிழமை பூங்காவனத் திருவிழா இடம்பெறவுள்ளது. ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் தெப்பத் திருவிழாவின்போது கேணேஸவரப் பெருமான் மாதுமை அம்பாள் சமேதராக சமுத்திரபவனி வருவார். (10)

# கல்வி மேம்பாட்டுக்கு உபகரணங்கள் விநியோகம்

(யாழ்.நிருபர்)

வலிகாமம் வடக்கில் இருந்து உயர்பாதுகாப்பு வலயம் காரணமாக 23 வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்து ஆனைக்கோட்டையில் தற்காலிகமாக இயங்கி வருகின்ற யாழ். மயிலிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு "யாழ். எய்ட்" தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினால் கற்றல் மேம்பாட்டிற்கான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சமூக சேவகர்களும், இலண்டன் வாழ் புலம்பெயர் தமிழர்களான ஆர்.மயூரன், திருமதி நரேஸ் ஆகியோரும் கலந்துகொண்டு மாணவர்களுக்கு உதவிப் பொருட்களை வழங்கினர். (10)

# இலங்கை அரசுக்கு முன்னால் உள்ள இரண்டு வழிகள்!

இலங்கை என்ற ஒரு குட்டித்தீவு நாட்டுக்கு எதிராக இன்று உலக அரங்கில் பல்வேறு சக்திகள் தீவிரமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இலங்கையின் பூகோள அமைவிடமும், அந்த நாட்டில் உள்ள அரசாங்கம் பின்பற்றி வரும் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கைகளும்தான் அதற்கான பிரதான காரணிகள் என்பதில் சந்தேகமில்லை. இருப்பினும் அந்த நாட்டின் அரசாங்கம் அங்குள்ள சிறுபான்மை இனங்கள் சம்பந்தமாக கடந்த காலங்களில் பின்பற்றிய தவறான கொள்கைகளே, இந்த சர்வதேச நாசகார சக்திகளுக்கு ஆயுதமாகப் பயன்பட்டு வருகின்றது என்பதை, அந்த நாட்டு அரசாங்கம் இன்னமும் உணராமல் இருப்பதுதான், பிரச்சினையின் இன்னொரு பக்க பாதக அம்சமாக இருக்கின்றது.

அமெரிக்காவும் அதன் மேற்கத்தைய கூட்டாளி நாடுகள், ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளை, மனித உரிமைக் காப்பகம், சர்வதேச மன்னிப்புச் சபை, ஆசிய மனித உரிமை அமைப்பு, சர்வதேச நெருக்கடிக் குழு என்பவை ஏறத்தாழ ஓர் அணியாக இலங்கைக்கு எதிராகச் செயல்படுகின்றன. இவை உலகில் எத்தனையோ நாடுகளில், எத்தனையோ விதமான மனித உரிமை மீறல்களும், பிரச்சினைகளும் இருக்க, இலங்கையில் மட்டும்தான் மனித உரிமை மீறல்கள் நடந்துள்ளது போல, இலங்கைக்கு எதிராக "இரண்டில் ஒன்றைப் பார்த்து விடுவோம்" என்ற தோரணையில் செயல்பட்டு வருகின்றன.

இந்த நாடுகளில் அநேகமானவை புலிகள் இயக்கத்தை தமது நாடுகளில் இன்று வரை பயங்கரவாத அமைப்பாகப் பட்டியலிட்டு வைத்திருக்கின்றன. ஆனால் புலிகளின் 30 வருட செயல்பாடுகளை இலங்கை அரசாங்கம் 2009 மே மாதத்துடன் முடிவுக்குக் கொண்டு வந்த பின்னரே, இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்துப் பேச ஆரம்பித்திருக்கின்றன. அதுவும், புலிகளின் மனித உரிமை மீறல்களைத் தவிர்த்துவிட்டு, அரசின் மனித உரிமை மீறல்கள் பற்றி மட்டுமே பேசி வருகின்றன.

அப்படியானால் அதற்கு முன்னர் 30 வருடமாக இலங்கையில் யுத்தம் நடைபெற்ற காலத்தில் மனித உரிமைகள் மீறப்படவில்லையா என்ற கேள்வி எழுகிறது. இறுதியுத்த நேரத்தில் 40,000 பேர்வரை கொல்லப்பட்டதாக இப்பொழுது இந்த சக்திகள் கூறி வருகின்றன. இறுதிக்கட்டப் போர் நடைபெறுவதற்கு முன்னரே, அதுவரை நடந்தபோரில் சுமார் 1 இலட்சம் வரையிலானவர்கள் கொல்லப்பட்டுள்ளதாக அப்பொழுது இதே சக்திகள் கூறி வந்தன. அப்படியானால் ஏன் அப்பொழுதே இந்தப் பிரச்சினைகளை இவர்கள் எழுப்பவில்லை? யுத்தம் நடைபெற்ற போது, அதில் ஈடுபட்ட இருதரப்புக்கும் பல்வேறு வழிகளில் உதவி வந்த இந்த சக்திகள், புலிகள் அழிக்கப்பட்டு, போர் முடிவுக்கு வந்த பின்னரே மனித உரிமை மீறல்கள் பற்றிக் கூப்பாடு போடுவது சந்தேகத்துக்குரியதாக உள்ளது. இந்த சக்திகள், பழைய காயங்களை மீண்டும் கிளறி ரணத்தை ஏற்படுத்துவதிலேயே அக் கறையாக உள்ளன.

இவர்களைத் தவிர இலங்கைப் பிரச்சினையில் குட்டை குழப்ப முனைந்து நிற்கும் இன்னொரு பகுதியினர், தமிழ்நாட்டு அரசியல்வாதிகள். இவர்கள் அங்கு தமக்குள் நடக்கும் அரசியல் சதுரங்கப் போட்டியில் இலங்கைத் தமிழர்களைப் பகடைக் காய்களாகப் பயன்படுத்தி வருகின்றனர். இந்தியாவே முன்னின்று உருவாக்கிய இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும்படி இவர்கள் வலியுறுத்துவதில்லை. இலங்கை அரசாங்கம் நியமித்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் பயனுள்ள பரிந்துரைகளை அமுல்படுத்தும்படியும் இவர்கள் கோருவதில்லை.

> இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மிகவும் மோசமான ஒரு பாத்திரத்தை வகிக்கும் ஒரு தரப்பினர், அதே தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று, அவஉகளின் பிரதான பிரதிநிதி என்ற பெயர்ப் பல- கையைத் தாங்கி நிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஆகும். அவர்கள் தமது கையாலாகாத் தனத்தை மறைப்பதற்காக எடுத்த தெற்கெல்லாம், 'சஉவதேச சமூகம் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கிறது, அது இலங்கைத் தமிழர் பிரச்சினையைக் கவனித்துக் கொள்ளும்' எனச் சொல்லி வருகிறார்கள்.

பதிலுக்குஇலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை போர்க்குற்றவாளியாக்கி சர்வதேசநீதிமன்றில் நிறுத்தி விசாரிக்க வேண்டும். இலங்கை மீது பொருளா-தாரத் தடை விதிக்க வேண்டும். இலங்கையில் (தமிழர்கள் மத்தியில் மட்டும்) கருத்துக் கணிப்பு நடத்தி, இலங்கையில் தமிழர்களுக்குத் தனியான நாட்டை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் எனக் கோரி வருகின்றனர். ஆனால் உண்மையில் இவர்களது இந்தக் கோரிக்கைகளுக்கும் இலங்கைத் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது.

**வானவில் 26 இதழ் தலையங்கத்தில்**

சொல்லப்போனால் தமிழக அரசியல்வாதிகளின் நியாயமற்ற கோரிக்கைகளும், நடவடிக்கைகளும், இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்கு மேலும் மேலும் அவலங்களையே உருவாக்கும் என்பதை, இந்த சுயநல அரசியல்வாதிகள் தெரிந்து கொண்டும், தமது தேவைகளுக்காக அவ்வாறு செய்கின்றனர்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மிகவும் மோசமான ஒரு பாத்திரத்தை வகிக்கும் இன்னொரு தரப்பினர், அதே தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று, அவர்களின் பிரதான பிரதிநிதி என்ற பெயர்ப்பலகையைத் தாங்கி நிற்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் ஆகும். அவர்கள் தமது கையாலாகாத் தனத்தை மறைப்பதற்காக எடுத்ததெற்கெல்லாம், "சர்வதேச சமூகம் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கிறது, அது இலங்கைத் தமிழர் பிரச்சினையைக் கவனித்துக் கொள்ளும்" எனச் சொல்லி வருகிறார்கள்.

ஆனால் சர்வதேச சமூகம் தனது நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பச் செயல்படுகிறதேயொழிய, இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காகச் செயற்படவில்லை என்பது இந்தக் கூட்டமைப்பினருக்குத் தெரியாததல்ல. இருப்பினும் சர்வதேச நாடுகள் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தும்படியாவது இலங்கை அரசைக் கோருகின்றன. கூட்டமைப்பினர் அதைக்கூட செய்யத் தயாரில்லை. ஜெனிவாவில் அமெரிக்கா கொண்டுவர உள்ள தீர்மானம் நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைகளை அமுல்செய்யக் கோருவதையே பிரதான கருப்பொருளாகக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. அந்தத் தீர்மானம் தமக்குத் திருப்தியானதல்ல என கூட்டமைப்பு கூறுகிறது. கூட்டமைப்பின் நோக்கம் இலங்கை அரசை ஆக்கபூர்வமாகச் செயல்படத் தூண்டுவதல்ல. மாறாக அமெரிக்கா தலைமையிலான மேற்குலக சக்திகள் மூலம், ஜனாதிபதி ராஜபக்சவை போர்க் குற்றவாளியாக்குவதும், அரசைக் கவிழ வைப்பதும் தான் அவர்களது நோக்கம்.

அத்துடன் இந்தியா உட்பட இலங்கைத் தமிழர் நலனில் அக்கறை உள்ள சக்திகள் குறைந்தபட்சம் 13ஆவது திருத்தத்தையாவது நடைமுறைப்படுத்தும்படி இலங்கை அரசைக் கோருகின்றனர். ஆனால், கூட்டமைப்பினர் அதைக்கூட கோருவதில்லை. மாறாக 13ஆவது திருத்தத்தைத் தாம் ஏற்கப் போவதில்லை என அடிக்கடி வீராப்பு அறிக்கைகளையும் விடுத்து வருகின்றனர். பதிலுக்கு தமது திட்டம் என்ன என்பதையும் முன்வைக்கிறார்கள் இல்லை., இனப்பிரச்சினை தீர்வுக்காக அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிலும் பங்குபற்ற மறுத்து வருகிறார்கள். அப்படியானால் கூட்டமைப்பினரின் நோக்கம்தான் என்ன?

அவர்களது நோக்கம் தாம் பிரதிநிதித்துவம் செய்யும். தமிழ் மக்களின் பிரச்சினைக்கு விசுவாசத்துடன் தீர்வு காண்பதல்ல. மாறாக ஏதாவது தீர்வுகள் வராமல் செய்வதற்காக எதிர்ப்பு அரசியலையும், குழப்பங்களையும் செய்வது தான் அவர்களது ஒரே நோக்கமாக இருந்து வருகிறது.

இத்தகைய ஒரு சர்வதேச, பிராந்திய, உள்நாட்டு அரசியல் சூழ்நிலையில் இலங்கை அரசு என்ன் செய்ய வேண்டும் என்பதை எதிரிகளே தெளிவாக அரசுக்கு உணர்த்தி நிற்கின்றனர். ஆனால் இலங்கை அரசோ அவற்றைப் புரிந்து கொள்ளாமல் அல்லது புரிந்து கொண்டு அரசியல் உள்நோக்கங்களுடன் செய்ய வேண்டியவற்றைச் செய்யாமல் செயற்பட்டு வருகின்றது.

இலங்கை அரசு 30 வருடப் போரை வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டு வந்ததை யாராவது பாராட்டாமல் இருக்க முடியாது. இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியேற்றியதையும், பல்லாயிரம் புலிப் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளித்ததையும், வடக்கு கிழக்கில் மேற்கொள்ளும் துரித அபிவிருத்தி நடவடிக்கைகளையும் கூட பாராட்டாமல் இருக்க முடியாது. ஆனால் நாட்டில் நீண்ட காலமாக புரையோடிப்போயுள்ள இனப் பிரச்சினைக்கும், சிதைந்து போயுள்ள இன உறவுகளுக்கும் தீர்வு காண்பதற்கும், முடமாகிப் போயுள்ள ஜனநாயகத்துக்கு புத்துயிர் ஊட்டவும் இந்த நடவடிக்கைகள் மட்டும் போதுமானவையல்ல.

"உறியிலே நெய் இருக்க ஊரெல்லாம் அலைவானேன்?' என்ற முதுமொழிக்கிணங்க, இவற்றுக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கத்தின் கைவசமே வழிவகைகள் உள்ளன.

இலங்கை அரசாங்கம் 1987இல் இந்தியாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் உள்ள 13ஆவது திருத்தத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்தினாலே இலங்கையின் நீண்ட கால இனப்பிரச்சினை தீர்வதுடன், இனங்களுக்கிடையில் நல்லுறவும் ஏற்படும். தேசிய நல்லிணக்கமும் ஏற்படும். அதேபோல அரசாங்கம் தானே நியமித்த கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக அமுல்படுத்தினால், தேசிய நல்லிணக்கம் மேலும் பலப்படுவதுடன், ஜனநாயகமும் செழுமைப்படும். இந்த இரண்டு நடவடிக்கைகளையும் அரசாங்கம் தயக்கமும், தாமதமும் இன்றிச் செய்யுமாக இருந்தால், மேற்கத்தைய நாடுகளின் ஜெனீவாத் தீர்மானங்களோ, தமிழ்நாட்டு அரசியல்வாதிகளின் தெருக்கூத்துகளோ, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் குழி பறிப்புகளோ பாதிப்பை ஏற்படுத்த அறவே வாய்ப்பில்லாமல் போகும். காலம் கடந்தாலும், இப்பொழுதாவது இதை உணர்ந்து அரசாங்கம் செயல்படுமா?



# மகிந்தவுக்கு பிரதியீடாக சந்திரிக்கா மாற்று அரசியல் தலைமைக்கு முயற்சி




(கொழும்பு)

நாட்டில் மாற்று அரசியல் தலைமை ஒன்றை உருவாக்கும் முயற்சிகள் திரைமறைவில் நடைபெற்று வருவதாக தென்னிலங்கை செய்திகள் தெரிவிக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவைச் சந்தித்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் பலமிக்க மாற்று அரசியல் சக்தி ஒன்றினை உருவாக்குவது தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

திரைமறைவில் இந்த மந்திராலோசனையின் போது மகிந்தவின் முக்கிய அமைச்சர்கள் சிலர் உடபட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 15 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டதாகவும், இவ்வாறான பலமிக்க இரண்டாவது சக்தியை உருவாக்குவதற்கான



தங்களது முழுமையான ஒத்துழைப்பினை வழங்கவும் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் விமல் வீரவன்சவின் அனுசரணை கொண்ட இணையமான லங்கா சீ நியுஸ் கடந்த சனிக்கிழமை இத் தகவலை வெளியிட்டுள்ளது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை வேட்பாளர்களாக நிறுத்துவது என்றும், இது தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியுடனும் கலந்துரையாடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டதாக அந்த இணையம் மேலும் தெரிவித்துள்ளது.

# முள்ளிவாய்க்காலில் பணியாற்றிய போர்முனை ஊடகக்காரர் எங்கே?

## தலையை குடைகிறது பாதுகாப்பு அமைச்சு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட இறுதிப்போரின் போது எடுக்கப்பட்ட களமுனைப் படங்களை வெளிநாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களுக்கு வழங்கியவரைத் தாம் கண்டறிந்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவர், 2009 ஆம் ஆண்டு மே மாதம் போரின் இறுதிக் கட்டத்தில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட போது, தொலைக்காட்சி ஒன்றின் சார்பில் முன்னரங்கப் பகுதியில் பணியாற்றியிருந்தார்.

இவர் இலங்கையிலிருந்து வெளியேறி, தற்போது தனது குடும்பத்துடன் மேற்குநாடு ஒன்றில் வசித்து வருவதாகவும், இவரது கடந்த கால நடவடிக்கைகள் குறித்து பாதுகாப்பு அதிகாரிகள் தீவிரமான விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதேவேளை, நேற்று முன்தினம் குருநாகல் போயகலவில் இராணுவ நிகழ்வு ஒன்றில் உரையாற்றியிருந்த இலங்கை அதிபர் மகிந்த ராஜபக்ஷ, ஊடகவியலாளர் ஒருவர் டொலர்களுக்கு விலை போயுள்ளதாக் குற்றம்சாட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# "ஹலால்" என்றால் என்ன? காத்தான்குடியில் விழிப்புணர்வு

(கொழும்பு)

அகில இலங்கை ஜம்மியதுல் உலமாவின் ஹலால் தொடர்பாக பொது மக்களுக்கு விளக்கமளிக்கும் மாநாடு நேற்றுமுன்தினம் காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் இஸ்லாமிய கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அகில இலங்கை ஜம்மியதுல் உலமாவின் ஹலால் சபையின் பொறுப்பாளர் மௌலவி எம்.எம்.இர்பான், கண்டி மத்ரஸதுல் புர்கானியா அரபுக் கல்லூரியின் அதிபரும் ஹலால் சபையின் உறுப்பினருமான எச்.உமர்தீன் ஆகியோர் விஷேட உரையாற்றினர்.

இந்நிகழ்வில் காத்தான்குடி ஜம்மியதுல் உலமா தலைவர் மௌலவி அலியார் (பலாஹி), காத்தான்குடி ஜம்மியதுல் உலமா செயலாளர் மௌலவி ஜிப்ரி (மதனி), மட்டக்களப்பு மாவட்ட ஜம்மியதுல் உலமா செயலாளர் மௌலவி முஸ்தபா (இஸ்லாஹி), காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன பிரதித் தலைவர் அப்துல்ஜவாத் பீ.ஏ கவிமணி எம்.எச்.எம். புஹாரி (பலாஹி), சம்மேளன உப செயலாளர் சாதிக்கீன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான யூ.எல்.எம்.முபீன், கே.எல்.எம்.பரீட், தொழிலதிபர் கலீல் மற்றும் உலமாக்கள், அரபு மத்ரசாக்களின் அதிபர்கள் உப அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விமான்கள், ஊர் பிரமுகர்கள், புத்திஜீவிகள் பெருந்திர ளான பொதுமக்கள உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது காத்தான்குடி, காங்கேயனோடை, ஏறாவூர் உள்ளிட்ட பிரதேசங்களை சேர்ந்தவர்களும் கலந்து கொண்டனர்.

குறித்த இம்மாநாட்டில் "ஹலால்" என்றால் என்ன ? ஜம்மியதுல் உலமா ஹலால் விடயத்தில் ஏன் இந்த முடிவை எடுத்தது, ஜம்மியதுல் உலமாவுக்கெதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களும் அவற்றிற்கான பதில்களும் என பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன் அது தொடர்பில் பூரண விளக்கமும் அளிக்கப்பட்டது.

# பால்மாவில் வேதிப் பொருள் கலப்பு உடல்நலத்துக்கு தீங்காக மாறும் அபாயம்

## விசாரணைக்கு அதிரடி உத்தரவு

(கொழும்பு)

நியூஸிலாந்து பொன்டாரா நிறுவனத்தினால் இலங்கையில் சந்தைப்படுத்தப்படும் பால் மாவில விவசாய உற்பத்திக்கான மருந்துகள் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறித்து விசாரணைகள் நடத்தப்படுவதாக ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

சந்தையில் இந்தப் பால்மா உற்பத்திகளே அதிகமாக விற்பனையாகி வருகிறது.

இந்தநிலையில் இலங்கையின சந்தையிலும் இந்த மருந்துபொருள் கலக்கப்பட்ட பால்மா விநியோகிக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

DCD aka Dicyandiamide என்ற இந்தப் பொருள் காரணமாக பாவனையாளர்களுக்கு பாரிய உடல்ரீதியான பாதிப்புக்கள் ஏற்படும் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், குறித்த பால்மாவில் இந்த மருந்துப் பொருள் கலக்கப்பட்டமை தொடர்பில் நியூஸிலாந்தில் விசாரணைகள் இடம்பெறுவதாக இலங்கையின் ஆங்கில செய்தித்தாள் குறிப்பிட்டுள்ளது.

எனினும், இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் கருத்துரைத்துள்ள இலங்கையின் வர்த்தகத்துறை அமைச்சு, குறித்த பால்மாக்களின் மாதிரிகள் வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டு பரிசோதனைகள் நடத்தப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

குறித்த பரிசோதனைக்கான தொழில்நுட்பவசதிகள் இலங்கையில் இல்லை என்றும் அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# ஹம்பாந்தோட்டை எண்ணெய்க்குதங்கள் சீனாவின் வசம்

(கொழும்பு)

ஹம்பாந்தோட்டையில் பாரிய எரிபொருள் குதங்களை சீனாவின் தனியார் நிறுவனம் ஒன்று அமைத்து வருகிறது.

மத்தல விமானநிலையம் மற்றும் ஹம்பாந்தோட்டை துறைமுகம் ஆகியவற்றுக்கான எரிபொருள் விநியோக குத்தகையை மேற்படி சீனாக்கம்பனியே பொறுப்பெடுத்துள்ளது.

ஹம்பாந்தோட்டை மத்தல சர்வதேச விமானநிலையம் மறறும் ஹம்பாந்தோட்டை துறைமுகம் ஆகியவற்றுக்கு எரிபொருளை விநியோகிக்கும் பணி சீனாவுக்கு வழங்குவதற்கான அனுமதி ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கிறது.

சீனாவின் ஹென்குய் பொறியியல் நிறுவனம் இந்தப் பணிகளை மேற்கொள்ளவுள்ளது.

இதன்படி இந்த நிறுவனம், வமான நிலையம் மற்றும் துறைமுகத்துக்கான எரிபொருளை சுரங்கங்களில் சேகரித்து வைத்து பரிசோதித்த பின்னர் இலங்கையின் துறைமுக அதிகார சபையிடம் கையளிக்கவுள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அமைச்சரவையில் வைத்து இதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்.

# சென்னை துணைத் தூதரகத்துக்கு எப்போது நடக்கும் மூடுவிழா

(கொழும்பு)

சென்னையில் உள்ள தமது துணைத் தூதரகத்தை மூடுவது குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருவதாக கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் எதிர்ப்புப் போராட்டங்கள் தீவிர மடைந்துள்ள நிலையிலேயே 'சென்னையில் உள்ள துணைத் தூதரகத்தை கேரளத் தலைநகரான திருவனந்தபுரத்துக்கு மாற்றுவதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து அரசாங்கம் ஆய்வு செய்து வருகிறது.

சென்னையில் உள்ள துணைத் தூதரகத்தின பாதுகாப்பு ஆலோசகரான மூத்தகாவல்துறை கண்காணிப்பாளர் றெரகான் டயஸ் கொழும்புக்குத் திருப்பி அழைக்கப்பட்டதை அடுத்தே இது குறித்து ஆய்வு செய்யப்படுகிறது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள வெளி விவகார அமைச்சு அதிகாரி ஒருவர், சென்னையில் உள்ள துணைத் தூதரகத்தின பாதுகாப்பு ஆலோசகரான மூத்த காவல்துறைக் கண்காணிப்பாளர் கூட, தனது பணிகளை முன்னெடுப்பதில் பிரச்சினைகள் இருப்பதாக தெரிவித்துள்ளார்.

# அமெரிக்க எதிர்ப்பு உணர்வு விதைக்கப்படுகிறது தெற்கில்

(கொழும்பு)

ஜெனிவாத் தீர்மானத்தை தொடர்ந்து சிங்கள அடிப்படைவாத அமைப்புக்கள் தென்னிலங்கை மக்கள் மத்தியில் அமெரிக்க எதிர்ப்புணர்வை உருவாக்குவதில் தீவிரமாக இறங்கியுள்ளன.

ஐ.நா. மனிதஉரிமை ஆணையக் கூட்டத்தில் தங்கள் நாட்டுக்கு எதிராக அமெரிக்கா தீர்மானம் கொண்டு வந்ததைத் தொடர்ந்து, இலங்கையில் அமெரிக்கப் பொருட்களைப் புறக்கணிக்க சிங்கள அமைப்புகள் தெற்கு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளன.

கொழும்பு கோட்டை ரயில் நிலையம் அருகே நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்திய சிங்கள அமைப்புகள், அமெரிக்கத் தயாரிப்புகளான கொக்ககோலா, பெப்சி மற்றும் அமெரிக்க கோதுமை உள்ளிட்ட அனைத்துப் பொருட்களையும் தொடர்ந்து புறக்கணிக்க வேண்டும் என்று கூறி ஆர்ப்பாட்ட முழக்கங்களை எழுப்பினார்கள்.

சிங்கள அமைப்புகள் அமெரிக்கத் தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வரும் சூழலில், மனிதஉரிமை அமைப்புகளும் இந்தத் தீர் மானத்துக்கு பலத்த வரவேற்பு தெரிவித்துள்ளன.

# வடக்கில் தேர்தல் நிச்சயம் ஆரம்ப ஏற்பாடுகள் துரிதம்

(கொழும்பு)


வருட இறுதியில் வடக்கு மாகாணத்துக்கு தேர்தல் நடாத்தப்படுவது நிச்சயமாகிவிட்டது என்றும் தேர்தலுக்கான ஆரம்ப நடவடிக்கைகளில் தேர்தல் திணைக்களம் இறங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு மாகாணசபை தேர்தலுக்கான பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தகவல் வெளியிட்டுள்ளார். இந்தியா உட்பட சர்வதேச நாடுகள் வடக்கு மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றன.

எனினும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு கண்ணிவெடி அகற்றல் காரணமாகவே அந்த தேர்தலை தாமதிக்க வேண்டியேற்பட்டது. தற்போது பெருமளவு இடங்களில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. எனவே வடக்கு மாகாணசபைத் தேர்தலுக்கான பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# மக்களின் நலனுக்கே முன்னுரிமை தேடிச்சென்று சேவையாற்ற வேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் அறிவுரை



(யாழ்ப்பாணம்)

மக்களின் நலன்களுக்கே என்றும் முன்னுரிமை வழங்கப்படும். அவர்களின் நலன்கள் பாதிக்காதவண்ணம் அரச உத்தியோகத்தர்கள் செயற்பட வேண்டுமென ஈ.பி.டி.பி யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்தார்.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கடந்தவெள்ளிக்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இக்கூட்டத்தினை ஆரம்பித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்படும் மானிய எரிபொருளை தூரத்தில் சென்று பெற்றுக் கொள்வதினால் பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்படி மானியம்; கடற்றொழிலாளர்களது பிரதேசத்தில் வழங்கப்படவேண்டுமென உரிய திணைக்களத்திற்கு ஒருங்கிணைப்புக்குழுத்தலைவர் உத்தரவிட்டார்.

மேலும் கிராமிய எழுச்சித் திட்டத்தின் (புறநெகும) ஊடாக பருத்தித்துறை நகரசபைக்குரிய வீதியான, வெளிச்சவீட்டு வீதிக்காக (1.05கி.மீ), மருதடி வாய்க்கால் புனரமைப்புக்கு (0.25கி.மீ), பருத்தித்துறை மீன்சந்தை வளாகத்தில் பொது மலசலகூடம் அமைப்பதற்கும் நடவடிக்கையினை எடுத்து அதற்குரிய அனுமதியினையும் நாடாளுமன்ற உறுப்பினர் வழங்கிவைத்தார்.

அத்துடன் ஆரம்ப பாடசாலைகளின் வலையமைப்புக்காகவும் 2ஆம் நிலை பாடசாலைகளின் அபிவிருத்திக்காக துன்னாலை வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலையும், மாதனை தமிழ்க் கலவன் பாடசாலையும், தட்டாதெரு தமிழ்க் கலவன் பாடசாலையும் தெரிவு செய்யப்பட்டு, அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேலும் விவசாயிகளின் நலன்கருதி புலோலி தெற்கு முறவில்குளம், சிலந்திக்குளம் புலோலி தென்மேற்கு குளவின் குளம் ஆகிய குளங்கள் புனரமைக்கவும், புலோலி தெற்கு கொட்டுக்கேணி விவசாயவீதி புனரமைப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

இவற்றுடன் பாதை இலக்கம் 752 போக்குவரத்து சேவையினை உடனடியாக ஆரம்பிக்குமாறு இலங்கை போக்குவரத்து சபைக்கு பணிப்புரை விடுத்ததுடன், வடமராட்சி வடக்குப் பகுதியில் காணியுடன் வீடு வழங்கப்பட்ட பயனாளிகள் பலகாலமாக குடியேறாததையடுத்து அவர்களுக்கு வழங்கப்பட்ட மூன்று சந்தர்ப்பங்களினை தவறிய நிலையில் மேற்படி காணி, வீடுகளில் புதிய பயனாளிகளை தெரிவு செய்து அவர்களுக்கு வழங்க அனுமதி வழங்கப்பட்டது.

தொடர்ந்து பருத்தித்துறை முதலாம் குறுக்குத் தெரிவில் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள வியாபாரிகளுக்கு உடனடியாக மாற்றிடம் வழங்கி போக்குவரத்து இடையூறை நீக்க வேண்டுமென பருத்தித்துறை நகரசபைக்கு ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் உத்தரவிட்டார்.

இக்கலந்துரையாடலில் வடமராட்சி வடக்குப் பிரதேச செயலாளர் இ.த.ஜெயசீலன், ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி இணைப்பாளர் ஐ.சிறிரங்கேஸ்வரன், ஈ.பி.டி.பி.யின் வல்வெட்டித்துறை இணைப்பாளர் தெய்வேந்திரம், பிரதேசசபை மற்றும் நகரசபை தலைவர்கள், மற்றும் திணைங்களங்களின் துறைசார்ந்த அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# நாடளாவிய முஸ்லிம்கள் இன்று "ஹர்த்தால்" அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

அண்மைக்காலமாக இலங்கைவாழ் முஸ்லிம் கள் பல்வேறு இனத்துவாத்தியான பிரச்சினைகளை அனுபவித்து வருவதை அடுத்து நாடளாவிய ரீதியில் முஸ்லிம் மக்கள் இன்று திங்கட்கிழமை ஹர்த்தாலை அனுஷ்டிக்கவுள்ளனர்.

குறிப்பாக ஹலால் பிரிச்சினை, பெண்களின் ஹிஜாப் உடை மற்றும் வியாபார வழிமுறையில் இடைஞ்சல்கள், கலாசார உரிமை மறுப்பு என பல்வேறு வகையில் பாதிப்பை அடைந்துள்ள மையை குறிப்பிட்டு முஸ்லிம் உரிமைக்கான அமைப்பு ஹர்த்தாலுக்கான அழைப்பை விடுத்துள்ளது.

முஸ்லிம்களின் பிரச்சினையை அரசு உடனடியாக கவனத்தில் எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் இன்று யாழ்ப்பாணத்தில் வாழும் முஸ்லிம் மக்களும் ஹர்த்தாலில் ஈடுபட்டு முழுப்பகிஸ்கரிப் பையும் வழங்கவுள்ளார்கள். (105)

# வைத்தீஸ்வரர் ஆலய மகாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதில் 28ஆம் திகதி காலை 7மணிக்கு விசேட சந்தி மகாயாக பூஜை உள்ளிட்ட விசேட பூசைகள் இடம்பெறவுள்ளதுடன், மாலை 4.00 மணிக்கு யாகபூஜை, நவாக்னி பூஜை, விம்ப சுத்தி, விம்பரஷபந்தனம், தத்வபூஜை, நியாசம் ஸ்பரிசாகுதி, ஜயாதிஷோமம், பூர்ணாகுதி, வேத திருமுறை பாராயணம், சிவாச்சார்ய பூஜனம் என்பன இடம் பெறவுள்ளன. கும்பாபிஷேக கிரியைகளை சிவப்பிரம்மஸ்ரீ சொ.இ.விக்கினேஸ்வரக்குருக்கள் மேற்கொள்ளவுள்ளார்.

★ ★ ★ ★ ★ ★

கரணவாய் அண்ணாசிலையடி அருள்மிகு மகாமாரி அம்பிகை ஆலய புனராவத்தன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை முதல் நாளை மறுதினம் புதன்கிழமை வரை நடைபெறவுள்ளது. இதில் கும்பாபிஷேக கிரியைகள் சிவஸ்ரீ சோ.நடராசாக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளன. கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 15நாட்கள் மண்டலாபிஷேகமும் நடைபெறவுள்ளது. (18)

# புத்தாண்டை முன்னிட்டு வர்த்தகர்களுக்கு அனுமதி

(கரணவாய்)

எதிர்வரும் சித்திரைப்புத்தாண்டை முன்னிட்டு நெல்லியடி வர்த்தக சங்கத்தினால் பாவனையாளர்களின் நன்மை கருதி 24-03 முதல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 14ஆம் திகதி வரை வியாபார நிலையங்களை திறந்து வியாபாரம் செய்ய வர்த்தகர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி ஞாயிறு தினங்களிலும் கடைகளை திறந்து வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் நெல்லியடி வர்த்தக நிலையங்களுக்கு சங்கத்தினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார். (18)

# விசேட நிகழ்வு

(கரணவாய்)

செலான் வங்கியின் 25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நெல்லியடி வங்கிக் கிளையில் இன்று திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் வாடிக்கையாளர்களை கலந்து சிறப்பிக்குமாறு வங்கிக் கிளையினர் கேட்டுக் கொள்கின்றனர். (18)

# ஊடகக்கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

இலங்கை ஊடகவியல் கல்லூரி, ஊடகவியல் துறையில் டிப்ளோமா கற்கை நெறி ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது.

ஒரு வருடகால முழுநேர கற்கையான இக்கற்கை நெறியில் இணைத்துக்கொள்வதற்காக பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கின்றன.

மேற்படி ஊடகவியல் கற்கைநெறியைப் பின்பற்ற விரும்புபவர்கள் இல.96, கிருல்ல வீதி, கொழும்பு - 05 என்ற முகவரியுடனோ அல்லது 011 5353635, 011 5335500 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடனோ அல்லது www.slcj.lk என்ற இணைய முகவரியுடனோ தொடர்பு கொள்ள முடியும் என்று இலங்கை ஊடகவியல் கல்லூரியின் பிரதிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# கோப்பாய் பிரதேசத்தில் தீவிரமாக வளரும் பாதீனியம்

(இருபாலை)

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேசத்தில் பாதீனியச் செடிகள் அழிக்க அழிக்க வேகமாகப் பல இடங்களில் பரந்துவளர்ந்து வருவதைக்காணக் கூடியதாகவுள்ளது. இராச வீதியின் ஓரங்களிலும் தோட்டங்கள் பலவற்றிலும் அதேபோல பரந்தன் உளரெழு வீதி, பருத்தித்துறை வீதியிலுள்ள சிறுப்பிட்டி புத்தூர் 3ஆம் கட்டை நவக்கிரி ஆவரங்கால் மேற்கு உட்பட பல பகுதிகளில் பாதீனியச் செடிகள் வளர்ந்து வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இச்செடிகள் கடந்த காலங்களில் விவசாயிகளாலும் மக்களாலும் பலமுறை அழிக்கப்பட்ட போதிலும் இச்செடிகள் வேகமாகக்பரவி வருவதால் இச்செடியை அடியோடு அழிக்க என்ன செய்வதென்ற நிலையில் விவசாயிகளும், மக்களும் விசனம் அடைந்துள்ளனர். (08)

# முரசின் இன்றைய பலன்

(25.03.2013 – திங்கட்கிழமை)

நந்தன வருஷம் பங்குனி 12 ஆம் திகதி. நட்சத்திரம் மகம் மரண. முற்பகல் 10.21 திதி திரயோதசி. பிற்பகல் 05.04 வரை. இராகுகாலம் 07.45 - 09.15 வரை. சுபநேரம் 12.15 - 01.45 வரை.

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

**மேடம்** – பேச்சில் அன்பும் கனிவும். தொழில் வளர்ச்சிக்கு அனுகூலம். கடன் வசூலாகும். பொன், பொருள் சேர்க்கை. புதிய அறிமுகம். பாராட்டு. வெகுமதி கிடைக்கும். விருந்து உபசரிப்பு.

**ரிஷபம்** – எண்ணத்திலும் செயலிலும் உறுதி. புதிய நடைமுறை பின்பற்றுவீர்கள். தொழில் தடை விலகும். உபரி பண வருமானம். வழக்கு சாதகம். குடும்ப அமைதி. விஷயங்கள் தெளிவாகும்.

**மிதுனம்** – எதிர்ப்புகள் பலமிழந்து போகும். பணிகளில் உத்வேகம். தொழில் திருப்திகரம். எதிர்பார்த்ததை விட அதிக வரவு. வீட்டுப்பொருள் வாங்குவீர்கள். புத்திரரால் மகிழ்ச்சி. ஆக்கம்.

**கடகம்** – எதிர்கால அக்கறை. புதிய யுக்திகள் நன்மை தரும். தொழில் வளர்ச்சி. உபரி பணவருமானம். உறவினர் மனக்கிலேசம் சரியாகும். உடல் ஆரோக்கியம். விவேகத்திற்கு வெற்றி.

**சிம்மம்** – செயல்திறன். நண்பர், உறவினர் வியக்கும் வகையில் நடப்பீர்கள். ஆதாயம். குடும்பத் தேவை நிறைவேறும். உடல் நலம் சீராகும். புத்திரர் உயர்வு. எதிர்கால நம்பிக்கை ஒளி.

**கன்னி** – பேச்சைக் குறைப்பது நல்லது. போட்டி இருக்கும். கூடுதல் உழைப்பு. வரவு குறைவு. குடும்பத்தினர் பாசம். வாகன பயணம் கவனம். தாயிடமிருந்து ஆறுதல். புதிய உத்வேகம்.

**துலாம்** – பிறர் நலனில் அக்கறை. தொழில் வளர்ச்சி. பண வரவும், நன்மையும் கூடும். நண்பருடன் மகிழ்வு. குடும்பத்தேவை நிறைவேறும். வெளிநாட்டு நற்செய்தி. மனமும், உடலும் புத்துணர்வு.

**விருச்சிகம்** – பிரச்சினைகளுக்கு ஒதுங்குவது நல்லது. அலைச்சல். கடின உழைப்பு. தொழில் சிறக்கும். வரவு தாராளம். உடல் நலம் கவனம். விரும்பியது வாங்குவீர்கள். வழக்கு சாதகம்.

**தனுசு** – செயல்களில் தடுமாற்றம். பகை வரும். பொறுத்தால் வெல்லலாம். தொழிலில் அனுகூலம் இழப்பு. சராசரி பணவரவு. புதிய விடயங்களில் நுழைய வேண்டாம். வாழ்க்கைத்துணை உதவி.

**மகரம்** – நற்செயல்களால் பிறர் பாராட்டுகிற நன்னிலை. தொழில் வளர்ச்சி. வரவு. குடும்பத்திற்கு தாராள பணச்செலவு. உறவினர் நண்பர்க்கு உதவி. பயண திட்டம். ஒய்வும் மகிழ்வும்.

**கும்பம்** – வேண்டிய உதவி கிடைக்கும். திட்டமிட்டவை நிறைவேறும். தொழில் தொடர்பு பலம் பெறும். கூடுதல் லாபம். வாகன மாற்றம். குடும்ப மங்கல நிகழ்வு. பணியிடத்தில் சலுகைகள்.

**மீனம்** – நல்ல செய்தி வரும். நண்பர், உறவினர் உதவுவர். தொழிலில் ஆதாயம். உபரி வருமானம். குடும்பத் தேவை நிறவேறும். முக்கிய சந்திப்பு. மனதில் மகிழ்ச்சியும், நிம்மதியும்.

# ஆஷிக்கு வைட்வோஸ் இந்திய அணி புதிய சாதனை



(புதுடில்லி)

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான நான்காவதுடெஸ்ட் போட்டியில் இந்திய அணி ஆறு விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது. இதன் மூலம் கடந்த 81 வருட கால இந்திய கிரிக்கெட் வரலாற்றில் நான்கு போட்டிகளைக் கொண்ட தொடரை முழுமையாக கைப்பற்றிக்கொண்ட முதல் சந்தர்ப்பமாகவும் பதிவாகியுள்ளது.

இந்திய, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி டில்லியில் நேற்று நிறைவடைந்தது.

இதில் முதல் இனிங்ஸிற்காக எட்டு விக்கெட்டுக்களை இழந்து 266 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மூன்றாம் நாள் ஆட்டத்தை இந்திய அணி தொடர்ந்தது. சுழற்பந்து வீச்சுக்கு சாதகமான இந்த ஆடுகளத்தில் இந்திய அணியின் பின்வரிசை வீரர்களால் மேலும் தாக்குப்பிடிக்க முடியவில்லை. மேலும் ஆறு ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இந்திய அணியின் முதல் இனிங்ஸ் நிறைவுக்கு வந்தது. இறுதியில் இந்திய அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 272 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜடேஜா 43, டோனி 24, முரளி விஜய் 57, புஜாரா 52 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சிறப்பாகச் செயற்பட்ட நதன் லயன் 94 ஓட்டங்களைக் கொடுத்து ஏழு விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

10 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி, நிதானமாக ஆடி இந்திய அணிக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் வெற்றி இலக்கை நிர்ணயிக்கும் வகையில் ஆட முற்பட்டது. டேவிட் வோனர், மைக்ஸ்வெல் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கினர். இதில் அதிரடி டேவிட் வோனர் தனது பாணியை மாற்றி நிதானமாக ஆட முற்பட்டார். முதல் நான்கு ஓவர்களை சிறப்பாக எதிர்கொண்ட இந்த ஜோடிக்கு ஐந்தாவது ஓவர் அதிர்ச்சி அளிக்கும் வகையில் அமைந்தது. ஐந்தாவது ஓவரில் பந்து வீச அழைக்கப்பட்ட ஜடேஜா, ஆடுகளத்தின் தன்மையை உணர்ந்து சிறப்பான முறையில் பந்து வீசி அவுஸ்ரேலிய அணியின் விக்கெட்டுக்களைக் கொய்து கொண்டிருந்தார். இந்திய அணியின் சுழற்பந்து வீச்சை எதிர்கொள்ளத் திணறிய அவுஸ்ரேலிய அணி வீரர்களின் விக்கெட்டுக்கள் ஒரு சீரான இடையில் வீழ்த்தப்பட்டுக் கொண்டிருந்தன. ஒரு கட்டத்தில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 122 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இந்நிலையில் ஒன்பதாவது விக்கெட்டுக்காக இணைந்த பட்டின்சன், பீற்றர்சிடில் இணை அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவிக்க முற்பட்டது.குறிப்பாக,பீற்றர்சிடில் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்துக் கொண்டிருந்தார். இந்நிலையில், 35 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இந்த ஜோடி பிரிக்கப்பட்டது. முதல் இனிங்ஸிலும் இந்த ஜோடி 52 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இறுதியில் அவுஸ்ரேலிய அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 167 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதில் பீற்றர்சிடில் 45 பந்துகளை எதிர்கொண்டு ஏழு பவுண்டரிகள் அடங்கலாக 50, எல்.கோவன் 24, எஸ். ஸ்மித் 19, வட்சன் 18, பட்டின்சன் 11 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜடேஜா 58 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களைச் சாய்த்தார். அத்துடன் டெஸ்ட் அரங்கில் ஜடேஜாவின் சிறந்த பந்து வீச்சு பெறுபேறாகவும் இது அமைந்தது. மற்றும் அஸ்வின், ஓஜா தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 155 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இந்திய அணி, 19 ஓட்டங்களைப் பெற்றவேளை முதல் விக்கெட்டை இழந்து தடுமாறியது. தொடர்ந்து களமிறங்கிய ஹோலி, புஜாராவுடன் இணைந்து ஆடினார். இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த இந்த ஜோடி அவுஸ்ரேலிய சுழற்பந்து வீச்சாளர்களை புரட்டியெடுத்தது. இந்த ஜோடி 104 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் பிரிக்கப்பட ஆட்டத்தில் சற்றுப் பரபரப்பு ஏற்பட்டது. தொடர்ந்து வந்த சச்சின், ரகானே அடுத்தடுத்து விக்கெட்டுக்களைப் பறிகொடுக்க போட்டி பரபரப்பானது. இதன் பின்னர் களமிறங்கிய டோனி கள நிலையை உணர்ந்து ஆடி அணியின் வெற்றியை உறுதி செய்தார். இறுதியில் இந்திய அணி இரண்டாவது இனிங்ஸிற்காக நான்கு விக்கெட்டுக்களை இழந்து 158 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. இதில் புஜாரா ஆட்டமிழக்காது 82, ஹோலி 41, டோனி 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நதன் லயன், மைக்ஸ்வெல் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இவ்வெற்றியின் மூலம் நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை இந்திய அணி முழுமையாகக் கைப்பற்றிக் கொண்டது. அத்துடன் கடந்த 81 வருட கால இந்திய கிரிக்கெட் வரலாற்றில் நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை முழுமையாக வென்ற முதல் சந்தர்ப்பமாகவும் இது அமைந்தது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக ஜடேஜா, தொடர் நாயகனாக அஸ்வின் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.









# வேகங்கள் சீற்றம் விரைவாக சாயும் விக்கெட்டுக்கள்

(ஒக்லண்ட்)

வேகங்களின் சீற்றத்தால் ஒக்லண்ட் டெஸ்டில் விக்கெட்டுக்கள் மிக வேகமாக வீழ்த்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி நியூசிலாந்தின் ஒக்லண்ட்டில் நடைபெற்று வருகின்றது.



இதில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 50 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மூன்றாம் நாள் ஆட்டத்தை இங்கிலாந்து அணி தொடர்ந்தது. இயன் பெல்லும், கம்ப்ரனும் தமது கணக்கை நிதானமாகத் தொடங்க முற்பட்டனர். ஆனால், நிலைத்து நிற்க முற்பட்ட இந்த ஜோடி சௌத்தியால் பிரிக்கப்பட்டது. தொடர்ந்து வேகமுற்று சிறப்பான முறையில் பந்து வீசிய ரிம் சௌத்தி, போல்ட் இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்களை மிக வேகமாக களத்தை விட்டு வெளியேற்றினர். ஒரு கட்டத்தில் இங்கிலாந்து அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 72 ஓட்டங்களைப் பெற்று திக்கித்திளைத்திருந்தது. இந்நிலையில் ஆறாவது விக்கெட்டுக்காக இணைந்த ரூத், மட் ப்ரியர் இணை, கள நிலையை உணர்ந்து பொறுமையாக ஆடி ஓட்டங்களைக் குவிக்க முற்பட்டது. இதில் மட் ப்ரியர் அதிரடியாக பவுண்டரிகளை விளாசினார். இந்த ஜோடியை பிரிக்க பல வியூகம் வகுத்த கப்டன் மக்கலம், ஒரு வழியாக வாக்னர் மூலம் இந்த ஜோடியைப் பிரித்தார். இந்த ஜோடி ஆறாவது விக்கெட்டுக்காக 101 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் பிரிக்கப்பட்டது. தொடர்ந்து வந்தவர்கள் போல்ட், சௌத்தி ஆகியோரின் பந்து வீச்சுக்கு இரையாகி வெளியேறினர். இறுதியில் இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 204 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மட் ப்ரியர் 133 பந்துகளை எதிர்கொண்டு 13 பவுண்டரிகள் அடங்லாக 73, ருத் 176 பந்துகளை எதிர்கொண்டு நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 45, ட்ரொட் 27, இயன் பெல் 17 ஓட்டங்களைப் பெற்றனர். ஏனைய வீரர்கள் குறைந்த ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் போல்ட் ஆறு, ரிம் சௌத்தி மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர். பதிலுக்கு 239 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடி-வரும் நியூசிலாந்து அணி, இங்கிலாந்து வேகப்பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறி வருகின்றது. இதில் புரொட், அண்டர்சன் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் நியூசிலாந்து அணி தடுமாறுகின்றது. இறுதியில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்ட வேளை, நியூசிலாந்து அணி மூன்று விக்கெட்டுக்களை இழந்து 35 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் புல்ரன் 14, ப்றௌலின் 13 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காதுள்ளனர். பந்து வீச்சில் புரொட் இரண்டு, அண்டர்சன் ஒரு விக்கெட்டை வீழ்த்தியுள்ளனர். ஏழு விக்கெட்டுக்கள் கைவச வைத்துள்ள நியூசிலாந்து அணி 274 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது. இன்று போட்டியின் நான்காம் நாளாகும். நியூசிலாந்து முதல் இனிங்ஸ் 443.

# ஆர்தரை நீக்க முடிவு

(மெல்போர்ன்)

இந்தியத் தொடருக்குப் பின்னர் அவுஸ்ரேலிய அணியின் பயிற்சியாளர் மிக்கி ஆர்தர் மாற்றப்படுவார் எனத் தெரிகிறது. தென்னாபிரிக்காவின் முன்னாள் வீரர் மிக்கி ஆர்தர். ஓய்வுக்குப் பின்னர் கடந்த 2005 முதல் 2010 வரை தென்னாபிரிக்க அணியின் பயிற்சியாளராக இருந்தார். அந்த நாட்டு கிரிக்கெட் சபையுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக விலகிய இவர், தற்போது அவுஸ்ரேலிய அணியின் பயிற்சியாளராக உள்ளார்.

தற்போதைய இந்தியத் தொடரில் அவுஸ்ரேலிய அணி 0-4 என, தோல்வியடைந்ததை அடுத்து, இவரது பதவிக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. ஆர்தருக்குப் பதில், அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் வீரர் டரன் லீமனை நியமிக்க வாய்ப்பிருப்பதாக தெரிகிறது. கடந்த 2009 ஐ.பி. எல்., சீசனில் இவரது தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணி கிண்ணத்தை வென்றது. தற்போது அவுஸ்ரேலியாவின் குயின்ஸ்லாந்து அணிக்கு பயிற்சியாளராக லீமன் கடமையாற்றி வருகின்றார். . இதுகுறித்து குயின்ஸ்லாந்து அணியின்

தேர்வுக்குழுத் தலைவர் டிரிவர் ஹான்ஸ் கூறுகை யில், லீமன் சிறந்த கிரிக்கெட் வீரர். தனக்குள்ளிருக்கும் அனைத்து கிரிக்கெட் விடயங்களையும் இளம் வீரர்களுக்கு கற்றுக்கொடுப்பதில் ஆர்வ மாக உள்ளவர். தேசிய அணியின் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டால், வீரர் களுக்கு நல்ல பலன் கிடைக்கும். அவர் நியமிக்கப்படவேண்டும் என நாமும் விரும்புகிறோம் எனத் தெரிவித்தார்.

# சிக்ஸரின்றி அதிக ஓட்டம் ட்ரொட் புதிய சாதனை

(ஒக்லாண்ட்)

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் சிக்ஸர் அடிக்காமல் அதிக ஓட்டங்களைப் பெற்ற வீரர் என்ற சாதனையை இங்கிலாந்து வீரர் ஜோனாதன் ட்ரொட் முறியடித்துள்ளார்.

நியூசிலாந்து அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியின் முதல் இனிங்ஸில் 27 ஓட்டங்களை ட்ரொட் பெற்றதன் மூலம், சிக்ஸர்கள் அடிக்காமல் அதிக ஓட்டங்களைக் கடந்த வீரர் என்ற சாதனை படைத்துள்ளார்.

முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் விஜய் மஞ்ச்ரேகர் 1951இலிருந்து 1965 வரை 55 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி ஒரு சிக்சர் கூட அடிக்காமல் 3,208 ஓட்டங்களைப் பெற்றமையே இதுவரை சாதனையாக இருந்தது. தற்போது ட்ரொட் 3,215 ஓட்டங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

# பள்ளிகளில் காலை உடற்பயிற்சி கட்டாயமாக்கியது கல்வி அமைச்சு

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் தினமும் காலை சகல மாணவர் களும் உடற்பயிற்சி கட்டாயம் செய்ய வேண்டும் என கல்வி அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள புதிய சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டு முதல் பாடசாலை விளையாட்டு கள் தொடர்பாக புதிய மாற்றங்கள் அமுல்படுத் தப்படவுள்ளன. இது தொடர்பான விளக்க சுற்று நிருபங்கள் கல்வி அமைச்சு சகல வலயங்களுக்கும் அனுப்பிவைத்துள்ளது. இச்சுற்று நிருபத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில்உள் ளடக்கப்பட்டுள்ள ஏனைய விபரம் வருமாறு: எதிர் வரும் காலங்களில் 11, 13 வயதுப் பிரிவுப் போட்டி கள் வலய மட்டத்திற்கு மேல் நடைபெறமாட்டாது. 15 வயதிற்கு மேற்பட்ட பிரிவுகளுக்கு மட்டுமே நடத்தப்படும். சிறு வயதி ல் போட்டி மனப்பான்மை யினை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக இம்முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாடசாலை மட்டத்திலும், ஏனைய மட்டங்களிலும் 21 வயதுப் பிரிவுக்கு புள்ளிகள் வழங்க வேண்டாம் எனவும், பாடசாலை மட்டத்தில், பாடசாலைகளில் 21 வயதுப் பிரிவில் மாணவர் தொகை குறைவாக இருப்பதால் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாடசாலை விளையாட்டுப் போட்டிகளிலும், ஏனைய கோட்ட, வலய, மாவட்ட,மாகாண, தேசிய மட்டத்தில்கூட ஒலிம்பிக் கொடி ஏற்றத் தேவை யில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கொடி ஒலிம்பிக் போட்டிக்குரியது.எனவே, ஏனையபோட்டி களுக்கு விளையாட்டு கொடிகள் உருவாக்கப்பட் டிருந்தால் அக்கொடிகள் ஏற்றப்படலாம்.

க.பொ.த. சாதாரண பரீட்சையில் தோற்றியவர் பெறுபேறு வரும் வரை போட்டிகளில் பங்கு பற்றலாம். கணித பாடத்தில் சித்தி பெறாது க.பொ.த. (உயர்தரம்) கற்கும் மாணவர்கள் பாட- சாலை சார்பில் போட்டிகளில் பங்குபற்ற முடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு பாடசாலையில் இருந்து இன்னொரு பாடசாலைக்கு மாணவர்கள் மாறிச் செல்லும் பொழுது அம்மாணவர் முன்பு கற்ற பாடசாலை யில் குறிப்பிட்ட வகுப்பு இருக்குமாயின், குறித்த மாணவன் ஒரு வருடத்திற்கு போட்டிகளில் பங்கு பற்ற முடியாது.

குறிப்பிட்ட மாணவன் புதிதாக இணைந்த பாட- சாலையில், அவர் கற்கும் பாடம் முன்னர் கற்ற பாடசாலையில் இல்லாதுவிடில் போட்டிகளில் பங் கேற்க அனுமதிக்கப்படும்.

அடுத்த வருடம் சுகாதாரமும், உடற்கல்வியும் கட்டாய பாடங்களில் ஒன்றாக மாற்றப்படுகின்றது எனவும், ஒவ்வொரு பாடசாலையிலும் காலையில் 10 நிமிட நேரம் உடற்பயிற்சி செய்யப்படவேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (42)

## விளையாட்டுச் செய்திகள்

## சங்கானை ஞானவைரவர் சம்பியன்

இணுவில் கலாஜோதி சனசமூக நிலையத்தின் 54ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை சங்கானை ஞானவைரவர் அணி கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது.

கடந்த 13ஆம் திகதி கலாஜோதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் இணுவில் இந்து அணியும், சங்கானை ஞானவைரவர் அணியும் மோதின. இதில் சிறப்பாக ஆடிய சங்கானை ஞானவைரவர் அணி வெற்றி பெற்றுக் கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது. தொடர்ந்து உள்ளூர் அணிகளுக்கிடையில் நடைபெற்ற கால்பந்தாட்டப் போட்டியில் இணுவில் அண்ணமார் அணியை வீழ்த்தி இணுவில் மத்தி அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது. (120)

## வலய மட்ட கால்பந்து மானிப்பாய் இந்து சம்பியன்


மானிப்பாய் இந்து


மகாஜனாக் கல்லூரி

(வட்டுக்கோட்டை)

வலிகாமம்கல்விவலயப்பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான கால்பந்தாட்டப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி வலய மட்ட சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் தெல்லிப்பளை மகா ஜனாக் கல்லூரியும் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் சம பலம் கொண்ட அணிகளாக காணப்பட்ட போதிலும் மானிப்பாய் இந்துக் கல்லூரி தமக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை உரிய முறையில் பயன் படுத்திக் கொண்டபோதிலும் மகாஜனாக் கல்லூரி தமக்குக் கிடைத்த தண்டனை உதையை உரிய முறை யில் பயன்படுத்த தவறியமையால் தோல்வியைத் தழுவ வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் பெற எடுத்த முயற்சிகள் கைகூடாத நிலையில் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது. இரண்டாம் பாதி ஆட் டத்தில் இரு அணிகளும் புதிய உற்சாகத்துடன் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் கோல் பெற எடுத்த முயற்சிகள் எதிரணிகளினால் முறியடிக்கப்பட்ட போதிலும் மானிப் பாய் இந்துக் கல்லூரி தமக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை உரிய முறையில் பயன்படுத்தி ஒரு கோலை பெற்றுக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து ஆட்டம் விறு விறுப்படைந்த போதிலும் ஆட்டம் முடிவடையும் வரை இரு அணி களினாலும் மேலும் கோல் பெற முடியாத நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் மானிப்பாய் இந்துக்கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் தெல்லிப்பளை மகாஜனாக் கல் லூரியை வெற்றி பெற்று வலய சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (93)

## ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் கரப்பந்தில் இரு பிரிவுகளில் சம்பியன்


அதிபர், பொறுப்பாசிரியர்களுடன் சம்பியன் பட்டம் வென்ற 17 வயதுப் பிரிவு அணி

(ஆவரங்கால்)

கோப்பாய் கோட்ட மட்ட கரப்பந்தாட்டப்போட்டி யில், ஆரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி யாலய பெண்கள் அணி இரு பிரிவுகளில் சம் பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

கோப்பாய் கோட்ட மட்ட பாடசாலைகளுக் கிடையிலான கோட்ட மட்ட கரப்பந்தாட்டப் போட்டித் தொடர் கடந்த 20ஆம் திகதி ஆவ ரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணியும், அத்தியார் இந்துக்கல் லூரி அணியும் மோதின. இதில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணி 25 -21, 17 - 25, 12 - 25 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று கோட்ட மட்ட சம்பியனானது.

இதேவேளை, 15 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் இறுதிப் போட்டியில் ஆவரங்கால் நட்ராஜ இராமலிங்க வித்தியாலயத்தை எதிர்த்து கோப்பாய் மகா வித்தியாலய அணி மோதியது. இப் போட்டியில் ஆவரங்கால் நடராஜ இராம லிங்க வித்தியாலய அணி 25 -19, 20 - 25 , 25 -22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று கோட்ட மட்ட சம்பியனானது.


வடமராட்சிக் கல்வி வலப்ய பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட சதுரங்கப் போட்டி அண்மையில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் நடைபெற்றது. இதில் 15 மற்றும் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான குழுப் போட்டியில் வீரர்கள் மோதுவதையும், நடுவர்கள் அவதானமாகக் கண்காணிப்பில் ஈடுபடுவதையும் காணலாம்.

# தாக்குதல்கள் விபரீத விளைவை தரக்கூடியவை

**- எம்.எஸ்.எம்.ஐயூப் கட்டுரையிலிருந்து.**

தமிழ்நாட்டிற்குச் செல்லும் இலங்கையர்கள் மீதான தமிழ்நாட்டு அரசியல்வாதிகளின் ஆதரவாளர்களால் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. அவற்றின் வரிசையில் மிக அண்மைக் கால சம்பவங்களாக தொடர்ச்சியான இரண்டு நாட்களில் இரண்டு பௌத்த பிக்குகள் தாக்கப்பட்டு இருக்கிறார்கள்.

இவை இலங்கையில் தமிழர்களுக்கு சாதகமான முடிவைக் கொண்டு வருமா அல்லது பாதகமான முடிவைக் கொண்டு வருமா என்பதே இப்போதுள்ள மிக முக்கியமான கேள்வியாக உள்ளது. குறிப்பாக இலங்கையில் பெரும்பான்மை மக்கள் இன ரீதியாக கொதிப்படைந்துள்ள ஒரு சந்தர்ப்பத்தில் இச்சம்பவங்கள் எந்த திசைக்கு நிலைமையை இட்டுச் செல்லுமோ என்ற அச்சம் பலர் மனதில் எழுந்துள்ளது.

இலங்கையிலிருந்து தமிழ்நாட்டுக்கு எவரும் செல்ல முடியாது என்றால் தமிழ்நாட்டில் இருந்தும் எவரும் இங்கு வரக்கூடாது என்று ஜாதிக்க ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க கூறியிருந்தார். அது மேலும் ஒரு படி மேல் சென்றால் இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மக்களை மோசமாக பாதிக்கும் அபாயம் இருக்கிறது. ஏனெனில் எங்கும் இனவாதமானது கண்மூடித்தனமானது. இந்திய வம்சாவளி மக்களில் ஆரம்பித்தாலும் அது இறுதியில் எங்கு போய் முடிவடையும் என்றும் கூற முடியாது.




பிக்குகள் மீதான தாக்குதலை மேற்கொண்டோர் வீடியோ கமெராக்களோடு சென்றே அந்தத் தாக்குதல்களை மேற்கொண்டார்கள் என்ற காரணத்தையும் தொடர்ந்து இரண்டு நாட்களாக கமெராக்களோடு சென்று அவ்வாறான தாக்குதல்கள் மேற் கொள்ளப்பட்டுள்ளன என்ற காரணத்தையும் கவனிக்கும் போது தாக்குதல் நடத்தியவர்களிடம் வேறு நோக்கங்கள் இருந்தனவா என்ற சந்தேகமும் எழுகிறது. அந்த வீடியோ படங்கள் ஊடகங்கள் மூலம் காண்பிக்கப்பட்ட போது இலங்கையிலும் அது போன்ற தாக்குதல்கள் இடம்பெற மாட்டாது என்பதற்கு தாக்குதல் நடத்தியவர்களிடம் என்ன உத்தரவாதம் இருந்தது? இல்லாவிட்டால் அது தான் அவர்களின் நோக்கமா?

இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக இனவாதத்தை தூண்டுவதில் பல்வேறு பௌத்த குழுக்கள் போட்டி போடுவதைப் போல தமிழ்நாட்டிலும் இலங்கைக்கு எதிராக குரல் கொடுப்பதில் போட்டியொன்று உருவாகியிருக்கிறது. அதனால் இவர்கள் இவ்வாறு கமெராக்களுடன் சென்று தாக்குதல்களை மேற்கொணடு மற்றவர்களை விஞ்ச முற்பட்டார்கள் என்றும் வாதிடலாம். ஆனால் அதனால் அவர்கள் சர்வதேச சமூகத்தின் முன் தமிழ்நாட்டுக்கு எதிராக குரல் எழுப்ப இலங்கை அரசாங்கத்திற்கும் வாய்ப்பளித்துள்ளனர்.

இப்போது இலங்கை தமிழ்நாட்டுக்கான விமான சேவைகளை அரைவாசியால் குறைத்துள்ளது. தமிழ்நாட்டுக்கான பயணத்தடை விதிப்பது தொடர்பாகவும் கருத்துக்கள் வெளியாகின. உத்தியோகபூர்வ பயணத் தடை இல்லாவிட்டாலும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தமிழ்நாட்டுக்குச் செல்ல வேண்டாம் என்று கூறியிருக்கறார். தமிழ் வியாபாரிகளும் தமிழ் மக்களுமே இதனால் கூடுதலாக பாதிக்கப்படுவார்கள்.

## சினிமாவில் விருப்பம் இல்லை!



'பேசும் படம்' பத்திரிகையின் உதவி ஆசிரியராக நான் இருந்த சமயம். அப்போது ராஜாஜி முதல்வராக இருந்தார். சென்னை தியாகராய நகரில், அவர் தன் சொந்த வீட்டில் எவ்வித ஆடம்பரமும் இல்லாமல் இருந்தார். முன் கூட்டியே அவரை சந்திக்க அனுமதி பெற்று, அவரது இல்லத்திற்கு சென்றேன். மாடிப் பகுதியில் தங்கியிருந்தார். காரிய தரிசியிடம் வந்த விவரம் தெரிவிக்கப்பட்டு, விசிட்டிங் கார்டையும் கொடுத்து அனுப்பினேன் அழைத்தார்.

'பேசும் படம்' ஆண்டு மலருக்காக, அவரது வாழ்த்து செய்தியும், கட்டுரையும் வழங்கும்படி கேட்டுக் கொண்டேன். பதில் ஏதும் அவர் பேசவில்லை. 'என் விசிட்டிங் கார்டின் பின்புறத்திலேயே, 'சினிமாவின் மீது எனக்கு விருப்பம் கிடையாது...' என்று ஆங்கிலத்தில் எழுதி, என்னிடம் தந்து, விடை கொடுத்து அனுப்பி விட்டார். கீழே வந்த நான், மறுபடியும் அவரிடம் சென்று, 'இந்த விசிட்டிங் கார்டில் எழுதியுள்ளதை மலருக்கு பயன்படுத்திக் கொள்ளலாமா?' என்று பணிவுடன் கேட்டேன்.

என்னிடமிருந்து விசிட்டிங் கார்டை திரும்பவும் வாங்கிக் கொண்டு, என்னை அனுப்பி விட்டார்.

அதுதான் ராஜாஜி.

**('பாரத ரத்தினங்கள்' நூலில் பொம்மை சாரதி.)**

## பிழையின்றித் தமிழ் 7

**- ஞானச்செல்வன் -**



**ஞானசம்பந்தர் - ஞானச் செல்வர்**

இரண்டிலும் ஞான என்பது நிலைமொழி. ஒன்றில் ஒற்று மிகாமலும், ஒன்றில் மிகுந்தும் வந்துள்ளதேன்? சம்பந்தர் (சம்பந்தம்) வடசொல். "ஸய" என்ற ஒலியை உடையது. செல்வர் என்பது தமிழ்ச்சொல். செ (che) என அழுத்தி ஒலிக்கப்படுதலின் வல்லெழுத்து மிகுந்தது. ஞானச்சம்பந்தர் என்பதும் ஞான செல்வர் என்பதும் பிழையாகும்.

**ஞானபீடம் - இலக்கியப் பீடம்**

ஞான பீட விருது என்கிறோம். இங்கே ஒற்று மிகவில்லை. இலக்கியப் பீடம் இதழ் என்கிறோம். இங்கே ஒற்று மிகுந்துள்ளது. ஏன்? ஞானம், பீடம் இரண்டும் வடசொற்கள். B-பீடம் என்பது இருக்கை. "இலக்கியம்" தமிழ். B-பீடத்தையும், P-பீடம் எனத் தமிழ் ஒலிப்படுத்தி உரைத்தலால் இலக்கியப்பீடம் என்று ஒற்று மிக்கது. மற்றும் பீடு + அம் என்றும் பிரித்துப் பெருமை, அழகு எனப் பொருள் காணலும் ஆகும். (அம்-விகுதி)

**ஒருகால் - ஒருக்கால்**

"உன்னால் ஒருக்காலும் இதைச் செய்ய முடியாது" என்று பேசுகிறோம். ஒரு பொழுதும், எந்தச் சமயத்திலும் முடியாது என்பதே இதன்பொருள். ஆனால் இச்சொல் ஒருகாலும் என்றிருப்பதே முறை, நெறி. இங்கே வல்லொற்று மிகாது. ஒரு பொழுதும் என்பதை, ஒருப்பொழுதும் என்று சொல்லுவோமா? இலக்கியச் சான்று: "ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும் முருகா என்றோதுவார் முன்"

**எதிர்க்கட்சி - எதிர்கட்சி**

எதிரில் உள்ள கட்சி அல்லது எதிரியாக இருக்கும் கட்சி எதிர்க்கட்சி. ஒரு விளையாட்டில் இரண்டு கட்சிகள் மோதும்போது எதிர் எதிரே இருந்து மோதுவதால் எதிர்க்கட்சி எனல் சரியே. இவ்வாறே நாடாளுமன்றத்திலும் ஆளும் கட்சிக்கு வரிசைக்கு எதிரே இருப்பது எதிர்க்கட்சி எனல் பொருத்தமே. ஆனாலும் எதிர்க்கட்சி என்ன செய்கிறது? நேற்று எதிர்த்தது, இன்று எதிர்க்கிறது, நாளையும் எதிர்க்கும். எதிர்த்த, எதிர்க்கிற, எதிர்க்கும் கட்சியை எதிர்கட்சி என வினைத்தொகையாகச் சொல்லுதலும் சரியாகுமன்றோ?

**ஒற்று இரட்டித்தல்:**

ஒற்றுமிகுதலோடு சேர்த்து எண்ணத்தக்கது ஒற்று இரட்டித்தல் என்னும் இலக்கண விதியாகும். சோறு + பானை = சோறுப் பானை என்று எழுதுவதில்லை. சோற்றுப்பானை என்கிறோம். ஆறு + வழி = ஆற்றுவழி என்கிறோம். சோறு, ஆறு என்பவற்றுள் (ற்+உ=று) உள்ள "ற்" மற்றுமொன்று கூடி வருவதால் ஒற்று இரட்டித்தல் என்றுரைக்கிறோம். சோ+ற்+ற்+உ =(சோற்று) ஒற்று இரட்டித்த பின் வலி (வல்லொற்று) மிகுந்து சோற்றுப் பானை என்றாகிறது. வழுக்கியாறு + இல் = வழுக்கியாற்றில் என இங்கும் ஒற்று இரட்டித்தல் வேண்டும். வழுக்கியாறில் என்று எழுதுவது பிழை. ஆற்றில் வெள்ளம் வந்தது என்றுதானே சொல்லுகிறோம். ஆறில் வெள்ளம் வந்தது என்று சொல்வதில்லையே. மாடு+சாணம்= மாட்டுச்சாணம் என்கிறோம். வீடு + சோறு= வீட்டுச் சோறு என்கிறோம். இந்த இலக்கணத்தை மறக்க வேண்டாம்.

கிணறு + தவளை = கிணற்றுத் தவளை. காடு + பாதை = காட்டுப் பாதை. கட்டுப்பாடு + அறை = கட்டுப்பாட்டறை எனச் சொல்க. மேம்பாடு + திட்டம் = மேம்பாட்டுத்திட்டம் என்க. நம்நாடு + சட்டம் = நம்நாட்டுச் சட்டம் தானே. விளையாட்டு செய்திகள் என்று தொலைக்காட்சியில் காட்டுகிறார்கள். விளையாட்டுச் செய்திகள் என்று வல்லொற்று மிகுதல் வேண்டும். விளையாட்டைப் பற்றிய செய்திகள் என உருபும் பயனும் உடன் தொக்க தொகை இதுவாம். விளையாட்டுச் செய்திகளை விளையாட்டாய் எண்ணாதீர் (இக்குறிப்பில் ஒற்று இரட்டித்தல் இல்லை. வல்லொற்று மிகுதல் மட்டுமே)

4


# சத்தியமே கலைக்கு ஆதாரம்

**- சாரு நிவேதிதா -**

தமிழ்நாட்டில் சினிமா என்பது மதம். பாலா என்பவர் அந்த மதத்தைச் சேர்ந்த ஒரு கடவுள். அதனால்தான் பாலாவின் படத்தை நான் விமர்சித்ததுமே என்னை பேஸ்புக்கில் திட்ட ஆரம்பித்து விட்டார்கள். இந்த மூடர்களுக்கு பாலாவின் நான் கடவுள் படத்தை நான் வெகுவாக சிலாகித்து இருந்தேன் என்ற விஷயம் கூடத் தெரியாது. ஆதி பகவன், முகமூடி என்ற குப்பைகளைப் பார்த்துச் சலித்துக் கிடக்கும் இவர்களுக்கு பரதேசி மாதிரி ஒரு படம் க்ளாஸிக் காகத் தோன்றுவது சகஜம்தான். அதனால் இவர்களை மன்னித்து விட்டு மேலே செல்வோம்.

நான் கடவுள்தான் பாலாவின் படங்களிலேயே ஓரளவு சிலாகிக்கக் கூடிய படம். ஆனால் அதிலும் கூட முடிவில் ஒரு பாஸிஸப் பார்வையை வைத்து படத்தைக் கொன்று விட்டார் பாலா. கண் இல்லாத அந்தப் பெண் உயிரோடு வாழவே லாயக்கு இல்லை என்று அவளைக் கழுத்தை அறுத்துக் கொன்று விடுகிறான் அகோரி. இதே காரியத்தைத்தானே ஹிட்லரும் செய்தான்.

யாருக்காவது கண் இல்லையா, கால் இல்லையா, அவர்களுக்கு இந்த உலகில் வாழ அருகதை இல்லை. இதுதான் நான் கடவுளில் பாலாவின் செய்தி. ஆனால் குழந்தைப் பிச்சைக்காரர்களைப் பற்றிய அதே கதையைக் கொண்ட ஸ்லம்டாக் மில்லியனர் எத்தகைய அபூர்வமான கலாசிருஷ்டியாக மாறியது என்பதையும் நான் ஏற்கனவே நான் கடவுளோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறேன். அதை வாசித்தீர்களானால் தமிழ்ப் படம் எங்கே தோற்கிறது ஆங்கிலப் படம் எங்கே ஜெயிக்கிறது என்பதைக் கண்டு கொள்ள முடியும்.



எனக்கு ஒன்றும் பாலா வேண்டாதவர் இல்லை. நான் அவருடைய படைப்பை ஆராய்கிறேன். எங்கே குற்றம், எங்கே தோற்றுப் போகிறது என்று சொல்கிறேன். இதற்கு பாலாவும் பாலாவின் ரசிகர்களும் எனக்கு நன்றிதான் சொல்ல வேண்டும். நான் கடவுளிலும் பார்த்தால் அதே தமிழ் சினிமா டெம்ப்ளேட் தான் வைக்கப்படுகிறது. ஹீரோ, வில்லன், ஹீரோயின், நகைச்சுவை. கடைசியில் வில்லனையும் அவனுடைய அடியாட்களையும் ஹீரோ ஒண்டி ஆளாக நிராயுதபாணியாக நின்று அடித்து துவம்சம் பண்ணிக் கொன்று விடுவான். இதே டெம்ப்ளேட்தானே நான் கடவுளிலும் வருகிறது? ஸ்லம்டாக் மில்லியனரில் இந்தப் பிரச்சினை இல்லையே?

சரி, நம்பிக்கையே இல்லாத, மிக மிகக் கொடூரமான வதைமுகாம் வாழ்க்கையைக் காண்பிக்கும் ஷிண்ட்லர்ஸ் லிஸ்ட், பியானிஸ்ட் ஆகிய இரண்டு படங்களிலும் தெரிந்த நம்பிக்கை என்ற விஷயம் பரதேசியில் ஏன் இல்லை என்று இப்போது பார்ப்போம்.

காரணம், தமிழ் சினிமா பார்முலாவான நல்லவன், கெட்டவன், ஹீரோ வில்லன் என்ற binary opposition-இலேயே பாலாவும் மாட்டிக் கொண்டதுதான். இந்த பார்முலாவை விட்டு வெளியே வர வேண்டுமானால் வாழ்க்கையைப் பற்றிய தரிஸனம் (vision) வேண்டும். இந்த தரிஸனம் ஒருவருக்கு புத்தகங்களினால் வரலாம் உலக சினிமாவைப் பார்ப்பதன் மூலம் வரலாம். ஆனால் எனக்கு எல்லாம் தெரியும் என்ற கர்வம் இருந்தால் இந்த தரிஸனம் நம் பக்கத்திலேயே வராமல் ஓடிப் போய் விடும். பாலாவின் பேட்டிகளைப் பார்த்தால் அவர் தன்னை ஒரு மாபெரும் கலைஞனாக நம்புவதாகத் தெரிகிறது. போதாக்குறைக்கு அனுராக் காஷ்யப்களும் தமிழ்ப் பத்திரிகைகளும் இருக்கின்றனர். சி.என். அண்ணாதுரையைக் கூடத்தான் தென்னாட்டு பெர்னார்ட்ஷா என்றார்கள். இதிலெல்லாம் போய் ஒருவர் சிக்கிக் கொள்ளக் கூடாது. ஏபிசிடியே தெரியாத ஒரு கூட்டத்தில் ஒருவர் அழகாக ஆங்கிலம் பேசினால் அவரை அறிஞர் என்று சொல்வது எதிர்பார்க்கக் கூடியதுதானே? அதனால்தான் ஆதி பகவன், முகமூடி போன்ற ஆக மொக்கைப் படங்களைப் பார்க்க விதிக்கப்பட்டிருக்கும் தமிழ் ரசிகர் கூட்டம் பாலாவையும் கலைஞன் கலைஞன் என்கிறது. பாலாவும் அதை நம்பத் தலைப்பட்டு விட்டார்.

பாலாவின் படங்களிலும் மேலே சொன்ன ஹீரோ வில்லன், நல்லவன், கெட்டவன் தமிழ் சினிமா டெம்ப்ளேட் தான் செயல்படுகிறது. பரதேசியில் தேயிலைத் தோட்டத்துக்குப் புலம் பெயரும் கிராமத்து மக்கள் அனைவரும் நல்லவர்கள். அவர்களை அடித்து உதைத்துத் துன்புறுத்தி சித்ரவதை செய்யும் கங்காணியும் ஆங்கிலேயர்களும் கெட்டவர்கள். வாழ்க்கையை இந்த ரீதியில் பார்த்தால் எப்படி ஐயா நல்ல படம் எடுக்க முடியும்?

(தொடரும்)

# இவர்கள் இப்படி!




- சுரங்கத் தொழிலாளியின் மகனாகப் பிறந்து சுரங்கம் வெட்டியவர், பகலெல்லாம் ஆடு மேய்த்துவிட்டு இரவெல்லாம் பள்ளிகளில் படித்து அறிவைத் தேடிக் கொண்டவர் - ரஷ்யாவின் பிரதமராக இருந்த குருசேவ்.
- புகழ் பெற்ற அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜக், ஒரு காலத்தில் கூடையில் காய்கறிகளைத் தூக்கிச் சுமந்து விற்றவர்.
- எட்டு வயதில் ஏர் பிடித்து, பதினான்கு வயதில் திருமணம் செய்து பள்ளி ஆசிரியராக வர நினைத்து முடியாமல் போய் சீனப் பிரதமரானார் மா சே துங்.
- செல்வத்திலே பிறந்து, சிறைகளில் பல்லாண்டைக் கழித்து ஈடு இணையற்ற புகழும் பெருமையும் பெற்றவர் நேரு.
- நெப்போலியனை நீல நதிப் போரில் வென்று புகழ்பெற்ற நெல்சன் ஒரு கால் ஊனமானவர்; ஒரு கண்ணும் தெரியாது.
- கண்பார்வை குறைவு, ஒரு கை முடக்கம், தந்தை குடிகாரர், தாய் மனநிலை சரியில்லாதவர். இத்தனை துயரத்தையும் மீறி கோள்களின் இயக்கம் குறித்த விதியைக் கண்டுபிடித்தார் கெப்ளர்.
- எழுத்துலகில் புகழ்பெற்ற சோமசெட்மாம் திக்கு வாய்க்காரர்.
- ரோமாபுரிச் சக்கரவர்த்தி ஜூலியஸ் சீசர் காக்காய் வலிப்பு நோய் உடையவர்.

# கடவுள் காப்பாற்றுவாரா?

ஒரு ஆன்மிகவாதி ஒரு மடத்தில் உபதேசம் செய்து கொண்டிருந்தார்.

திடீரென்று அங்கிருந்த கூட்டத்தினர் அங்குமிங்கும் ஓடத் தொடங்கினர். காரணம் அருகிலிருந்த ஆற்றின் கரை உடைந்து வெள்ளம் ஊருக்குள்ளும், மடத்திற்குள்ளும் வந்து கொண்டிருந்தது.

மடத்தில் தண்ணீர் மட்டம் உயர்ந்து கொண்டிருந்தது.

அந்த ஆன்மிகவாதி, 'நான் கடவுள் நம்பிக்கை உள்ளவன். கடவுள் என்னைக் காப்பாற்றுவார்' என்று சொல்லி பிரசங்கம் செய்து கொண்டிருந்தார்.

ஊர் மக்கள் ஒரு படகை அனுப்பி, 'குருவே இதில் ஏறி தப்பித்து வந்துவிடுங்கள்' என்றனர்.

அதை அந்த ஆன்மிகவாதி ஏற்கவில்லை.


சிறிது நேரத்தில் மற்றொரு படகை அனுப்பி, 'இதிலாவது ஏறி வந்து விடுங்கள்' என்றனர்.

அவரோ அதையும் ஏற்க மறுத்துவிட்டார்.

தண்ணீர் மட்டம் அதிகரித்து இடுப்பளவை எட்டியது.

மக்களும் குருவை எப்படியாவது காப்பாற்றிவிட வேண்டுமென்று மூன்றாவதாக ஒரு படகை அனுப்பினர்.

அந்த ஆன்மிகவாதி அந்தப் படகிலும் ஏறாமல், 'கடவுள் என்னைக் காப்பாற்றுவார். அவர் என்னைக் கைவிட மாட்டார்' என்றார்.



சிறிது நேரத்தில் தண்ணீர் கழுத்தளவுக்குப் போய் நீரில் மூழ்கி இறந்து போனார்.

வரும் வாய்ப்புகளை நாம்தான் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கிடைக்கும் வாய்ப்புகளை எல்லாம் தவறவிட்டுவிட்டு பின்னர் நாம் துன்பத்தில் மூழ்கிப் போய்விடக் கூடாது.

# மற்றொரு பூமி?



பூமியைப் போன்ற தோற்றமுடைய புதிய கிரகத்தை ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இந்தக் கிரகத்தில் உயிர் வாழ்வதற்குத் தேவையான தட்ப வெப்ப நிலையும், தண்ணீரும் இருப்பதாக அந்த விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து சுவிட்சர்லாந்தின் ஜெனிவா நகரில் உள்ள விண்வெளி ஆய்வு மையத்தைச் சேர்ந்த விஞ்ஞானியும், இந்தப் புதிய கிரகம் குறித்த ஆய்வில் ஈடுபட்ட குழுவின் தலைவருமான ஸ்டீபன் உத்ரி கூறுகையில், சூரிய குடும்பத்திலிருந்து இது தனித்து வெளியே இருக்கிறது. சிவப்பு நிறத்தில் இந்தக் கிரகம் காணப்படுகிறது.

இதற்கு OGLE-2005-BLG-390Lb என பெயரிடப்பட்டுள்ளது. பூமியை விட மிகப் பெரிதாக இது இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இது கிளீஸ் 581 என்ற நட்சத்திரத்தை சுற்றி வந்து கொண்டுள்ளது. இந்தப் புதிய கிரகத்தில் பாறைகள் நிறைந்து காணப்படுவதாக கணித்துள்ளோம். அதேபோல உயிரினங்கள் வசிக்கக் கூடிய தட்பவெப்ப நிலையும், தண்ணீரும் இருப்பதாகவும் தெரிகிறது. இந்த கிரகத்தில் பூச்சியம் முதல் 40 பாகை செல்சியஸ் வரை தட்பவெப்பம் நிலவுவதாக கணிக்கப்பட்டுள்ளது. தண்ணீர், திரவ நிலையில் இங்கு இருக்கலாம். சூரியக் குடும்பத்திற்கு வெளியே இதுவரை 200இற்கும் மேற்பட்ட கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவை அனைத்துமே வாயுக்களால் நிரம்பியவை. ஆனால் இந்தப் புதிய கிரகம் கிட்டத்தட்ட பூமியைப் போலவே இருப்பதாக நினைக்கிறோம். இந்தக் கிரகத்தின் சுற்று வட்டம் பூமியின் சுற்று வட்டத்தை விட 1.5 மடங்கு அதிகம்.

இந்தக் கிரகத்தில் பல கடல்களும் இருக்கக் கூடும். பூமியைப் போலவே இது இருப்பதால் இந்தக் கிரகம் குறித்த ஆய்வுகளை அதிகரிக்க வேண்டும். எதிர்காலத்தில் பல அரிய தகவல்களும், ஆச்சரிய தகவல்களும் நமக்குக் கிடைக்கக் கூடும். இந்தப் புதிய கிரகம் பூமியிலிருந்து 125 டிரில்லியன் கிலோமீட்டர் தொலைவில் உள்ளது என்றார் உத்ரி. சிலியில் உள்ள லா சில்லா நகரில் பொருத்தப்பட்டுள்ள அதி நவீன தொலைநோக்கி மூலம் இந்தப் புதிய கிரகதத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.



- ஞாநி

# பரதேசியின் ஒப்பாரக் கொண்டைகளுக்குள்ளே

திரைப்பட இயக்குநர் பாலாவுக்கு முதலில் என் நன்றி. நடிப்பு சொல்லிக் கொடுக்கிறேன் என்று முரட்டுத்தனமாக தான் அடித்துக் காட்டி நடித்துக்காட்டி வேலை வாங்குவதை பகிரங்கமாக வீடியோ எடுத்து வெளியிட்டிருக்கிறார். தன் புதிய படத்துக்கு கவனம் ஈர்க்கும் பப்ளிசிட்டிக்காக இந்த வேலையை அவர் செய்திருந்தாலும், இது தமிழ் சினிமா துறையில் காலம் காலமாக இருந்துவரும் சில கேவலங்களைப் பொது விவாதத்துக்குக் கொண்டு வர எனக்கு உதவியிருப்பதற்காக அவருக்கு நன்றி.

பாலா நடித்துக் காட்டுகிறேன் என்று சொல்லிக் கொண்டு நடிகர்களை குச்சியாலும் கையாலும் காலாலும் அடித்திருப்பது நிச்சயம் அவருடைய மனப் பிறழ்வைக் காட்டுகிறது. அவருக்கு சிகிச்சை தேவைப்படுகிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. தன் மன வக்கிரங்களை ஒரு கலைஞன் கலையாக வடித்து அவற்றிலிருந்து விடுதலை பெற முயற்சிப்பது பொதுவாக நடப்பதுதான் என்றாலும் அந்த முயற்சி இதர மனிதர்களை வதைப்பதாக இருப்பதை ஒருபோதும் ஏற்கமுடியாது.

தமிழ் சினிமாவில்தான் இந்த நடித்துக் காட்டுவது என்ற விசித்திரமான கேவலம் இருந்து வருகிறது. உலகின் மிகப் பெரிய திரைப்பட மேதைகள் யாரும் தங்கள் நடிகர்களுக்கு நடித்துக் காட்டும் வழக்கம் கிடையாது. சிறந்த நடிகர்கள் யாரும் தமக்கு இயக்குநர் நடித்துக் காட்டுவதை ஒருபோதும் விரும்பமாட்டார்கள். அதை அவமதிப்பாகவே கருதுவார்கள்.

நடிகரிடமிருந்து தனக்கு தேவைப்படுவது என்ன என்பதை ஒரு இயக்குநர் நடிகருக்கு சொல்லிப் புரியவைப்பது மட்டுமே தேவை. இயக்குநர் என்ன விரும்புகிறார் என்பதைப் புரிந்து கொண்ட நடிகர், தான் அந்தப் பாத்திரத்தை எப்படி உள்வாங்கியிருக்கிறார் என்பதை இயக்குநருக்கு நடித்துக் காட்டியே உணர்த்த வேண்டும். தன் பாத்திரத்தைப் பற்றி சிந்திக்கவும் சிந்தித்துத் தீர்மானித்ததை தன் உடல் மொழியால் வெளிப்படுத்தவும் தெரிந்தவரே நடிகர். இயக்குநர் நடித்துக் காட்டியதை அப்படியே மிமிக்ரி செய்பவர் சிந்திக்க தெரியாத, இயலாத ஒரு கருவி மட்டுமே.

தங்கள் நடிகர்கள் அப்படி இருப்பதையே பல இயக்குநர்கள் விரும்புகிறாரகள் என்பது வருத்தமான விஷயம். இயக்குநர் நடித்துக் காட்டுவார் அதை நாம் திரும்பச் செய்தால் போதும் என்ற மன நிலை நடிகர்களிடமும் தமிழ்ச் சூழலில் ஆழமாக வேரூன்றிவிட்டது.

இந்த நடித்துக் காட்டுவதாவது அபத்தம். ஆனால் அசலாக தத்ரூபமாக இருக்கவேண்டும் என்று வதைப்பது கொடூரம் பல வருடங்களுக்கு முன்பு ஒரு சினிமா நடிகர் நாடகத்தில் ஒரு பாத்திரத்தில் நடிப்பதற்காக மொட்டை அடிதது கொண்டதைப் பலரும் பாராட்டிய போது எழுத்தாளர் ஜெயகாந்தன் கேடடார்: இதே நடிகர் இதற்கு முன்னால் முஸ்லிம் தளபதி வேடத்தில் நடித்தாரே, அதற்காக சுன்னத் செய்துகொணடாரா என்று. நடிப்பு என்பது அசலாக மாறுவதல்ல. அசலை உணர்த்துவது தான். அடிக்கிற காட்சியில் அடிப்பது போல இருக்க வேண்டுமே தவிர அசலாக அடிக்க முடியாது. பாலா படங்களில் கொலைக் காட்சிகளும் பாலியல் வன்புணர்ச்சி காட்சிகளும் வந்தால அவற்றையெல்லாம் அவர் தன் நடிகர்களுக்கு எப்படி சொல்லிக் கொடுப்பார் என்று கற்பனை செய்யவே கதி கலங்குகிறது.

தமிழ் சினிமா சூழல் எல்லாரையும் அடிமை மன நிலையில் மட்டுமே இயங்கும்படி நிர்ப்பந்திக்கிறது. அதற்குள்ளே நுழையும் சுதந்திர மனமும் சிந்தனையும் உடையவர்களைக் கூட அந்த அடிமைச் சூழல் வேறு விதமாகவே நடந்து கொள்ளக் கட்டாயப்படுத்துகிறது. போலிகளாக இருக்கச் சொல்கிறது.

பாலாவுக்கு பல காலம் முன்பே பாலசந்தரும் பாரதிராஜாவும் நடிகர்களை அடித்த கதைகள் உண்டு. அப்படி அடிப்பதையெல்லாம் பெருமையாகவும் மோதிரக் கையால் குட்டு என்றும் அசட்டுத்தனமாகக் கொண்டாடும் அடிமை புத்திதான் அடிபட்டவர்களுக்கு இருந்து வந்திருக்கிறது. இயக்குநர்கள் மட்டுமல்ல, ஒளிப்பதிவாளர்கள் முதல், நடன இயக்குநர்கள், எடிட்டர்கள் வரை தங்கள் உதவியாளர்களை கொத்தடிமைகளாக நடத்துவதை வேறு எந்த அறிவுசார்ந்த துறையிலும் பார்க்கவே முடியாது.

சினிமாவில் இந்த அடிமை நிலைமை இருப்பதற்குக் காரணம் பணம், புகழ் ஆசைகள்தான்.

இன்று நசுக்கப்படும் ஒவ்வொரு சின்ன நடிகனும், உதவி இயக்குநரும் நாளை தான் மேலே வந்து, புகழையும் பணத்தையும் அடைந்துவிட்டால், தன் வாழ்க்கையே அடியோடு மாறிவிடும் என்ற கனவிலேயே இன்றைய அடிமைச்சுமையை சகித்துக் கொள்கிறார்கள். மேலே வந்ததும், அவர்களும அதுவரை அவர்களை வதைத்தவர்களைப் போலவே தாங்களும் ஆகிவிடுகிறார்கள். அப்படி பிறரை வதைக்கும் போது, 'நாங்கல்லாம் எவ்வளவு கஷ்டப்பட்டு இந்த இடத்துக்கு வந்தோம் தெரியும் இல்ல?' என்று கேட்கவும் செய்வார்கள். அதே கஷ்டங்களை அடுத்து வருபவர்களும் அனுபவிக்கக் கூடாது என்ற அக்கறையும் பரிவும் இருக்காது.

கொத்தடிமைகளாக தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் நடத்தப்பட்ட வரலாற்றைப் பற்றிய படம் பரதேசி! தமிழ் சினிமா அடிமைகளைப் பற்றி யார் எப்போது படம் எடுப்பார்கள்!?


# கதை திருடும் கலை

- கிராபியென் ப்ளாக்

அடுத்தவருடைய கற்பனையை, உழைப்பைத் திருடுவது அல்லது வேறு வகைகளில் அவற்றை லவட்டிக்கொள்வது என்பது தமிழ் சினிமாவில் தொடர்ந்து அரங்கேறிக் கொண்டுதான் இருக்கிறது. இந்தக் கதைப் பஞ்சத்திற்கு யார் மூலகாரணம்? எங்கே தவறுக்கான முதல் விதை ஊன்றப்படுகிறது. தமிழ் சினிமாவில் நூறு வருடங்களாக எத்தனை முயற்சிகள்... விவாதங்கள்! ஏன் இன்னும் கற்பனைக் குதிரை தமிழ் சினிமா இயக்குநர்களின் வீட்டை விட்டு நகர மறுக்கிறது? ஒரு திரைப்படத்திற்கான கருவைத் தேர்ந்தெடுப்பதில் ஏன் இவ்வளவு சிக்கல்கள்? ஆங்கிலத் திரைப்படங்களின் பெரும்பாலான திரைப்படங்கள் நாவலை மையமாக வைத்துதான் இயக்கப்படுகின்றன. இதைப் பலகாலமாக அனுபவம் வாய்ந்த சில இயக்குநர்களும், இலக்கிய ஜாம்பவான்களும் சொல்லியே வந்திருக்கின்றனர். ஆனால் இயக்குநர்களில் பலர் அதைக் காதில் வாங்கிக்கொள்வதேயில்லை. அரிதாக சிலர் மட்டுமே நாவலைத் திரைப்படமாக்கும் முயற்சியில் வெற்றி கண்டிருக்கிறார்கள். ஆனாலும், தமிழ் கூறும் இயக்குநர்களுக்கு இன்னமும் நாவலைத் திரைப்படமாக்குவதில் நிறைய சங்கடங்கள் இருப்பதாகவே கதைக்கிறார்கள்.

ஒரு திரைப்படத்தின் வெற்றி மிகச் சிறந்த திரைக்கதையில் இருக்கிறது. மிகச் சிறந்த திரைக்கதை ஒரு நீண்ட சிறுகதைக்குள்ளோ... நாவலுக்குள்ளோ அடங்கியிருக்கிறது. ஆக.. ஒரு படத்தின் வெற்றி ஒரு சிறுகதையிலும், நாவலிலும் தான் இருக்கிறது (மலையாளத்தில் சாகாவரம் பெற்று நிலைபெற்றிருக்கும் திரைப்படங்கள் பெரும்பான்மை இந்த வகைதான்).

ஒரு வெற்றிகரமான திரைப்படத்துக்கு அடிப்படையாக வலுவான கதை அவசியம் என்று தெரிகிறபோது தமிழில் ஏன் எழுத்தாளனுக்கும், இயக்குநருக்கும் இடையே காலம் காலமாக ஒரு இணக்கமான நல்லுறவு என்பது இல்லாமல் போனது?




இதற்கான பதில் ரொம்ப சாதாரணமானதுதான். இயக்குநர் தன்னுடைய கதையின்மீது அபரிமிதமான நம்பிக்கை கொண்டிருப்பதும், எழுத்தாளனுக்கு இதில் என்ன் வேலையிருக்கிறது என்கிற அலட்சியப்போக்கும், எழுத்தாளனைக் குறைத்து மதிப்பிடுகிற உயர்வகுப்பு மனோபாவமும்தான்! இங்கே தான தோல்விக்கான ஆரம்ப விதையே ஊன்றப்படுகிறது.

தற்போது மனதின் ஒரு மூலையில் சின்னதாக ஒரு சந்தோஷம் எட்டிப்பார்க்கும் அளவிற்கே இயக்குநர்களின் சில வரவுகள் நம்பிக்கையளிக்கிறது. பாலா, லிங்குசாமி, மிஷ்கின், பாலாஜி சக்திவேல், ராம், வெற்றிமாறன், சீனுராமசாமி, கரு. பழனியப்பன் என்று குறிப்பிட்ட இயக்குநர்கள் மட்டுமே எழுத்தாளர்களோடு ஒரு நல்லுறவைக் கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் இத்தகைய இயக்குநர்களிடத்தில் இருந்து ஒரு நல்ல படைப்பை எதிர்பார்த்து ரசிகன் காத்துக்கிடக்கிறான்.

ஒரு திரைப்படத்தில் எழுத்தாளனுக்கான முழுமையான பங்களிப்பை இவர்கள் அளிக்கிறார்களா என்கிற கேள்விக்கும் இப்போதைக்கு பதில் இல்லை.

ஆனால், ஒரு எழுத்தாளனின் படைப்பைக் கொண்டாடுகிற மனநிலை இத்தகைய இயக்குநர்களிடத்திலிருந்து வந்திருக்கிறது. தங்களுடைய கதை குறித்து, எழுத்தாளர்களோடு கலந்து உரையாடுகிற கலாசாரம் பரவியிருக்கிறது. சிலநேரங்களில் எழுத்தாளனின் நூல் வெளியீட்டுக்கும் வந்து கூட்டத்தோடு கூட்டமாய் அடக்கமாய் நிற்கிறார்கள். சென்னைப் புத்தகத் திருவிழாவில் பை நிறைய புத்தகங்களை அள்ளிச் செல்கிறார்கள். இவையெல்லாம் எழுத்தாளனை அற்ப சந்தோஷம் மட்டுமே அடைய வைக்குமே தவிர, முழுமையான சந்தோஷத்தை அளித்துவிடாது.

நடிகர்களுக்குப் பின்னால் காத்துக்கிடக்காமல் தங்கள் கதையையும், திரைக்கதையையும் நம்பிக் களத்தில் இறங்குவதுபோல, இயக்குநர்கள் எப்போது எழுத்தாளனுக்கு முழுமையான அங்கீகாரத்தை அளிக்கிறார்களோ, அப்போது தியேட்டரின் இருக்கைகள் நிரம்புவதை எந்தக் கொம்பானாலும் தடுக்க முடியாது.

# ஜனாதிபதி செயலணி அனுமதிபெற திட்டங்களை சமர்ப்பிக்க வேண்டும்

## - அரச சார்பற்ற நிறுவனங்களிடம் அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திற்குத் தேவையாகவுள்ள திட்டங்களைத் தயாரித்து சமர்ப்பிக்கப்படுமிடத்து அவற்றிற்கான ஜனாதிபதி செயலணியின் அனுமதியைப் பெற்றுத்தர முடியுமென்று யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.செயலகத்தில் நடைபெற்ற அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனான கூட்டத்திலேயே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அன்றைய தினம் பிற்பகல் 2.00 மணிக்கு அரச அதிபர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்த அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளுடனான கூட்டத்தில் சுமார் 35 வரையான யாழ்.மாவட்டத்தில் பணியாற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் கலந்து கொண்டன.

இந்தக் கூட்டத்தின் போது யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரச்சினைகள் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டதுடன், திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

இதேவேளை அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது திட்டங்களில் மாற்றம் செய்து கொள்வதனாலும், பிரச்சினை இருப்பின் தம்முடன் தொடர்புகொண்டு அவ்வாறானவற்றைச் சரி செய்துகொள்ள முடியும் என்றும் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

மேலும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வளலாய்ப் பகுதியில் மிதிவெடியகற்றும் பணிகளை விரைவாக முடித்துத் தரும்படி ஹலோரஸ்ட் நிறுவனத்திடம் கோரப்பட்டதற்கு, அவ்வாறு அவற்றை அகற்றி முடிக்க சுமார் மூன்று மாதங்கள் செல்லும் எனவும் ஹலோரஸ்ட் நிறுவனப் பிரிதிநிதி தெரிவித்தார்.

இதேவேளை செல்வச்சந்நிதி கோவிலிற்கு அருகாமையில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் பாலத்தின் பகுதியில் தூர்ந்து போயிருக்கும் பழைய பாலத்தின் சிதைவுகளை அங்கிருந்து அகற்றவும், குறித்த அரச சார்பற்ற நிறுவனத்திடம் கோரப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இந்தக் கூட்டத்தில் யூ.என். நிறுவனங்கள், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், ஹலோரஸ்ட் போன்ற நிறுவனங்கள் உள்ளடங்கியிருந்தன. (பா)

# யாழ்.பொலிஸாரின் இலவச நடமாடும் சேவை



(சிகரம்)

யாழ்.பொலிஸாரின் இலவச நடமாடும் சேவையொன்று நேற்று முன்தினம் நடைபெற்றது.

யாழ்ப்பாணம், கந்தர்மடம், கொக்குவில், நீராவியடி உள்ளிட்ட பகுதிகளிலுள்ள கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்காக இந்நடமாடும் சேவை நடாத்தப்பட்டது.


யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையில் நடைபெற்ற இந்த நடமாடும் சேவையை யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் வி.பி.இந்து கருணாரட்ன ஆரம்பித்து வைத்தார்.

கண்சிகிச்சை, அடையாள அட்டை வழங்கல், பொலிஸ் முறைப்பாடு மற்றும் முறைப்பாட்டுப் பிரதி வழங்கல், நுளம்பு வலை வழங்கல், தகவல் உதவிப் பிரிவு உள்ளிட்ட சேவைகள் இதில் வழங்கப்பட்டன.

இந்த பொலிஸாரின் நடமாடும் சேவையில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

# பங்குனித் திங்கள் நாளில் பன்றித்தலைச்சி அம்மன்

## பாதமலர் பணிவோம்



இன்று பங்குனித் திங்கள். இது ஒரு சிறந்த திருநாளாகும். உலகெல்லாம் நிறைந்து விளங்குகின்ற ஆதிபராசக்தியான உமையவள் இந்த ஈழத்தின் வடபாலமைந்துள்ள யாழ்.குடாநாட்டிலே, மட்டுவில் எனும் மகிமை மிக்க பதியிலே பன்றித்தலைச்சி அம்மனாக எழுந்தருளி வீற்றிருக்கிறாள்.

வழிபடும் அடியார் பெருமக்களின் இன்னல்களைந்து, துன்பம் போக்கி, துயர் நீக்கி அருள் பாலிக்கும் அந்த அம்பிகைக்கு இன்று பொங்கல் திருநாள். குடாநாட்டின் பல்வேறு பாகங்களிலுமிருந்து இந்த ஆலயத்தை நோக்கிப் படையெடுக்கும் அடியார் கூட்டம் இன்று இங்கு அலைமோதும்.

ஆலயச் சுற்றாடலெங்கும் ஒரே பொங்கல் மயம். தமது வேண்டுதலுக்கிரங்கிச் செவிசாய்த்து இன்னருள் புரிந்து இடுக்கண் நீக்கிய அம்மனுக்கு வைத்த நேர்த்திகளையெல்லாம் பூர்த்தி செய்கின்ற புனித புண்ணிய நாள் இன்றாகும்.

அம்பிகையின் அருளால் மாட்டின் தலை பன்றித்தலையாக மாறியதாகக் கூறப்படும் இந்த ஆலயத்தின் மகிமையும் மகோன்னதமும் சொல்லில் அடங்காது.

கண்ணகி எனும் கற்புக்கரசி இந்தியாவிலேயுள்ள திருச்செங்குன்று என்னும் மலைமீது தேவர்கள் பூமாரி பொழிய ஆகாயத்தினின்றும் இறங்கி வந்த கணவன் கோவலன் வந்த விமானத்தில் ஏறி விண்ணுலகடைந்ததாகப் பேசப்படுகிறது. அதே கண்ணனி அம்மன்தான் இங்கும் எழுந்தருளி வீற்றிருந்து அருள் பாலிப்பதாக நம்பப்படுகின்றது.

அந்த அருள்மிகு ஆலயத்தில் சைவ மக்களாகிய நாங்களும் சென்று அம்மனுக்குப் பொங்கலிட்டு அவளின் இன்னருளுக்குப் பாத்திரமாகி சதுர்வித புருஷார்த்தங்களை அடைந்து இப்பூவுலகில் மங்கள நல்வாழ்வுக்கு அடிகோலுவோமாக.

தொகுப்பு:
சிவநெறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்.



# வேலை வாய்ப்புச் செய்திகள்

திருநெல்வேலியில் உள்ள பிரபல விற்பனை நிலையம் ஒன்றிற்கு சிட்டை எழுதக்கூடியவர்கள் (ஆண்), கணக்குப் பதிவு செய்வோர் (பெண்), பொருட்கள் கட்டுபவர் (ஆண்), தேவைப்படுகின்றனர். தொடர்புகளுக்கு: 021 222 2909.

---

சர்வதேச ரீதியில் இயங்கிவரும் நிறுவனம் ஒன்றிற்கு முகாமைத்துவ பயிற்சியாளர்கள் தேவை. வயதெல்லை 18 தொடக்கம் 28 வரை. தங்குமிட வசதி செய்து தரப்படும். யாழ்ப்பாணம், மன்னார்,. முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா போன்ற மாவட்டங்களுக்கு தேவைப்படுகின்றனர். ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ளலாம். தொடர்புகளுக்கு: யாழ்ப்பாணம் - 077 556 6224, கிளிநொச்சி - 077 190 6728, முல்லைத்தீவு - 077 621 9536, 021 720 0867.

---

இயக்கச்சியில் உள்ள பிரபல தோட்டம் ஒன்றிற்கு தோட்ட வேலையாள் மற்றும் சமையலாள் (ஆண்கள்) தேவைப்படுகின்றனர். அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொடர்புகளுக்கு: 077 336 1750.

---

கண்ணிவெடி அகற்றுநருக்கான வெற்றிடம் நிரப்புவதற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. தொடர்புகளுக்கு ஹலோ ரஸ்ட், 450, திருநகர் மேற்கு, கிளிநொச்சி.

---

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள வைத்திய நிறுவனத்திற்கு தாதியர், மருந்தாளர் தேவை. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொடர்புகளுக்கு, 077 946 5467.

---

க்ளவுஸ் உற்பத்தி நிறுவனத்திற்கு 16 தொடக்கம் 55 வயதுக்கு உட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் தேவைப்படுகின்றனர். உடன் வேலை வாய்ப்புடன், உணவு, தங்குமிட வசதி என்பன வழங்கப்படும். தொடர்புகளுக்கு: 077 303 2004.

---

தனியார் துறைமுகத்தில் கப்பல் வேலைக்கு 18 தொடக்கம் 55 வயதிற்கு உட்பட்ட ஆண்கள் தேவைப்படுகின்றனர். உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும். தொடர்புகளுக்கு: 077 303 3803.

---

வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய வீட்டுப்பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்க்கலாம். தொடர்புகளுக்கு: 077 633 3133, 021 223 0774.

---

பிரபல அழகு சாதன பொருட்கள் விற்பனை நிலையத்திற்கு முன் அனுபவம் உள்ள பெண்கள் தேவைப்படுகின்றனர். யாழ்.பல்கலைக்கழக சுற்றாடலில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு: 077 774 8989, 077 987 9882.

---

வவுனியாவில் உள்ள ஆசிரியர் வீட்டிற்கு பிள்ளையைப் பராமரிக்கவும், சமையலுக்குமான 30 தொடக்கம் 50 வயதுக்கு உட்பட்ட பெண் ஒருவர் தேவை. உணவு, தங்குமிட வசதியுடன் 10,000 ரூபா வழங்கப்படும். தொடர்புகளுக்கு: 077 480 1686, 077 6139 150.

---

பிரபல புடவைக் கடைக்கு ஆண், பெண் விற்பனையாளர்கள் தேவை. தொடர்புகளுக்கு ரி.சங்கரப்பிள்ளை அன்ட் சன்ஸ், இல 21, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொடர்புகளுக்கு: 077 308 6894.

---

யாழ்.நகரில் உள்ள பிரபல நிறுவனம் ஒன்றுக்கு கனரக வாகனம் செலுத்தத் தெரிந்த சாரதி ஒருவர் தேவை. 1 வருட முன் அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு: 077 950 2029.

# அதிகரிக்கிறது இந்திய எதிர்ப்புணர்வு

# தணிக்கும் முயற்சியில் இராஜதந்திரிகள்

(கொழும்பு)

தென்னிலங்கையில் அதிகரித்துவரும் இந்திய எதிர்ப்புணர்வைத் தணிக்கும் முயற்சியில் இந்திய அரசு முழுமூச்சில் இறங்கியுள்ளது.

ஜெனிவாத்தீர்மானம் காரணமாகவும் தமிழ் நாட்டில் பௌத்த பிக்குகள் தாக்கப்பட்ட சம்பவங்கள் காரணமாகவும் தென்னிலங்கையில் அண்மைய வாரங்களாக இந்திய எதிர்ப்புணர்வு அதிகரித்து வருகின்றது.

இந்த நிலமையினை மிக உன்னிப்பாக அவதானித்த இந்திய அரசு இந்த உணர்ச்சி மிகுந்த சூழலைத்தணிக்க முயற்சித்து வருகின்றது.

இந்த முயற்சியின் ஒரு கட்டமாக கொழும்பில் உள்ள இந்தியத்தூதுவர் தென்னிலங்கையின் சிவில் சமூகத்தினரை தொடர்ச்சியாக சந்தித்து உரையாடி வருகிறார். அத்துடன் பௌத்த மத பீடங்களைச் சேர்ந்த பௌத்த பிக்குகளையும் சந்தித்து உரையாடியிருக்கிறார்.

# பொருளாதாரத்தடையா?

# இல்லை என்கிறது அமெரிக்கா

(கொழும்பு)

இலங்கை மீது பொருளாதாரத் தடைவிதிக்கும் எண்ணம் இல்லை என அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட பிரேரணைகளை இலங்கையானது நிராகரித்த போதிலும் இலங்கை மீது பொருளாதாரத் தடைவிதிக்கும் எண்ணம் இல்லை என அமெரிக்கத் தூதுவர் மைக்கல் ஜே. சிசன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சமாதானத்தை வலியுறுத்தியும், மனித உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கிலுமே ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

# அலரிமாளிகை முன்பாகவே ஆர்ப்பாட்டம் நடத்தவேண்டும்

## — கூறுகிறது ஐ.தே.க. —

(கொழும்பு)

"இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைக் கண்டிப்போர் அமெரிக்கா, இந்திய தூதரகங்களுக்கு முன்னால் ஆர்பாட்டம் செய்வதற்குப் பதிலாக நாடாளுமன்றம் மற்றும் ஜனாதிபதி இல்லத்துக்கு முன் ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டும்'' என ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

இது அரசாங்கத்துக்கு எதிரான ஒரு தீர்மானமே அன்றி இலங்கைக்கு எதிரானது அல்ல எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச சமூகத்துக்கும் இந்த நாட்டுக்கும் இலங்கை அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு மட்டுமே இந்தத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. அதற்கு மேலாக அதில் எதுவுமில்லை.

யுத்த குற்றச்சாட்டுக்கு எதிராக சுயாதீன விசாரணை நடைபெறுமெனக் கூறியதும் 17 ஆவது திருத்தம் அமுலாக்கப்படும் எனக் கூறியதும் 13ஆவது திருத்தத்தின் அடிப்படையில் அதிகாரப் பகிர்வு செய்யப்படும் எனக் கூறியதும் ஊடக சுதந்திரம் பேணப்படும் எனக் கூறியதும் மனித உரிமைகளை பாதுகாப்பதாகக் கூறியதும் நீதித் துறையின் சுந்திரத்தைப் பாதுகாப்பாதாகக் கூறியதும் இந்த அரசாங்கம்தான்.

ஆனால், மக்கள் இதை அறியாதவர்களாக உள்ளனர். 2009இல் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட தீர்மான்ம், அரசாங்கம் பல வாக்குறுதிகளை வழங்கியதால் நிறைவேறவில்லை. அப்போது நாம் 19 வாக்குகளால் தீர்மானத்தை தோற்கடித்தோம். நாம் பல வாக்குறுதிகளை வழங்கியதால்தான் வெல்லமுடிந்தது. ஆனால், நாம் கூறியதில் எதையும் செய்யவில்லை. எல்லாம் மாறாகவே நடந்தன. 17ஆவது திருத்தத்தை அமுல் செய்வதற்குப் பதிலாக சர்வாதிகாரமான 18 ஆவது திருத்தத்தை அவர்கள் கொண்டு வந்தனர்.

இதற்குக் காரணமாக அரசாங்கத்துக்கு எதிராக நாடாளுமன்றுக்கு முன்னும், ஜனாதிபதி இல்லத்தின் முன்னும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற வேண்டும் என லக்ஷ்மன் கிரியல்ல கூறினார்.

# யாழ்.தமிழ்ச் சங்கத்தின் திருவள்ளுவர் விழா

(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் நடத்தும் திருவள்ளுவர் விழா எதிர்வரும் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பேராசிரியர் மா.சின்னத்தம்பி தலைமையில் கருத்தரங்கமும். சொல்லின் செல்வர். இரா.செல்வவடிவேல் தலைமையில் முக்கோணப்பட்டி மண்டபமும் இடம்பெறும்.

பன்முக நோக்கில் வள்ளுவர் என்னும் தலைப்பில் இடம் பெறும் கருத்தரங்க நிகழ்வில் ஆசிரியர் ந.குகபரன் விரிவுரையாளர்களான அ.பௌணத்தி, திருமதி.அ.வதனரேகா மற்றும் செல்வி ர.மீரா ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

பட்டிமண்டப நிகழ்வில் "வள்ளுவர் பெரிதும் வலியுறுத்த முனைவது இல்லறச் சிறப்பே'' என த.அஜந்தகுமார், துறவற மேன்மையே என ச.லலீசனும் ஊழின் வலியே என கு.பாலஷண்முகனும் வாதிடவுள்ளனர்.

(10)

## குழந்தைகளுக்கு கிளினிக்சேவை

மாதத்தில் முதல் சனிக் கிழமைகளில் குழந்தைகளை நிறுக்கும் கிளினிக் நடடிவக்கை இடம்பெற்று வருகின்றது. வரணி வடக்குப் பிரதேசத்தில் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளை மாதத்தில் முதல் வரும் சனிக் கிழமைகளில் காலை 8.30 மணி தொடக்கம் பி.ப 1மணி வரை நிறுத்தல் எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (150)

# யுத்த வெற்றிக்கு கருணா காரணமா?

# மனம் திறந்து பேசுகிறார் ராஜித

(கொழும்பு)

கருணா தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசில் இணைந்திராவிடில் யுத்தத்தில் வெற்றி பெற்றிருக்க முடியாது எனக் கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் திணைக்கள மாடிக்கட்டடத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்நிகழ்வில் உரையாற்றிய அவர் தொடர்ந்து கூறியதாவது:

ஆனையிறவு சமரில் விடுதலைப்புலிகளின் வெற்றியை கருணாவே ஈட்டிக் கொடுத்தார். இதுபோன்று புலிகளின் பல வெற்றிகளுக்கு அவர் காரணமாக அமைந்தார். இறுதி யுத்தத்தில் பிரபாகரன் கொல்லப்பட்ட போது கருணா ஹெலிகொப்டரில் அங்கு சென்று பிரபாகரனின் சடலத்தை அடையாளம் காட்டினார். டி.பி.விஜயதுங்க ஜனாதிபதியாக இருந்து போதும், 1994ஆம் ஆண்டிலும் கிழக்கு படையினரால் மீட்கப்பட்டிருந்த போதிலும், புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த தொப்பிகல பிரதேசம் படையினரால் மீட்கப்படவில்லை. அங்கு படையினரால் நுழைய முடியவில்லை. ஆனால் கருணா அந்த அமைப்பில் இருந்து விலகிய பின்னர் அவர் வழங்கிய தகவலின் மூலமே தொப்பிகலவை படையினரால் மீட்க முடிந்தது.

யுத்தத்தில் அரசாங் கத்துக்கு எதிராக போரிட்ட கருணா நாடாளுமன்றத்தில் இருக்கிறார்.

ஆனால் யுத்தத்தை வெற்றி கொண்ட சரத்பொன்சேகா சிறையில் இருக்கிறார் என்று நாடாளுமன்றில் எதிர்க்கட்சியினர் குரலெழுப்பினர்.

கருணா அரசுடன் இணைந்து தகவல் தந்திருக்காவிட்டால் இவ்வளவு விரைவாக யுத்தத்தை முடித்திருக்க முடியாது என்று அவர்களுக்கு நான் பதிலளித்தேன்.

கருணா தமிழீழ விடுதலைப் புலிகள் இயக் கத்திலிருந்து பிரிந்துவிட்டதாகவும் அவரை கொழும்புக்கு அழைத்து வந்திருப்பதாகவும், அவரை உங்கள் வீட்டுக்கு அழைத்து வருவதாகவும் இங்கு சமுகமளித்துள்ள அலிசாஷிர் மௌலானா எனக்கு தொலைபேசியில் கூறியிருந்தார்.

அவ்வாறு கருணாவை எமது வீட்டுக்கு அழைத்து வரவேண்டாம் என்றும், அழைத்துவந்தால் நான் கொழும்பில் இருக்க முடியாது என்றும், கூறிய நான் நீங்களும் கவனமாக இருங்கள் என்று மௌலானாவுக்கு சொன்னேன்.

ஆனால் கருணா நாடாளுமன்றத்துக்கு வந்தார். அலிசாஷிர் மௌலானா அமெரிக்காவுக்கு ஓடினார்.

நான் பின்னர் ஒருமுறை அமெரிக்கா சென்ற போது மௌலானாவை சந்தித்து மேற்படி உரையாடியசம் பவத்தை ஞாபகப்படுத்தினேன். என்றார் அமைச்சர்ராஜித சேனாரத்ன.

# கல்விமான் சபாரத்தினத்துக்கு காரைநகரில் அஞ்சலி நிகழ்வு


(யாழ்.நிருபர்)

காரைநகரைச் சேர்ந்த கல்விமான் புரவலர் வைத்தியகலாநிதி சபாபதிப்பிள்ளை சபாரத்தினம் கடந்த வியாழக்கிழமை இலண்டனில் காலமானார்.

அன்னாரது மறைவையொட்டி அஞ்சலி செலுத்துமுகமாக எதிர்வரும் 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலய நடராஜா ஞாபகார்த்த மண்டபத்தில் அஞ்சலிக் கூட்டமும், ஆத்மசர்ந்திப் பிரார்த்தனை நிகழ்வும் நடைபெறவுள்ளது.

காரை அபிவிருத்திச் சபையும் கலாநிதி ஆ.தியாகராஜா அறக்கட்டளை நிதியமும் இணைந்து நடத்தும் இந்நிகழ்வில் உள்ளூர் பிரமுகர்களும் புலம்பெயர் நாடுகளில் வாழும் காரைநகர் மக்களும் கலந்து கொண்டு அஞ்சலி உரை நிகழ்த்துவர். (10)

# பரமர் சங்கமம்



'உலை வாயை மூடி விடலாம் ஊர் வாயை மூட ஏலுமா' என்பதில் இருந்து அது முடியாத காரியம் என்பது வெள்ளிடை மலை.

இருந்தும் பலருடைய முயற்சி என்பதைவிடப் பிரயத்தனம் அதுவாகத் தான் இருந்து வருகிறது.

ஊடகம் அது எதுவாக இருந்தாலும் அதனில் பொய் என்பதற்கு இடமிருக்காது. ஏனெனில் உலை வாயைப் போன்று ஒவ்வொரு வீட்டிலும் அவரவர் ஆளுமைக்கு உட்பட்டிருப்பதில்லை.

என்றாலும் அது ஊரெங்கும் வியாபித்துத்தான் உள்ளது. ஊர்வாய் போன்றதே ஊடகங்கள். அதனில் பொய் வந்தால் அந்தப் பொய் உடனடியாகவே அம்பலத்துக்கு வந்துவிடும்.

பொய்யுரைக்கும் ஊடகங்களுக்கு மக்கள் மத்தியில் வரவேற்பு இருக்காது. அதனால் கூடுமானவரை உண்மை. சத்தியம். நேர்மையான தகவல்களை அவை வெளியிடவேண்டும்.

அதுவே அவற்றின் தர்மமாகவும். பேணிக்காக்கப்பட்டும் வரப்படுகிறது. அத்தகைய தகவல்களே மக்களைச் சென்றடைய வேண்டும்.

நாட்டில் நடக்கக் கூடிய நல்லது கெட்டது அனைத்தையும் மக்கள் ஊடகங்கள் மூலமாகவே அறிந்து கொள்கின்றனர்.

இந்த ஊடகத்துறைகளில் பத்திரிகையைப் போன்று அவர்களின் கரங்களிலும். இதயங்களிலும். சிந்தனைகளிலும் வேறெந்த ஊடகங்களும் வீற்றிருக்க முடிவதில்லை.

இலத்திரனியல் ஊடகங்கள் ஒளி, ஒலியூடாக சில நிமிட மணி நேரங்களே தரிக்க முடிகின்றது. நினைத்த நேரத்திலெல்லாம் எடுத்துப் பார்க்க முடிவது பத்திரிகை ஊடகம் ஒன்றுதான்.

காற்றிலும். காட்சிகளிலும் பிழையான தகவல்களை பரப்பினால் ஆதாரப் படுத்தலில் இருந்து தப்பிக்கொள்ளும் வாய்ப்புக்கள் உண்டு எழுத்தில் பொறித்த விடயங்கள் என்றென்றும் முளித்துக்கொண்டிருக்கும்.

இதனால் பத்திரிகை ஊடகங்களை நடத்துவதும். அவற்றில் பணி புரிவதும் இலகுவான விடையமில்லை. அதனாலேயே பத்திரிகை ஊடகவியலாளர்கள் கொல்லப்படுவதும். தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்படுவதும் தொடர்கின்றன.

அதை விடவும் பத்திரிகைகளை சகல பிரதேசங்களுக்கும் விநியோகம் செய்வதில் ஈடுபடுபவர்களை தாக்குவதும். பத்திரிகைகளைத் தீவைத்து கொளுத்துவதும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இவ்விதம் நடந்து கொள்வதினூடாக மறைக்கச் செய்யும் மாயையைக் காப்பாற்றி விடமுடியுமெண்டு மனப்பால் குடிப்பவர்களை சூரியனைப் பார்த்து குலைக்கும் நாய்க்கு ஒப்பிடலாமா?

மக்கள் விரோதச் செயற்பாடுகளை மூடி மறைக்க முயலும் இவர்கள் தத்தமது வீடுகளில் கொதிக்கும் உலைகளாக ஊர்வாயான ஊடகங்களை சாடுதல் ஒண்டும் நடக்காது இல்லையே பின்னை...

20) # என்ற குறியீடானது எதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது?

1) கூட்டல்     2) கழித்தல்     3) வகுத்தல்

21) தாவீதுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் புதன்கிழமையும் விடுமுறை கிடைக்கும். அவரின் மனைவிக்கு ஒன்றுவிட்ட ஒருநாள் விடுமுறை கிடைக்கும். இன்று ஞாயிற்றுக்கிழமை. இருவருக்கும் விடுமுறை கிடைத்துள்ளது. இவற்றிற்கு அமைய பின்வரும் கூற்றுக்களிடையே மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

1) அடுத்த ஞாயிற்றுக்கிழமை இருவருக்கும் விடுமுறை கிடைக்கும்.
2) இன்னும் எட்டுநாட்களில் அவர்கள் இருவருக்கும் விடுமுறை கிடைக்கும்.
3) அடுத்த வியாழக்கிழமை தாவீதின் மனைவிக்கு மட்டும் விடுமுறை கிடைக்கும்.

22) நான்கு மனிதர்கள் ஒரே இடத்தில் இருந்து புறப்பட்டு நான்கு மணித்தியாலங்கள் நடந்து 16 கிலோமீற்றர் தூரம் சென்றனர்.


1) 1 கிலோமீற்றர்     2) 4 கிலோமீற்றர்     3) 5 கிலோமீற்றர்

23) 4 மீற்றர் நீளமும் 4 மீற்றர் உயரமும் உள்ள சுவருக்குப் பூச 2 லீற்றர் பூச்சு தேவைப்படுகின்றது. 8 மீற்றர் நீளமும் 1 மீற்றர் உயரமும் உள்ள அத்தகைய ஒரு சுவருக்குப் பூச எத்தனை லீற்றர் பூச்சு தேவைப்படும்?

1) 1 லீற்றர்     2) 2 லீற்றர்     3) 4 லீற்றர்

24) முகம்பார்க்கும் கண்ணாடியில் கடிகாரம் தோன்றும் விதம் உருவில் காணப்படுகின்றது. இக்கடிகாரத்தின் உண்மை நேரம் என்ன?

1) 2.55
2) 3.05
3) 9.05



25) முகம் பார்க்கும் கண்ணாடியின் முன்னால் நின்ற பெண் ஒருத்தி தனது உருவத்தைப் பார்த்துக் கூறிய பின்வரும் கூற்றுக்களிடையே மிகச் சரியான கூற்று யாதாக இருக்கலாம்?

1) இக்கண்ணாடியில் காணப்படுபவர் தனது தாயாரின் சகோதரியாவார்.
2) இக்கண்ணாடியில் காணப்படுபவர் எனது தாயாரின் சிற்றன்னையாவார்.
3) இக்கண்ணாடியில் காணப்படுபவர் எனது தாயாரின் ஒரே மகளாவார்.

## கடந்த வெள்ளிக்கிழமை வெளியான பயிற்சி வினாத்தாளின் விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 01. 01 | 16. காலிமுகக் கடற்கரை | 31. 30,000 | 32. 10,000 | 59. கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் |
| 02. 11 | 17. இந்து சமுத்திரம் | 33. 10,000 | 34. 300 | 60. இலங்கை போக்குவரத்துச் சபை |
| 03. 02 | 18. சிறிய | 35. 59,000 | 36. 750 | 61. கிறிஸ்துவுக்கு பின் |
| 04. 10 | 19. கிராமம் | 37. முறுக்கு | 38. தோசை | 62. இலங்கை மின்சார சபை |
| 05. 04 | 20. கிட்ட | 39. 07 | 40. 06 | 63. இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் |
| 06. 07 | 21. ஒடுங்கிய | 41. 04 | 42. 620 | 64. முற்பகல் 65. km 66. L |
| 07. 03 | 22. எழில்/வனப்பு | 43. நன்றி | 44. வணக்கம் | 67. M 68. Cm 69. g 70. Kg |
| 08. 08 | 23. வதனம் | 45. Teacher | 46. Driver | 71. ml 72. புதன்கிழமை 73. 5 நிமிடம் |
| 09. 05 | 24. பாதை/தெரு/சாலை | 47. Farmer | 48. Nurse | 74. a. கிராமம் b. கல் c. கூடு d. நுளம்பு e. கூடைப்பந்து f. காடு g. ரயில் h. தச்சன் i. வானவில் j. கரண்டி |
| 10. 12 | 25. விருப்பம்/அன்பு/பிரியம் | 49. Postman | 50. Doctor | 75. a. கதிரை b. பற்றை c. வெள்ளை d. அப்பா e. பால்சோறு f. சிவப்புநிறம் |
| 11. 06 | 26. ஆலயம் | 51. வாகனப் புகை | | |
| 12. 09 | 27. விசாலமான | 52. காலநிலை | 53. காசோலை | |
| 13. 2 மணி 55 நிமிட | 28. மேல்மாகாணம் | 54. மண்புழு | 55. பூக்கள் | |
| 14. 80 | 29. நகரம், மக்கள், கோயில் கொழும்பு. | 56. வெட்டுக்கிளி | | |
| 15. கொழும்பு நகரின் பெருமையை | 30. இந்தியா/மாலைதீவு | 57. சுத்தமான | | |
| | | 58. நன்னீரில் | | |



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - II
1 மணி 15 நிமி



# கல்வி முரசு

இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**1 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1) பாடலில் விவரிக்கப்பட்டுள்ள பறவையைத் தெரிவு செய்க.

உணவுக்காகப் பழங்களை உண்ணும்
வானத்தில் வேகமாகச் செல்லும்
உடல் பச்சை நிறமாய் இருக்கும்
பறவை ஒன்று



1     2     3


2) பாடலில் விவரிக்கப்பட்டுள்ள மலரைத் தெரிவு செய்க.

காலையில் சூரிய ஒளியில் மலரும்
நீரில் இருக்கும் மாலையில் வாடும்
மணம் வீசும் மனதைத் தொடும்
மலர் ஒன்று



1     2     3

3) தரப்பட்டுள்ள அடைப்புகளில் உள்ள உருக்களைப் பார்க்க. ஒவ்வோர் உருவுக்கும் ஆங்கில எழுத்துக்கள் இடப்பட்டுள்ளன.




உதாரணத்தை அவதானித்து தொடர்பினை விளங்கி சரியான விடையைத் தெரிவு செய்க.

உதாரணம் A:G

1) B:F, C:H, D:E
2) B:H, C:F, D:E
3) B:H, C:E, D:F

◆ **பின்வரும் பாடலை வாசித்து 4 ஆம் 5 ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.**

கற்ற கல்வி ஒருவரின்
சிறந்த செல்வமாகும்
நல்ல பண்புகள் இருப்பின்
நாடு உங்களைப் போற்றும்

4) ஒருவரின் சொத்தாக விளங்குவது எது?

1) கற்ற கல்வி     2) நற்பண்புகள்     3) நற்பழக்கவழக்கங்கள்

5) நாடு உங்களைப் போற்ற வேண்டுமாயின் நீங்கள் யாது செய்ய வேண்டும்?

1) சிறந்த கல்வி     2) நற்பண்புகளை விருத்தி செய்தல்     3) நன்நடத்தை

6) "விளையும் பயிரை முளையில் தெரியும்" என்பதன் கருத்து
   1) பயிர் நன்றாக வளர நல்ல விதை தேவை.
   2) ஒருவனின் சிறுவயதுப் பழக்கங்களை வைத்து அவனைப் பற்றி மதிப்பிடலாம்.
   3) பெரியவர்களாக வளர்வதற்குச் சிறியவர்களுக்கு உதவுதல் வேண்டும்.


7) கமலனும் நிசாமும் சிறுவயது முதல் ஒன்றாக வளர்ந்த இரு நண்பர்கள். அண்மையில் வகுப்பிற்குப் புதிதாகச் சேர்ந்த நாதனுடன் கமலன் மிக நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தி இருந்தான். இந்நிலையை நன்கு வெளிப்படுத்தும் கூற்றைத் தெரிவு செய்க.
   1) கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை.
   2) கடுகு சிறிதானாலும் காரம் பெரிது.
   3) முன்னை வந்த செவியை விட பின்னர் வந்த கொம்பு பெரிது.

8) கீழே தரப்பட்டுள்ள மூன்று படிமுறைகளின் கீழ் கட்டடம் ஒன்றைக் கட்டத் திட்டமிடப்பட்டிருந்தது.


| படிமுறை | எடுக்கும் காலம் |
|---|---|
| 1 | 2 ஆண்டுகள் |
| 2 | படிமுறை 1 இன் இரண்டு மடங்கு |
| 3 | படிமுறை 1 இன் அரை மடங்கு |

2004 ஆம் ஆண்டில் கட்டடம் கட்டத் தொடங்கப்பட்டது எனின், எந்த ஆண்டில் அது கட்டி முடிக்கப்படும்?
   1) 2010   2) 2011   3) 2012


9) கீழே தரப்பட்டுள்ள உரு இரண்டு கடதாசிக் கீற்றுக்களை மடித்து அமைக்கப்பட்டுள்ளது. அதனை அமைக்கப் பயன்படுத்திய இரண்டு கடதாசிக் கீற்றுக்களையும் காட்டும் விடையைத் தெரிவு செய்க. அவற்றின் கீழ்க் கோடிடுக.




10) உருவைப் பார்க்க. வெற்றிடத்துக்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.





11) உருவில் தரப்பட்டுள்ள வடிவத்தைப் பெறுவதற்கு நான்காக மடிக்கப்பட்ட கடதாசித் துண்டைச் சரியாக வெட்ட வேண்டிய விதத்தைத் தெரிவு செய்க.







12) அடைப்பினுள் உள்ள உருவைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.




பின்வரும் கோட்டுப் படங்களின் உதவியுடன் 13 ஆம் 14 ஆம் வினாக்களுக்கு விடை தருக.




13) மாம்பழங்கள் 3 இனதும் தோடம்பழங்கள் 5 இனதும் விலை
   1) ரூபா 44   2) ரூபா 58   3) ரூபா 66


14) மாம்பழம் 1 இனதும் தோடம்பழம் 1 இனதும் விலை யாது?
   1) ரூபா 11   2) ரூபா 14   3) ரூபா 18

**மதன் ஆண்பிள்ளை ஆவான். மதனின் அக்காவிற்கு இரண்டு ஆண் சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் உள்ளனர்.**

15) மதனுக்கு எத்தனை சகோதரர்கள் உள்ளனர்?
   1) 3   2) 2   3) 1

16) மதனுக்கு எத்தனை சகோதரிகள் உள்ளனர்?
   1) 2   2) 3   3) 4

**மின் அலங்காரச் சரம் ஒன்றில் இருந்த மின்குமிழ்களின் எண்ணிக்கைகள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு குறியீடுகள் மூலம் காட்டப்பட்டுள்ளன.**




17) இதற்கேற்ப மின் அலங்காரச் சரத்தில் எந்நிற மின்குமிழ்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளன?
   1) நீலநிற மின்குமிழ்கள்   2) சிவப்புநிற மின்குமிழ்கள்   3) பச்சைநிற மின்குமிழ்கள்

18) மின் அலங்காரச் சரத்தில் ஒவ்வொரு நிறத்திலுமுள்ள மின்குமிழ்களின் எண்ணிக்கைகளை குறைந்த எண்ணிக்கையில் இருந்து கூடிய எண்ணிக்கை வரை ஒழுங்குபடுத்தும்போது கிடைக்கும் சரியான விடை யாது?
   1) நீலம், சிவப்பு, பச்சை   2) பச்சை, சிவப்பு, நீலம்   3) பச்சை, நீலம், சிவப்பு

பின்வரும் கோவையைப் பார்க்க
   $2 * 3 = 3 \neq 3$
   இங்கு = குறியீடானது சமனைக் கருதுகின்றது. நியம கணிதச் செய்கைகளுக்காக * ≠ என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்கேற்ப,

19) * என்ற குறியீடானது எதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது?
   1) கூட்டல்   2) கழித்தல்   3) வகுத்தல்

# இந்திய மீனவர்கள் படுகொலை
# இருபக்கமும் தவறுகள் இருக்கின்றன

## இத்தாலி குற்றச்சாட்டு



இத்தாலி மாலுமிகளால் மீனவர்கள் சுட்டுக் கொல்லப் பட்ட வழக்கை கையாண்டதில், இரு தரப்பிலும் தவறுகள் நிகழ்ந்துள்ளதாக இத்தாலி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இத்தாலி கடற்படை வீரர்கள் மீதான விசாரணை கேரள நீதிமன்றத்தில் நடைபெறத் தொடங்கிய போதே, இந்த வழக்கை விசாரிப்பதற்கு அந்த நீதிமன்றம், தகுதி உடையது அல்ல என்பதை உணர்ந்து கொண்டதாக இத்தாலி வெளியுறவுத் துறை இணையமைச்சர் ஸ்டெ·. பான் டி மஸ்தூரார் கூறினார். இத்தாலி மாலுமிகள் விவகாரத்தில் விரைவாக நீதி வழங்கப்பட வேண்டும். என தங்கள் நாட்டினர் எதிர்பார்ப்பதாக கூறிய அவர், வழக்கில் தொடர்புடைய வீரர்களுக்கும், குடும்பம், குழந்தைகள் இருப்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்றார். இந்த விவகாரம் தொடர்பாக உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின் பேரில் அமைக்கப்பட உள்ள சிறப்பு நீதிமன்றம், விரைவாக வழக்கை விசாரித்து முடிக்க வேண்டும் எனவும் இத்தாலி அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

இதனிடையே, இத்தாலி மாலுமிகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தை கேரளாவிலேயே அமைக்க வேண்டும் என அம்மாநில முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.




# அசாமில் மீண்டும் காண்டாமிருக வேட்டை



அசாம் மாநிலம் காசிரங்கா தேசியப் பூங்காவில் காண்டாமிருகம் சட்டவிரோதமாக வேட்டை ஆடப்பட்டுள்ளது.

காசிரங்கா தேசிய பூங்கா ஊழியர்கள் வழக்கமான ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த போது, போர்கோலா பகுதியில் ஒரு காண்டாமிருகம் இறந்து கிடந்ததைக் கண்டனர். அதன் கொம்பு வெட்டியெடுக்கப்பட்டிருந்தது. உடம்பை, ஏ.கே 47 ரக துப்பாக்கியின் குண்டுகள் துளைத்திருந்தன. கொம்பை வெட்டியெடுக்கப் பயன்படுத்தப்பட்ட கத்தியும், ரப்பர் கையுறைகளும் அங்கேயே கிடந்தன. இதன் மூலம் கடந்த 24 மணி நேரத்தில் காசிரங்கா தேசிய பூங்காவில் 2 காண்டாமிருகங்கள் வேட்டையாடப்பட்டுள்ளன. அசாமில், காண்டாமிருகத்தை வேட்டையாடுபவர்களுக்கு தண்டனை கடுமையாக்கப்பட்டாலும் வேட்டையைத் தடுக்க முடியவில்லை.

சர்வதேச சந்தையில் காண்டாமிருகத்தின் ஒற்றைக் கொம்பு 90 இலட்ச ரூபாய் வரை விலை போவதே வேட்டையாடப்படுவதற்குக் காரணம் என வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# இரயில் கட்டணம் உயரும்

டீசல் விலை உயர்வுக்கேற்ப பயணிகள் இரயில் கட்டணமும் உயர்த்தப்பட வாய்ப்பு இருப்பதாக அத்துறைக்கான வாரிய தலைவர் வினய் மிட்டல் தெரிவித்துள்ளார். டில்லியில் பேசிய வினய் மிட்டல், பட்ஜெட்டில் அறிவித்தபடி சரக்கு இரயில் கட்டண உயர்வு வரும் ஏப்ரல் 1ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என்று கூறினார்.

டீசல் விலைக்கு ஏற்ப பயணிகள் இரயில் கட்டணத்தை நிர்ணயிப்பதற்கான இரயில்வே கட்டண நிர்ணய அமைப்பு உருவாக்கப்பட்டு வருவதாகக் கூறிய அவர், 6 மாத கால இடைவெளியில் கட்டணங்கள் பரிசீலிக்கப்பட்டு மாற்றியமைக்கப்படும் என்றார்.

# மூடப்பட்ட கல்லூரிகள் இன்று மீண்டும் திறப்பு

இலங்கையில், தமிழர்கள் படு கொலை செய்யப்பட்டதைக் கண்டிக்காத மத்திய அரசு மற்றும் அரசியல் கட்சிகளை எதிர்த்து, தமிழகத்தில், கல்லூரி மாணவர்கள், தொடர் போராட்டத்தில், ஈடுபட்டுள்ளனர். சட்டம் - ஒழுங்கைப் பாதுகாக்க, அனைத்து கல்லூரிகளுக்கும், விடுமுறை அறிவிக்கப்பட்டது.

நிலைமை சீராகியுள்ளதை அடுத்து, இன்று கல்லூரிகள் திறக்கப்படும் என, உயர் கல்வித் துறை அறிவித்துள்ளது. பொறியியற் கல்லூரிகள் திறப்பு திகதி குறித்து, பின்னர் தெரிவிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கல்லூரிகள் திறக்கப்படும் நிலையில், தேர்வுத் திகதிகளும், விரைவில் வெளியாகும்.

# டைனோசர் எலும்புக்கூடு அசாமில் கண்டுபிடிப்பு

அசாம் மாநிலம் சிராங் மாவட்டத்தைச் சேர்ந்த நாக்ர பட்டிகுரி கிராமத்தை சேர்ந்தவர்கள் அங்குள்ள ஒரு கோவிலுக்கு கடந்த மாதம் 24ஆம் திகதி பாதையாத்திரை மேற்கொண்டனர்.

அப்போது அங்குள்ள குக்லங் ஆற்றுக்கரை வழியாக சென்றபோது, 6 அடி உயரமுள்ள எலும்புக்கூட்டை கண்டுபிடித்தனர். அதில் ஒரு பக்தர் அந்த எலும்புக்கூட்டை அவரது வீட்டிற்கு எடுத்து சென்றுவிட்டார்.

பின்னர் இத்தகவல் அப்பகுதி பத்திரிக்கையாளர்களுக்கு தெரியவர அதை வன இலாகாவினருக்கு தெரிவித்தனர். உடனடியாக அங்கு வந்த வன அதிகாரிகள் அந்த எலும்புக்கூட்டை கைப்பற்றினர்.

பின்னர் மத்திய வன விலங்கு அறக்கட்டளை அதிகாரிகள், கால்நடை வளர்ப்பு நிபுணர்கள் அந்த எலும்புக்கூட்டை சோதித்தனர். பின்புதான் அது முற்காலத்தில் வாழ்ந்த டைனோசரசின் எலும்புக்கூடு என்று தெரியவந்தது. இந்த டைனோ



சரின் எலும்புக்கூடு கிடைத்த இடத்திற்கு அருகே, உலகப் புகழ் பெற்ற "மானாஸ்" வனவிலங்கு சரணாலயம் உள்ளது குறிப்பிடத்தக்கது.

# அடையாள அட்டைக்கு புகைப்படம் எடுக்க மேலங்கி இன்றி வரும் அர்ச்சகர்கள்



தேசிய அடையாள அட்டைக்கு புகைப்படம் எடுக்கும்போது சட்டை அணியாமல் கோவில் அர்ச்சகர்கள் வருகின்றனர். இந்நிலையில் சட்டை அணியாமல் வருவோரையும் புகைப்படம் எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்திய தலைமைத் தேர்தல் ஆணையரிடம் அர்ச்சகர்கள் கோரிக்கை விடுத்தனர். தமிழ்நாட்டில் காஞ்சிபுரம் நகராட்சியில் தற்போது பிரிஷ வாரியாக தேசிய அடையாள அட்டைக்கு பொதுமக்களை புகைப்படம் எடுக்கும் பணி நடந்து வருகிறது. கோவிலில் அர்ச்சகராக உள்ளோரில் பெரும்பாலானோர் மேற்சட்டை அணிவதில்லை.

முதியோரில் இதுவரை மேற்சட்டை அணியாதோர் பலர் உள்ளனர். அவர்கள் தேசிய அடையாள அட்டைக்கு புகைப்படம் எடுக்க சென்றபோது அங்கிருந்த ஊழியர்கள் "மேற்சட்டை அணிந்து வந்தால் தான் புகைப்படம் எடுப்போம்" என தெரிவித்துள்ளனர். ஆனால் அவர்கள் சட்டை அணிய மாட்டோம் எனக் கூறி புகைப்படம் எடுக்காமல் திரும்பிச் சென்றனர். நேற்று முன்தினம் இரவு, இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் சம்பத் காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோவிலுக்கு வந்தபோது அர்ச்சகர்கள் அவரிடம் பேசுகையில், தேசிய அடையாள அட்டைக்கு புகைப்படம் எடுக்க மேற்சட்டை அணிந்து வரவேண்டும் என வற்புறுத்துகின்றனர். மேலும் மேற்சட்டை அணியாதவர்களையும் புகைப்படம் எடுக்க உத்தரவிட வேண்டும் என்றனர்.

# நறுமணம்

(எசாயா 42 : 1 - 7)
(யோவான் 12 : 1 - 11)

மரியாளின் பேரன்பிற்கு ஈடு இணையில்லை அந்த அன்பு தன்னிடத்தில் உள்ளதை எல்லாம் இயேசுவிற்காய்த் தரும் அன்பு தன்னிடத்தில் உள்ள சிறந்ததை, விலையேறப்பெற்றதை அது இயேசுவின் பாதங்களில் காணிக்கையாய்ப் படைக்கின்றது. எதையும், எவ்வளவையும் விரயம் செய்வதற்கு அந்த அன்பு தங்குவதில்லை. அது கணக்குப்பாராது காட்டப்படும் அதீத அன்பு உள்ளதை எல்லாம் தந்ததற்குப் பின்பு இன்னும் தருவதற்கு என்னிடம் ஒன்றும் இல்லையே என்று வருத்தப்படும் அன்பு. அந்த அன்பின் வாசனை அபூர்வ வாசனை. அகிலமெல்லாம் மணக்கும் வாசனை. இயேசுவிற்கான எனது அன்பின் வாசனை எத்தகையது.

மரியாள் கண்ணீரோடு, விரித்த கூந்தலோடு இயேசுவின் பாதத்தை வருடி அழுது புலம்புகின்றார். இயேசுவிற்காய் விம்மி வெடிக்கும் இதயம் இது. துக்கிப் புலம்பும் இதயம் இது. இயேசுவிற்கான என் அன்பின் கண்ணீர் உண்டா? மனப்பாரம் உண்டா? மனக் கசிவு உண்டா? கண்ணீரே என் காணிக்கையா? கண்ணீரில் பெருகும் அன்பு விலையேறப்பெற்ற அமுதம் அதில் கமழும் வாசனை உன்னதமானது. உயர்வானது உண்மையானது தூய்மையானது.

மரியாள் இயேசுவிற்கு வரப்போகும் மரணத்தை உணர்ந்து செய்த அன்புச்செயல் இது. தனது அன்பைக் காட்ட இனியொரு தருணம் வராது என்பதை உணர்ந்து செய்த செயல் இது. ஒருவர் மரணிக்கும் முன்பு நாம் எமது சொல்லால், செயலால் அவருக்கு அன்புகாட்ட வேண்டும். அவர் மரித்த பின்பு அதற்கான சந்தர்ப்பம் எமக்கு வரவே வராது அவர் இறந்த பின் அன்பு காட்டத் தவறிவிட்டோம் என்று வெந்து, நொந்து, கண்ணீர்விட்டுக் கதறி எந்தப்பிரயோசனமும் இல்லை. பிறர் வாழும் போது அவருக்கு அன்பு செய்வோம்.

வி.பி.தனேந்திரா.

# வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ........................................

முகவரி : ........................................

பிறந்த ஆண்டு : ........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

........................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

## வரலாற்றில் முதல் முறையாக பாப்பரசர்கள் சந்திப்பு



பதவி விலகிய பாப்பரசர் ஆண்டவர் 16 ஆம் பெனடிக்ட்டை புதிய பாப்பரசர் பிரான்சிஸ் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.

600 ஆண்டு வரலாற்றில் 2 பாப்பரசர்கள் சந்திப்பது இதுவே முதல் முறை. உலகம் முழுவதும் உள்ள கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவராக பாப்பரசர் உள்ளார். இந்தப் பதவியில் இருந்த 16 ஆம் போப் பெனடிக்ட், கடந்த மாதம் 28 ஆம் திகதி பதவி விலகினார். முதுமை காரணமாக பாப்பரசருக்குரிய பணிகளை தம்மால் மேற்கொள்ள முடியவில்லை என்று அவர் தெரிவித்தார்.

கடந்த 600 ஆண்டு கால வரலாற்றில் ஒரு பாப்பரசர் பதவி விலகுவது இதுவே முதல்முறை. இதன்பின், புதிய பாப்பரசராக பிரான்சிஸ் தேர்வு செய்யப்பட்டு, கடந்த சில நாட்களுக்கு முன் அவர் பொறுப்பேற்றார்.

தெற்கு ரோமில் பாப்பரசர் கோடைகாலத்தில் தங்கும் காஸ்டெல் கன்டோல்போ மாளிகை உள்ளது. இங்குதான் பழைய பாப்பரசர் பெனடிக்ட் தற்போது வசித்து வருகிறார்.

இந்நிலையில், வாடிகனில் இருந்து ஹெலிகொப்டர் மூலம் பாப்பரசர் பிரான்சிஸ் நேற்று முன்தினம் காஸ்டெல் கன்டோல்போவுக்கு வந்தார். அங்கு பாப்பரசர் பெனடிக்கைச் சந்தித்து நீண்ட நேரம் பேசினார். இருவரும் சேர்ந்து மதிய உணவு சாப்பிட்டனர். அவர்கள் சந்திப்பை முன்னிட்டு, காஸ்டெல் கன்டோல்போ சதுக்கத்தில் ஏராளமான மக்கள் கூடியிருந்தனர்.


## பாகிஸ்தானுக்கு உதவுகிறது சீனா;

## உருவாகிறது மூன்றாவது அணு உலை

சீனாவின் உதவியுடன் பாகிஸ்தானில் மூன்றாவது அணு உலை கட்டப்பட்டு வருவதாக அமெரிக்காவிலிருந்து வெளியாகும் நாளிதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் ஏற்கனவே 2 அணு உலைகள் உள்ளன. இந்நிலையில் தற்போது 3 ஆவது அணு உலை கட்டப்பட்டு வருகிறது.

இதற்கு சீனா இரகசியமாக



தொழில்நுட்ப உதவிகளை செய்து வருவதாக அமெரிக்காவின் உளவுத்துறை குற்றம் சுமத்தியுள்ளது.

பாகிஸ்தான் அணுசக்தி கமிஷனின் பிரதிநிதிகள் கடந்த பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதிக்குள் சீன தலைநகர் பெய்ஜிங்கில் அணு சக்தித்துறை பிரதிநிதிகளைச் சந்தித்து இரகசிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அதில் சாஷ்மாவில் 1000 மெகாவாட் மின் உற்பத்தி உலையை நிறுவுவது என திட்டமிட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதற்கு முன்பு அங்கு 2 அணு உலைகளும் சீன தொழில் நுட்பத்தில்தான் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.


இதன் மூலம் சர்வதேச அணு ஆயுத எதிர்ப்பு ஒப்பந்தத்தை சீனா மீறியுள்ளது என்றும் அமெரிக்கா கூறியுள்ளது.

ஆனால் அமெரிக்காவின் குற்றச்சாட்டுக் குறித்து சீனாவோ, பாகிஸ்தானோ எந்த வித பதிலும் அளிக்கவில்லை. அதனை உறுதிபடுத்தவும் இல்லை.

அதே சமயம் அணு ஆயுதங்களையோ, தொழில் நுட்ப உதவிகளையோ வேறு எந்த நாட்டிற்கும் விற்பனை செய்யவும் இல்லை என்று சீனாவில் இருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலகச் செய்திகள்

## தினமும் 1800 குழந்தைகள் உயிரிழப்பு ; அசுத்தமான தண்ணீரால் அவலம்



1993 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் பொது சபை மார்ச் 22 ஆம் திகதியை உலக தண்ணீர் தினமாக அறிவித்தது.

இந்தத் தினத்தை அனுஷ்டித்துக் கொண்டிருக்கும் நிலையில் ஐக்கிய நாடுகளின் குழந்தைகளுக்கான நிதி நிறுவனமான யுனிசெப் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.


உலக அளவில் ஒரு நாளுக்கு 5 வயதுக்குட்பட்ட 2000 குழந்தைகள் இறக்கின்றனர். இவர்களில் 1800 குழந்தைகள் வயிற்றுப்போக்கால் இறக்கின்றனர். அசுத்தமான தண்ணீரும், சுகாதாரமற்ற சூழ்நிலையுமே இதற்குக் காரணமாகும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுனிசெப் தலைவர் சஞ்சய் விஜேசேகர கூறியதாவது,

பாடசாலைப் பேருந்து விபத்துக்குள்ளாகி அனைத்துக் குழந்தைகளும் இறந்து போனால், அதுவும் தினமும் நடைபெற்றால் மட்டுமே நாம் அதனைக் கவனத்தில் கொள்வோம்.

ஆனால் அசுத்தமான தண்ணீர் மற்றும் சுகாதாரமற்ற சூழ்நிலையால் இந்த இறப்புகள் ஒவ்வொரு நாளும் உலகம் முழுவதும் நடந்து கொண்டிருக்கிறது. இதை யாரும் கண்டு கொள்வதில்லை என்பதாகும்.

## ஆயுததாரிகள் தாக்குதல்; நைஜீரியாவில் 25 பேர் பலி



நைஜீரியாவின் கிழக்குப் பகுதி கேமரூன் நாட்டு எல்லையோரம் அமைந்துள்ள கேன்யெ நகரில் ஆயுதம் தாங்கிய ஒரு கும்பல் பல இடங்களில் தாக்குதல் நடத்தியது.

பொலிஸ் நிலையம், சிறைச்சாலை, வங்கி, மதுபான அரங்கு என பல இடங்களில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் குறைந்தது 25 பேர் கொல்லப்பட்டனர்.

இது இஸ்லாமிய சட்டத்தை நடைமுறைபடுத்த வேண்டி அரசுக்கு எதிராக போராடி வரும், 'போகோ ஹரம்' என்ற தீவிரவாதிகளின் வேலையாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

மேலும் கானோ நகரில் தற்கொலைப்படையினர் கட்டியிருந்த வெடிப்பொருட்கள் முன்கூட்டியே வெடித்ததில் இரு தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

கானோவில் கடந்த செவ்வாய்க் கிழமை அன்று நடந்த தாக்குதலில் 20 பேர் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## நாடு திரும்பினால் கொல்லப்படுவார் முஷாரப்புக்கு தலிபான் எச்சரிக்கை



பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்விஷ் முஷாரப் மீண்டும் நாடு திரும்பினால் கொல்லப்படுவார் என தலிபான்கள் எச்சரித்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதியை கொல்வதற்கு தற்கொலை குண்டுதாரிகள் ஸ்னைப்பர் ரக நவீன ஆயுதங்களை தாம் பயன்படுத்தவுள்ளதாக இணையத்தளத்தில் தகவல் வெளியிட்டுள்ளனர். தலிபான்கள் 5 வருடங்களின் பின்னர் மீண்டும் நாடு திரும்புவதற்கு முஷாரப் தயாராகிவரும் நிலையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மீண்டும் நாடு திரும்பும் நோக்கில், முஷாரப்பினால் கோரப்பட்டிருந்த முன் பிணை நேற்று முன்தினம் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டது.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோவின் கொலை தொடர்பில் முஷாரப்புக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தாம் கைதுசெய்யப்படலாம் என்ற அச்சத்தில் முன்னாள் ஜனாதிபதி மு[illegible] பிணைகோரியிருந்தார்.

## கட்டுப்பாட்டுக் கோபுரங்களுக்கு அமெரிக்காவில் மூடு விழா



அமெரிக்காவில் நாடு முழுவதிலும் உள்ள 147 விமான நிலைய கட்டுப்பாட்டுக் கோபுரங்கள் மூடப்படுகின்றன.

சிக்கன நடவடிக்கையாக இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. அமெரிக்க அரசு துறைகளில் வரும் மார்ச் 1 ஆம் திகதி முதல் ரூ.4.59 இலட்சம் கோடி அளவுக்கு செலவுகளைக் குறைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக ஏப்ரல் 7ஆம திகதி முதல் 149 விமான நிலையக் கட்டுப்பாட்டு கோபுரங்கள் மூடப்படுகின்றன. இதன் மூலம் ஆண்டுக்கு ரூ.3,439 கோடி செலவு மிச்சமாகும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## அமெரிக்க ஜனாதிபதி 4 நாள் சுற்றுப்பயணம்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா 4 நாள்கள் பயணமாக இஸ்ரேல், பலஸ்தீனம், ஜோர்டான் ஆகிய நாடுகளுக்கு சென்றிருந்தார்.

அங்கு ஜோர்டானின் பெட்ரா என்ற நகரத்தில் உள்ள 2000 வருடங்கள் பழமையான மலைக்குகையொன்றையும் சுற்றிப்பார்த்து, நான்கு நாட்கள் பயண நிறைவில் நாடு திரும்பவுள்ளார்.

# சாரதி அனுமதிப் பத்திரம் புதுப்பித்தல் வடக்கு மக்கள் பெரும் அவதி

(யாழ்ப்பாணம்)

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் அண்மையில் வெளியிட்டுள்ள அறிவித்தலின்படி ஸ்மாட் காட் சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் வெளியான அறிவுறுத்தலுக்கு அமைய 'ஒன்லைன்' சேவை தற்போது யாழ். செயலகத்தில் இருப்பினும் அதன்மூலம் 2005 ஜனவரி - 2009 செப்ரெம்பர் வரையான காலப்பகுதியில் உள்ள கணனி சாரதி அனுமதிப் பத்திரங்களை பரிசோதித்து இந்த ஸ்மாட் காட்டை பெற்றுக்கொள்ள முடியும் என்று யாழ். செயலக மோட்டார் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தவிர 2000 ஜனவரி முதல் - 2004 டிசம்பர் வரையிலும் 2000 ஆம் ஆண்டுக்கு முன்னரும் சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றவர்களின் விபரங்களை இந்த ஒன்லைன் சேவை மூலம் பெறமுடியாது என்றும் இவற்றை புதுப்பித்துக் கொள்ள வேரஹெர, குருநாகல், கம்பஹா, அம்பாந்தோட்டை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்ட செயலகங்களில் உள்ள மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திற்கே செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து இக்காலப் பகுதியைக் கொண்ட சாரதி அனுமதிப்பத்திரங்களைக் கொண்டுள்ளவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இங்கிருந்து அநுராதபுரம் சென்றுவர ஏற்படும் செலவுகள், காலவிரயம் மற்றும் பல்வேறு இடையூறுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது. இச்சேவையினை யாழ். செயலகத்தில் பெறமுடியாமையே இதற்குக் காரணம். எனவே இது சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் விரைந்துசெயற்பட்டு இந்த "ஒன்லைன்" சேவையை யாழ். செயலகத்திலும் பெற வழி அமைத்துத்தர வேண்டும் என மக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர். இச்சேவையினை பெறுவதில் வடபகுதியில் உள்ள எல்லா மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் இப்பாதிப்புக்கும், இடையூறுக்கும் ஆளாவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இச்சேவையினை வடக்கிற்கு விஸதரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுககப்பட்டுள்ளது. (இ)

# மக்கள் விடுதலை முன்னணியின் வீழ்ச்சி பதவி இழக்கிறார் சோமவன்ச?

நீண்ட காலமாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவராக இருந்து வரும் சோமவன்ச அமரசிங்கவை அப்பதவியிலிருந்து நீக்கிவிட்டு புதிய ஒருவரை அப்பதவியில் அமர்த்துவதற்கான நடவடிக்கைகளை மக்கள் விடுதலை முன்னணி மேற்கொண்டு வருவதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. மக்கள் விடுதலை முன்னணியின் புதிய தலைவர் ஒருவரை நியமிப்பது தொடர்பான கலந்துரையாடல்களும் விவாதங்களும் தற்பொழுது கட்சியின் உயர்பீடத்தில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சோமவன்ச அமரசிங்க நீண்ட காலமாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவராக செயற்பட்டு வந்துள்ளார். அவர் தற்போது வயதாகியுள்ளதாகவும் அடுத்த தலைமுறையினருக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்பதற்காகவுமே புதிய தலைமைத்துவம் தொடர்பாக கலந்துரையாடி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மைக்காலமாக மக்கள் விடுதலை முன்னணியில் ஏற்படும் வீழ்ச்சியே இந்த திடீர் தீர்மானத்துக்குக் காரணம் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

மக்கள் விடுதலை முன்னணியின் புதிய தலைவர் பதவிக்காக அதன் செயலாளர் ரில்வின் சில்வா, அனுர சேனாநாயக்க மற்றும் விமல் ரத்நாயக்க ஆகியோரின் பெயர்கள் பரிசீலணையில் இருப்பதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவத்தன.

# வீதி ஓரங்களில் கொட்டப்படும் கழிவுப் பொருட்களால் சீர்கேடு

(கரணவாய்)

கரணவாய் பிரதேசத்திலுள்ள உள்ளூர் கிராம வீதிகளின் ஓரங்களில் கொட்டப்படும் கழிவுப் பொருட்களால் அப்பகுதியால் போக்குவரத்தை மேற்கொள்வோர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக கரவெட்டி விக்னேஸ்வரா வீதி கலட்டிக்கு திரும்பும் வீதி ஆகிய வீதிப்பகுதிகளில் இவ்வாறு கழிவுகள் கொட்டப்பட்டு வருவதாக குற்றம் சாட்டப்படுகிறது.

இவ்வீதிகளின் ஓரங்களில் இறைச்சிக்காக வெட்டப்படும் விலங்குகளின் கழிவுடன் மரக்கறிக்கழிவுகள் உள்ளிட்ட கழிவுப் பொருட்களை உரப்பைகளில் கட்டி வந்து போடப்படுவதால் அவற்றை நாய்கள் பறவைகள் சேர்ந்து சேதப்படுத்தி சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்துகின்றன.

எனவே இவ்வாறான சுகாதார சீர்கேட்டை தடுக்க, கரவெட்டி பிரதேச சபை கழிவுகளை வீதியில் கொட்டும் மக்களுக்கு அறிவுறுத் தல்களை வழங்கவேண்டும் எனவும், கழிவுப் பொருட்களை அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் வீதியால் பயணிக்கும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (18)

## சுயாதீன...

பாத்திரத்தை வெளிப்படுத்திவிடும் இப்போரின் இறுதிக்கட்டத்தில் சுமார் 40,000 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபை கணிப்பிட்டுள்ளது. இது குறித்து விசாரணைகளை நடத்தவேண்டும் என ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் கடந்த வாரம் சர்வதேச சமூகம கோரிக்கை விடுத்துள்ளது,நாஜிகளுக்கு எதிரான நூரன்பேர்க் விசாரணை மற்றும் கம்போடியா, ருவான்டா, யூகோஸ்லாவியா, சியரா லியோன், லெபனான் போன்ற நாடுகளில் இடம்பெற்ற படுகொலைகள் குறித்து ஐ.நா. மேற்கொண்ட போர்க்குற்ற விசாரணைகளின் போது, அதற்குப் பொறுப்பான உயர்மட்ட அரசியல் மற்றும் படை அதிகாரிகள் நீதியின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட்டுள்ளனர, அதுபோன்று இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டால், படைத்தரப்பின் பிரதம தளபதி என்ற வகையில் விசாரணை செய்யப்படுவோரின் பட்டியலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முதலிடத்திலும், கோத்தாபய ராஜபக்ஷ இரண்டாவது இடத்திலும் இருப்பார்கள், அதன்பின் கூட்டுப்படைகளின் தலைவர் எயார் மார்சல் டொனால்ட் பெரேரா, படைத்தளபதி சரத் பொன்சேகா, கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட, விமானப்படைத் தளபதி றொசான் குணதிலக ஆகியோரும் விசாரணைகளுக்கு உள்ளாகக்கூடும், அத்துடன், இப்போரின் போது படைத்தரப்பின் 53 ஆவது பிரிவின் தளபதியாக இருந்த பிரிகேடியர் கமால் குணரத்ன, 55 ஆவது பிரிவின் தளபதியாக இருந்த பிரிகேடியர் பிரசன்ன சில்வா, 57 ஆவது பிரிவின் தளபதியாக இருந்த பிரிகேடியர் ஜெகத் டயஸ், 58 ஆவது பிரிவின் தளபதியாக இருந்த பிரிகேடியர் சவேந்திர சில்வா, 59 ஆவது பிரிவின் தளபதியாக இருந்த பிரிகேடியர் நந்தன உடவத்த, அதிரடிப்படை பிரிவு 1 இன் தளபதியாக இருந்த பிரிகேடியர் றோகண பண்டார, அதிரடிப்படை பிரிவு 2 இன் தளபதியாக இருந்த பிரிகேடியர் சத்யப்பிரிய லியனகே, அதிரடிப்படை பிரிவு 8இன் தளபதியாக இருந்தவரும், பிரபாகரனைக் கொன்றவருமான கேணல் ஜிவி ரவிப்பிரிய ஆகியோரும் இந்த விசாரணைகளுக்கு உள்ளாவார்கள்,போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பிலான விசாரணைகளில் திருப்தி கொள்ளும் வரை சுயாதீனமானதும், நம்பகரமானதுமான விசாரணை தொடர்பில் சர்வதேச சமூகம் கோரிக்கை விடுக்கும் என்றும் புதுடில்லி ஆய்வாளர் தெரிவித்துள்ளார் என இக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொழிற்சங்க...

2009/25 என பல சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி சம்பள நிலுவைகள் மற்றும் பதவியுயர்வுகள் வழங்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

வடமாகாண ஆசிரியர்களுக்கு பல இலட்சம் ரூபா சம்பள நிலுவைகள் வழங்கப்படவுள்ளன. சம்பள நிலுவைகள் மற்றும் பதவியுயர்வுகள் சம்பந்தமாக வடமாகாண கல்வி அமைச்சோ, 12 வலய கல்வி அலுவலகங்களோ எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

அதனால், கடனுதவிகள், சம்பள உயர்வுகள் இல்லாமையினால், இதனால் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் ஏனைய ஆசிரியர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றார்கள் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

அதனடிப்படையில், வடமாகாண கல்வி அமைச்சினால் ஆசிரியர்களுக்கான நிலுவைச் சம்பளங்கள் மற்றும் பதவியுயர்வுகனை மேற்கொள்வதற்கான செயற்திட்டங்களை நடை முறைப்படுத்தாவிட்டால் எதிர்வரும் காலங்களில் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் கூறினார். (25)

## சுதந்திரமான...

வலியுறுத்துகிறது. இந்த விடயத்தில் இலங்கை அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுக்குமென்று நாம் எதிர்பார்க்கின்றோம். ஆனால் அப்படி அது செய்ய விரும்பாவிட்டாலோ அல்லது அதற்கு செய்ய முடியாமல் போனாலோ சர்வதேச சமூகம் ஒரு சர்வதேச பொறிமுறையை அங்கு செயற்படுத்துவது குறித்து கவனம் செலுத்தும்.

ஆகவே ஒரு சொந்தமான, சுதந்திரமான, நம்பகத்தன்மையுடைய விசாரணையை தம்மால் நடத்த முடியும் என்பதை உறுதி செய்யவேண்டிய அழுத்தம் இப்போது இலங்கைக்கு உள்ளது.

மனித உரிமைகள் என்பதைவிட அமெரிக்காவுக்கு இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்ததில் உள்நோக்கம் இருப்பதாக இலங்கை அரசாங்கம் குற்றஞ்சாட்டுகிறதே என்ற கேள்விக்குப் பதிலளித்த அவர், இலங்கைத் தீவில் அமைதியையும், நல்லிணக்கத்தையும், பொறுப்புக் கூறலையும் கொண்டுவருவது தான் எங்கள் நோக்கம் என்றும், இலங்கை மக்களுடனான எங்கள் உறவை தொடர்ச்சியாக கட்டியெழுப்புவதும் அதில் அடங்கும் என்றும், அதனைவிட தங்களுக்கு வேறு எந்தவிதமான நோக்கமும் கிடையாது.

அந்தப் பிராந்தியத்தில் கேந்திர முக்கியத்துவம் குறித்து தங்களுக்கு அக்கறை, ஆர்வம் உள்ளது. பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை, கடற்போக்குவரத்து பாதுகாப்பு, அதுபோன்ற பல விடயங்கள் குறித்தும் அந்தப் பிராந்தியத்தில் எங்களுக்கு அக்கறை உள்ளது என்றும் அவர் கூறினார்.

இலங்கையை, அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகம், இந்தத் தீர்மானத்தின் மூலம் பிளவுபடுத்த முயற்சிப்பதாக இலங்கை அரசாங்கத் தரப்பினரால் குற்றஞ்சாட்டப்படுவதையும் மறுத்துள்ளார்.

அமெரிக்காவும் , சர்வதேச சமூகமும் இலங்கையை மீண்டும் ஒன்றுபடுத்த விளைவதாகவே தான் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## நவநீதம்பிள்ளையின்...

இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி கலாநிதி பாலித கோஹன்ன இந்தத் தகவலை தெரிவித்துள்ளார்.

இந்த முறைப்பாடு சில தினங்களுக்கு முன்னர் எழுத்து மூலம் உத்தியோகபூர்வமாக ஐ.நா. செயலருக்கு வழங்கப்பட் டது எனக் குறிப்பிட்ட அவர், இது விடயத்தில் ஐ.நா. செயலர் உரிய நடவடிக்கைகளை எடுப்பாரென நம்புவதாகவும் தெரிவித்தார்.

இலங்கைக்கு வருமாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு பலதடவைகள் அரசாங்கம் அழைப்பு விடுத்து ள்ள நிலையில், அவர் அதனைத தவிர்த்து வருவதும், இலங்கை நிலைமைகள் குறித்து தவறான ஆதாரங்களை வைத்துக் கொண்டு அவர் செயற்படுவதும் சர்வதேச ரீதியில் இலங்கைக்கு மோசமான விளைவுகளை தந்து விடலாம் என்பதாலேயே இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் கலாநிதி கோஹன்ன மேலும் கூறியுள்ளார்.

## இலங்கைக்கு...

கலந்துரையாடியதன் பின்னர், முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை செயற்படுத்தும் விதம் குறித்து ஆராயப்படவுள்ளது.

அத்துடன் அந்தந்த நாடுகளின் நிலைப்பாட்டை மாற்றுவதற்கான இயலுமை தொடர்பில் தெளிவூட்ட எதிர்பார்த்துள்ளதாகவும் ரொட்னி பெரேரா மேலும் தெரிவித்துள்ளார்.

## தமிழக...

அரசியல் போட்டிநிலைமையே காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்திய மத்திய அரசாங்கம் இலங்கைத் தமிழர்களுக்காக பல்வேறு நிதி வழங்கல்களை செய்துள்ளது.

எனினும் தமிழகத்தில் இருந்து இதுவரையில் எந்த உதவிகளும் வழங்கப்படவில்லை.

இதேவேளை தடுப்புக் காவலில் உள்ள தமிழர்கள் துன்புறுத்தப்படுவதாக வெளியான செய்திகளையும் அவர் மறுத்துள்ளார்.

தாம் மூன்று மாதங்கள் தடுப்பில் இருந்தபோதும், தமக்கு எதிராக எந்த துன்புறுத்தலும் இடம்பெறவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்த நிலையில் உள்ள தமிழர்களும் இலங்கைத் தமிழர்களின் பெயரைச் சொல்லி நிதி சேகரிப்பை மேற்கொண்டுள்ளதாக தயா மாஸ்ரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# ஜெனிவா தீர்மானத்தை ஏற்பது தற்கொலைக்கு சமனானது

## எச்சரிக்கிறார் குணதாச சமரசேகர



(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை ஏற்பதானது தற்கொலை செய்து கொள்வதற்குச் சமனான செயலாகும். எனவே, அந்தத் தீர்மானத்தை அரசாங்கம் உடனடியாகக் குப்பைத் தொட்டியில் போட வேண்டும் என்று சிங்கள தேசிய அமைப்புகளின் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடைக்கான யோசனையை அமெரிக்கா பாதுகாப்புச்சபையில் முன் வைத்தாலும் அதை வீட்டோ அதிகாரம் கொண்ட சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் தோற்கடிக்கும் என்று அந்த ஒன்றியத்தின் உறுப்பினரும், தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவருமான குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தனது கட்டுப்பாட்டின் கீழுள்ள நிறுவனங்களுக்கு இலங்கையுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள வேண்டாம் என அமெரிக்கா அழுத்தங்களைப பிரயோகிக்கலாம் என்றும் அவர் கூறினார்.

அதேவேளை, எத்தனை தீர்மானங்கள் நிறைவேறினாலும் பரவாயில்லை, தனது நிலைப்பாட்டில் அரசாங்கம் உறுதியாக இருக்வேண்டும். தனக்கு என்ன தோன்றுகிறதோ அதைத் துணிவுடன் மகிந்த ராஜபக்ஷ அரசு செய்யவேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் இந்த அரசு சர்வதேசத்திடம் அடிபணியக்கூடாது என றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# முன்னாள் பிரதம நீதியரசர் பணி நீக்கம் இந்திய சட்டத்தரணிகள் சங்கம் கவலை



முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பணி நீக்கம் செய்யப்பட்டமை குறித்து இந்திய சட்டத்தரணிகள் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்து, சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நியாயமான விசாரணை நடாத்தாமல் ஷிராணி பண்டாரநாயக்கவை பணி நீக்கம் செய்ப்பட்டதாகக் குற்றம் சுமத்தியுள்ளனர்.

ஷிராணி பண்டார நாயக்க பணி நீக்கம் செய்யப்பட்டமை பெரும் ஏமாற்றமும் அதிருப்தியும் அளிப்பதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

சட்டம், ஒழுங்கு மற்றும் நீதிமன்றின் சுயாதீனத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இந்திய சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

# கிறிஸ்தவ சபைமீது பிக்குகள் தாக்குதல்

கொழும்புக்கு புறநகரான கொட்டாவை - ஹைலெவல் வீதியில் உள்ள கிறிஸ்தவ பெந்தகோஸ் சபையின் பிரார்த்தனை மண்டபம் ஒன்றினுள் நுழைந்த பௌத்த பிக்குகளின் குழு ஒன்று அங்கு தாக்குதலை நடத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து குறித்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டிருந்தது. பிரதேச மக்களின் உதவியுடன் குறித்த பிக்குகள் குழு அந்தச் சபையினை சுற்றி வளைத்தது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார்தெரிவிக்கையில் நிலைமை கட்டுப்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

வெவ்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களை பலவந்தமாக மத மாற்றத்துக்கு உட்படுத்துவதாக, குறித்த பிரதேசத்தில் உள்ள பெந்த கோஸ் சபையின் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இதனையடுத்து இந்த குழப்ப நிலை ஏற்பட்டதாகத் தெரிவித்தனர்.

# தென்னிந்திய நடிகர் சங்கம் ஏப்ரல் 2இல் உண்ணாவிரதம்



இலங்கை அரசாங்கத்தைக் கண்டித்து தென்னிந்திய நடிகர் சங்கத்தின் சார்பில் எதிர்வரும் ஏப்ரல் 2ஆம் திகதி சென்னையில் உண்ணாவிரதப் போராட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது. இதில் முன்னணி நடிகர்களான ரஜினிகாந்த், கமலஹாசன் உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர்.

ஐ.நா. மனித உரிமை கவுன்சில் கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் வெற்றிபெற்றது. ஆனால் இந்தத் தீர்மானத்தால் எந்தப் பயனும் இல்லை. அது நீர்த்துப்போன ஒன்று என்று பலர் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசுக்கு எதிராக தமிழகத்தில் கல்லூரி மாணவர்கள், வழக்கறிஞர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்நிலையில் இலங்கை அரசைக் கண்டித்து கடந்த செவ்வாய்க்கிழமை தமிழ்நாடு திரைப்பட இயக்குநர் சங்கத்தின் சார்பில் சென்னையில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

இந்நிலையில், எதிர்வரும் ஏப்ரல் 2ஆம் திகதி தென்னிந்திய நடிகர் சங்கத்தின் சார்பில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. சென்னை தியாகராயநகர் அபிபுல்லா வீதியில் உள்ள நடிகர் சங்க வளாகத்தில் நடக்கும் இந்தப் போராட்டத்தில் ரஜினிகாந்த், கமலஹாசன் உள்ளிட்ட அனைத்து நடிகர், நடிகைகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

உண்ணாவிரதத்தையொட்டி வரும் 2ஆம் திகதி படப்பிடிப்புகள் அனைத்தும் இரத்துச்செய்யப்படுகிறது. வெளியூரில் நடக்கும் படப்பிடிப்புகளையும் இரத்துச் செய்துவிட்டு நடிகர், நடிகைகள் அனைவரும் உண்ணாவிரதத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

# தீர்மானத்தை ஏற்காவிடின் நாடு தனிமைப்படுத்தப்படும்

## என்கிறார் ஜயலத் எம்.பி.



ஜெனிவா தீர்மானத்தை அரசாங்கம் ஏற்காவிட்டால் சர்வதேச ரீதியில் நாடு தனிமைப் படுத்தப்படும் அபாயமுள்ளது. வரட்டுக் கௌரவத்தை விடுத்து இனியாவது சர்வதேசத்துடன் ஒத்துழைத்துச் செயற்பட அரசு முன்வரவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கை ஐ.நா. உறுப்புரிமை நாடாகும். எனவே, மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தை அரசு ஏற்கவேண்டும். இல்லையேல் அது நாட்டுக்குப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

அதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஏற்று அதன் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான பொறிமுறையை அரசு வகுக்கவேண்டும

இதனைவிடுத்து தொடர்ந்தும் சண்டியனைப்போல் அரசு செயற்படுமானால் எமது நாட்டுக்குத்தான் சர்வதேச ரீதியில் அவப்பெயர் ஏற்படும்.

ஜெனிவா தீர்மானத்தை ஏற்கமுடியாது என அரசாங்கம் சொல்லுமானால் அதற்கு மூளைக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது என்பதையே அது எடுத்துக்காட்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பெண்களுக்கான பிரச்சினை; அழையுங்கள் 1938

சமூகத்தில் பெண்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் குறித்து உடனடியாக முறைப்பாடு செய்வதற்கு விசேட தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பெண்கள் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் 1938 என்ற இலக்கத்திற்கு உடனடியாகத் தொடர்பு கொண்டு முறைப்பாடு செய்ய முடியும் என சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ் இலக்கம் மூலம் 24 மணிநேரமும் தொடர்பு கொண்டு முறைப்பாடு செய்யக் கூடிய அதேவேளை தமிழ், சிங்களம், ஆங்கிலம் உள்ளிட்ட மூன்று மொழிகளிலும் தொடர்பாடலை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

# சுபியானுக்கு எதிராக யாழில் சுவரொட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை உறுப்பினர் அபூ - சுபியானுக்கு எதிரான சுவரொட்டிகள் யாழ். நாவாந்துறை பகுதியில் ஒட்டப்பட்டுள்ளன. யாழ். முஸ்லிம்களே இடைத்தரகர்களிடம் ஏமாந்துவீடாதீர்கள்: சுயநல சுயேட்சை அரசியல்வாதி சுபியானின் முதலைக் கண்ணீர் என தலையங்கம் இடப்பட்டுள்ளது.

அத்துடன் யாழ். முல்லிம்களுக்கு தொல்லை கொடுக்காத காலமே கிடையாதென்றும் முஸ்லிம் வட்டாரத்தில் நடைபெறும் எல்லா நல்ல காரியங்களையும் குழப்பும் ஒரே ஆற்றல் உடையவன் இவன் மட்டும் தான் என்றும் அந்த சுவரொட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது (25)

# சர்வதேச சவாலுக்கு முகம் கொடுக்க புத்திக்கூர்மையை பயன்படுத்த வேண்டும்

## – கூறுகிறார் லால் காந்த

சர்வதேச சவால்களுக்கு உடலால் அன்றி, புத்திக் கூர்மையுடன் முகம்கொடுக்க வேண்டிய தருணம் வந்துள்ளதாக ஜே.வி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

தற்போது பாதுகாப்பு அமைச்சின் பொறுப்பு நிறைவடைந்துள்ளதாகவும், வெளிவிவகார அமைச்சின் கடமைகளே தற்போது நிறைவேற்றப்பட வேண்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற அகில இலங்கை வங்கி சேவையாளர் சங்கத்தின் 8 ஆவது மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே கே.டி.லால்காந்த இந்தக் கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

இலங்கையினுள் வேறொரு தனியான இராச்சியத்தை ஸ்தாபிப்பதற்கான முயற்சிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. அதில் பாரிய பங்கினை தென்னிந்தியாவின் ஒரு அரசியல் தரப்பினர் வகிக்கின்றனர்.

இதனடிப்படையிலேயே மனிதவுரிமைகள் பேரவையில் தனி ஈழ கோரிக்கையை நோக்காக கொண்டு பிரேரணை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 மார்ச் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.